REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஜனவரி 20 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 17 | Friday 20, January, 2023 | 20பக்கங்கள் | 50/-

## கல்முனைக்கு வழங்கப்பட்ட தடை உத்தரவு நீடிப்பு



கல்முனை மாநகர சபைக்கான உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வதைத் தடைசெய்து பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை, தீர்ப்பு வழங்கப்படும் வரை நீடிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

06

# முஸ்லிம் சமூகம் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## சமூக நீதிக்கான ஆணைக்குழுவுடன் கைகோர்க்குமாறு ஜனாதிபதி அழைப்பு

**அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் 100ஆவது ஆண்டு நிறைவு விழாவில் ஜனாதிபதி அறைகூவல்**

முஸ்லிம் சமூகம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சமூக நீதிக்கான ஆணைக்குழுவுடன் கைகோர்க்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முஸ்லிம் சமூகத்துக்கு அழைப்பு விடுத்தார்.

75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு பலம் வாய்ந்த உண்மையான இலங்கையராக ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து சமூகங்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

எந்தவொரு சமயமும் நவீன உலகுடன் இணைந்து செல்ல வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி, எந்த சமயமும் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் சமயமல்ல எனவும் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (19) நடைபெற்ற அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் 100ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றுகையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்இய்த்துல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம் றிஸ்வியினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முத்திரையொன்று வெளியிடப்பட்டதுடன் ஊடகத்துறை

06



## ஜீவன் தொண்டமான், பவித்ரா அமைச்சர்களாக பதவிப்பிரமாணம்





அமைச்சரவை அந்தஸ்துள்ள இரண்டு அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் நேற்று (19) பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

வனஜீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சியும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சராக ஜீவன் தொண்டமானும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.



CTB ஊழியர்கள் மீதான தாக்குதல் சம்பவம்

## குற்றவாளிகள் இனங்காணப்பட்டதும் வீதி அனுமதிப்பத்திரம் 02 வருடங்களுக்கு ரத்து

03

## சிங்கள சினிமாவின் பிரபல இயக்குநர் சுமித்ரா பீரிஸ் மறைவு

**சபையில் பிரதமர், சஜித், பந்துல, விதுர அனுதாபம்**

லோரன்ஸ் செல்வநாயகம்



இலங்கை சினிமாவின் தனித்துவமான ஒளிப்பதிவாளரான கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் மனைவியும் மூத்த திரைப்பட இயக்குநருமான சுமித்ரா பீரிஸ் தனது 88 ஆவது வயதில் நேற்று காலமானார்.

இவரது மறைவு குறித்து பாராளுமன்ற அமர்விலும் நேற்று பிரதமர், ஊடகத் துறை அமைச்சர், கலாசார அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அஞ்சலி செலுத்தி உரையாற்றினர். "இலங்கையின் மிகப்பெரிய கலை பொக்கிஷம் ஒன்று நம்மை விட்டு இன்று பிரிந்து இருக்கிறதென அனைவரும் புகழஞ்சலி செலுத்தினர்.

**பிரதமர் தினேஷ் குணவர்தன**

சர்வதேச சினிமா இயக்குனர், காலஞ்சென்ற லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் மனைவியான சுமித்ரா பீரிஸ், நாட்டின் கௌரவத்துக்குரிய திரைப்பட இயக்குநராவார் என குறிப்பிட்ட பிரதமர் தினேஷ் குணவர்தன, சர்வதேச கௌரவத்திற்கு பாத்திரமான விருதுகளை நாட்டுக்கு கொண்டு வந்த சுமித்ரா பீரிஸின் மறைவு தொடர்பில் அரசாங்கத்தின் சார்பில் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

**அமைச்சர் பந்துல குணவர்தன**

திரைப்படத் துறையை நேசித்து, இலங்கை சினிமாவின் உயர்தரம் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பில் தமது வாழ்நாள் முழுவதும் திறமையையும், நிதியையும், வழங்கி அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ள திரைப்பட இயக்குநர் மறைந்த சுமித்ரா பீரிஸுக்கு நாட்டு மக்களின் கௌரவம் உரித்தாவதாக என ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

06

## கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா கைகொடுக்கும்

**ஆதரவளிப்பதாக IMFக்கு அறிவித்தது**



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதாக சர்வதேச நாணய நிதியத்திற்கு இந்தியா தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர் கடன் உதவியை பெறுவதற்கான தீவிர முயற்சிகளில் இலங்கை ஈடுபட்டுள்ள நிலையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன்

06

நாட்டின் கடல்வளத்துக்கும் கடற்றொழிலாளருக்கும் அச்சுறுத்தல்

## இந்திய மீனவரின் சட்டவிரோத வருகை செயற்பாடுகளை கட்டுப்படுத்தவில்லை

**அமைச்சர் டக்ளஸிற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்**



கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் கடற்றொழில்சார் அமைப்புக்கள் இரண்டின் பிரதிநிதிகளினால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் கடல் வளத்துக்கும் கடற்றொழிலாளர்களுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும், இந்திய

06

அரச நிதி நிலைமையை

## தேர்தல் செலவு மேலும் பாதிப்புக்கு உட்படுத்தும்

**நிதி அமைச்சு சுட்டிக்காட்டு**

2023ஆம் ஆண்டில் நிதி நிலைமை ஆட்சியாளர்களின் கையை விட்டு விலகிச் செல்லும் தன்மை காணப்படுவதால் அதை தடுப்பதற்காக அரச செலவை கட்டுப்படுத்துவது மிக மிக முக்கியம். அதன்படி அரச நிதி விடயத்தை பார்க்கும் போது தேர்தல் செலவு அரச நிதி நிலைமையை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதோடு தேர்தலுக்காக வளங்களைப் பெற்றுக் கொள்வது திறைசேரிக்கு மிகவும் மோசமான சவால் மிகுந்த விடயமாகுமென நிதி

06



இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இருநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று இலங்கையை வந்தடைந்தார். விமான நிலையத்தில் வந்திறங்கிய அவரை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய வரவேற்றார். இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் இதன்போது கலந்துகொண்டார்.

தேர்தல் செலவின சட்டமூலம்

## 61 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் 61 மேலதிக வாக்குகளால் சபையில் நேற்று திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதம் நேற்று முழு

06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம்

## சுயாதீன விசாரணைகளை நடத்த ஐ.நா வேண்டுகோள்

03



## முறையான தேர்தல் கட்டமைப்புக்கு செலவினத்தை கட்டுப்படுத்தல் அவசியம்

**தேர்தல் செலவின சட்டம் குறித்து நீதியமைச்சர் தெரிவிப்பு**

03

## திருட்டு குற்றத்திற்கு நால்வரின் கைகளை வெட்டிய தலிபான்கள்

**பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க தண்டனை**



தலிபான்கள் ஆட்சி செய்யும் ஆப்கானிஸ்தானில் திருட்டு குற்றத்துக்காக 4 பேரின் கைகளை துண்டித்து தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

06

## பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை

**பெப்.20 மீண்டும் ஆரம்பமாகும்**



நாடு முழுவதுமுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று முதல் பெப்ரவரி 20 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படுகிறது. 2022 பாடசாலை கல்வியாண்டின் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் இன்றுடன் (20) நிறைவடைகின்றது.

06

தபால் மூல வாக்களிப்பு

## ஜனவரி 23 வரை விண்ணப்பிக்கலாம்



தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இன்று (20) முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை, அத்தாட்சிப்படுத்தப்பட்ட தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை, மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்க கால

06

வன ஜீவராசிகள் மற்றும் வன வளங்கள்

## அமைச்சு பதவியிலிருந்து அமரவீர இராஜினாமா



வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சு பதவியிலிருந்து அமைச்சர் மஹிந்த அமரவீர இராஜினாமா செய்துள்ளார்.


இது தொடர்பில் அவர் நேற்று (ஜன. 19) ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் பல அமைச்சர்களை ஜனாதிபதி நியமிப்பதற்கு தேவையான இடத்தை

06

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில்

## மின்கம்பிகளை திருடிய இருவர் பொலிஸாரால் கைது



கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் இருந்த 2.4 மில்லியன் ரூபா பெறுமதியான மின் விநியோக கம்பிகளை திருடிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின்சார பொறியியலாளர் ஒருவரின் முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் இருவரை கைதுசெய்துள்ளனர்.

மின்கம்பிகளை அறுத்துக்கொண்டிருந்த போது 30 மற்றும் 43 வயதுடைய இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் அவர்களிடம் மேற்கொண்ட

06

## யாழில் கைதான வேலன் சுவாமி பிணையில் விடுதலை

சட்டவிரோத ஒன்றுகூடலில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டிருந்த வேலன் சுவாமிகள் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பொங்கல் விழா நடைபெற்ற சந்தர்ப்பத்தில் நடத்தப்பட்ட போராட்டத்தில் வேலன் சுவாமிகள் பங்கேற்றிருந்தார்.

06

# அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் 100வது ஆண்டு விழா












அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் 100வது ஆண்டு விழா நேற்று (19) வியாழக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கௌரவ அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்த்தன, சர்வமத பெரியார்கள் உட்பட அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, விதுர விக்கிரமநாயக்க, அலி சப்ரி, நசீர் அஹமட், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் நாடுகளின் தூதுவர்கள் உட்பட அரசாங்க முக்கியஸ்தர்கள், பெருந்திரளான உலமாக்கள், முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர். (படங்கள் அஷ்ரப் ஏ சமத்)




# வட்டவளை ஞானானந்த கிராமத்திற்கு செல்வதற்கான பாலம் உடைந்த நிலையில்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

வட்டவளை ஞானாநந்த கிராமத்திற்கு செல்லும் பிரதான பாலம் உடைந்து விழும் அபாயத்திலுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஹற்றன் நகரிலிருந்து வட்டவளை ஞானானந்த கிராமத்திற்கு செல்லும் பிரதான வீதியிலேயே இப்பாலம் அமைந்துள்ளது. தற்போது இப்பாலம் உடைந்து விழும் அபாயத்திலிருப்பதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் அங்கு அமைக்கப்பட்ட பாலத்தில் சிறிய வாகனங்கள் மட்டும் செல்லக் கூடியதாகவிருந்தது.

அப்பாலத்திற்கு பதிலாக அம்பகமுவ பிரதேச செயலகத்தின் ஊடாக பத்து ஆண்டுகளுக்கு முன்னர் புதிய பாலம் அதன் அருகில் அமைக்கப்பட்டது .

எனினும் அம்பகமுவ பிரதேச சபை பழைய பாலத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் ஒப்பந்தக்காரர்கள் பழைய பாலத்திலிருந்த இரும்புகளை மட்டும் அகற்றியமையால் புதிய பாலத்தின் இருபகுதிகளிலும் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளது.



சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இப்பிரதான பாலத்தையே உபயோகிக்கின்றனர். இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் கிராம மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர்.

பழைய பாலத்தை முற்றாக அகற்றுவதுடன் புதிய பாலத்தின் இரு பகுதிகளும் மண் அரிப்பு ஏற்படாமல் இருக்க தடுப்புகள் அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.



மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி மாணவத் தலைவர்களுக்கான ஒருநாள் தலைமைத்துவ பயிற்சி பசறை கல்லூரி அதிபர் ஏ.எல்.ஏ.ரஹ்மானின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெற்றது. உளவள ஆலோசகர் எம். டி.எம்.ஹாசிம் மாணவத்தலைவர்களுக்கான பொறுப்புகளும் கடமைகளும், தலைமைத்துவ போக்கும் சவால்களும், தலைமைத்துவம், நேரமுகாமைத்துவம், போன்ற விடயங்கள் தொடர்பில் தெளிவுப்படுத்தினார்.

# வீரசக்தி விநாயகர் பெருமான் ஆலய வருஷாபிஷேக மணவாளகோல பெருவிழா

**லுணுகல நிருபர்**

ஹாலிஎல நகர் அருள்மிகு ஸ்ரீ வீரசக்தி விநாயகர் பெருமான் ஆலய மூன்றாம் ஆண்டு வருஷாபிஷேக மணவாளகோல பெருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்றைய தினம் விநாயகர் வழிபாடு, சுத்திபுண்ணியாக வாசகம், கடஸ்தாபனம், பிரதான கும்ப பூஜை, சங்கு பூஜை, ஹோமம், விசேட திரவிய ஹோமம், அஷ்டோத்திர மஹா சங்காபிஷேகம், மூலஸ்தான பூஜை, வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி உள்வீதி உலா நடைபெறும்.

தொடர்ந்து நடைபெறும் மகேஸ்வர பூஜையுடன் அடியவர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படவுள்ளது. கிரியைகளில் கலந்துகொண்டு எல்லாம் வல்ல விநாயகர் பெருமானின் மெய்யருளைப் பெற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் ஆலய அறங்காவலர் சபையினர் அன்புடன் அழைக்கின்றனர்.

## பேராசிரியர் அதுல சேனாரத்ன மீதான தாக்குதல் சம்பவம்

# மாணவர் ஒன்றிய தலைவரின் விளக்கமறியல் நீடிப்பு

**(எம்.ஏ.அமீனுல்லா )**

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன மற்றும் அவரது குடும்பத்தினர் மீதான தாக்குதல் சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஸ்ரீனித் விஜேசேகர உத்தரவிட்டார்.

முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன மற்றும் அவரது குடும்பத்தினரை தாக்கியமை, அரச சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் அனுராத விதானகே உட்பட 13 மாணவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, சாமோத் சத்சர, அனுராதா விதானகே உள்ளிட்ட 14 மாணவர்களையும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய 14 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தற்காலிகமாக இரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன், மாணவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பிணை கோரிய போதிலும் நீதவான் அதனை நிராகரித்தார்.

# டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



**ஹற்றன் விசேட நிருபர்**

ஹற்றன் நோர்வூட் பிரதான வீதியோரத்தில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலை ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர்கள், தாதியர்கள், மற்றும் ஊழியர்கள் என சுமார் 50ற்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

மருந்து தட்டுப்பாட்டை உடன் நீக்கு, வைத்தியசாலைகளில் காணப்படும் உபகரண குறைபாடுகளை நிவர்த்தி செய் உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளை ஏந்திய வண்ணம் அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணித்தியாலயம் வரை நீடித்தது. ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், இன்றும் அரசாங்கம் அரச ஊழியர்களின் வயதெல்லையினை 60 வரை நிர்ணயித்துள்ளது. ஆனால் ஆட்சியில் இருப்பவர்களுக்கு மாத்திரம் அந்த வயதெல்லை குறிப்பிடப்படவில்லை. மக்கள் நாளுக்கு நாள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

# முறையான தேர்தல் கட்டமைப்புக்கு செலவினத்தை கட்டுப்படுத்தல் அவசியம்

## தேர்தல் செலவின சட்டம் குறித்து நீதியமைச்சர் விஜேயதாச தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேர்தல் செலவினங்கள் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால்தான் முறையான அரச நிர்வாக கட்டமைப்பை உருவாக்க முடியுமென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்ட மூலமானது ஆளும் கட்சியையோ அல்லது எதிர்க்கட்சியையோ பலவீனப்படுத்தும் வகையில் கொண்டுவரப்பட்டதல்ல என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், மோசடிகளை தோற்றுவிக்கும் தேர்தல் முறைமையை இல்லாதொழிக்கா விட்டால் நாட்டு மக்கள்

06

# கௌதம் அதானியுடன் மிலிந்த மொரகொட சந்திப்பு



இந்தியாவிலுள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொடா மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக குஜராத் மாநிலத்தின் தலைநகரான அஹமதாபாத்துக்குச் சென்றிருந்தவேளை அங்கு அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானியைச் சந்தித்தார்.

இலங்கையில் அதானி குழுமம் மேற்கொண்டுள்ள முதலீடுகள் குறித்தும், துறைமுக முதலீட்டின் முன்னேற்றம் குறித்தும் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும், அது இலங்கைக்கு கிடைக்கும் நன்மைகள் குறித்து கவனம் செலுத்துவதாகவும் புதுடில்லியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

# சுயாதீன விசாரணைகளை நடத்த ஐ.நா வேண்டுகோள்




உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இலங்கை சுயாதீன விசாரணைகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டை வழங்கவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த உண்மை, நீதியை நிலைநாட்டி பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான இழப்பீட்டை வழங்கவேண்டும் என ஐநா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களின் துயரத்தை எவ்வளவு பெரிய இழப்பீட்டினாலும் ஈடுசெய்ய முடியாது என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் பேச்சாளர் ஜெரெமி லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்காக அவர்களின் போராட்டத்தின் முன்னோக்கிய ஒரு படியை குறிக்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படையினர் மற்றும் புலனாய்வு பிரிவினரின் செயற்பாடின்மை மற்றும் கண்காணிப்பின்மை குறித்து நீதிமன்றம் அதிர்ச்சி வெளியிட்டுள்ளது என சுட்டிக்காட்டியுள்ள லோரன்ஸ் எவ்வேளையும் தாக்குதல்

06

CTB ஊழியர்கள் மீதான தாக்குதல் சம்பவம்:

# குற்றவாளிகள் இனங்காணப்பட்டதும் வீதி அனுமதிப்பத்திரம் 02 வருடங்களுக்கு ரத்து

## சபையில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ள குற்றவாளிகளான தனியார் பஸ் உரிமையாளர்களின் பஸ்களுக்கான வீதி அனுமதிப்பத்திரம் இரண்டு வருடங்களுக்கு இரத்துச் செய்யப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை பஸ்களையும் வளங்களையும் சேதப்படுத்தும் வகையில் போட்டித் தன்மையுடன் பஸ்களை செலுத்தும் சில தனியார் பஸ்கள் அதிக வருமானத்தை ஈட்டும் நோக்கிலேயே

06

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல் கண்டிக்கத்தக்கது

## பிரதமர் தினேஷ் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் அது தொடர்பில் சிஐடி விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளின் போது அனைத்து தரப்பினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குள்ளது என்பதை சபையில் சுட்டிக்காட்டிய பிரதமர், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் இருவர் மரண அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அது வெறுக்கத்தக்க செயல் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, தேர்தலுக்கான நிதி ஒதுக்கீட்டில் சிக்கல்கள் காணப்படுவதாக திறைச்சேரி அறிவித்துள்ளதாகவும் இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்தல் அல்லது கண்காணிக்கும் வகையில் புதிய சட்டத்தை உருவாக்குமாறு அரசியல் கட்சிகள், தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்கள் தேர்தல் முறை தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவை வலியுறுத்தியுள்ளன.

அந்த வகையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமையவே தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு வரையறையற்ற வகையில் தேர்தலுக்கு செலவு செய்ய முடியும் என்ற நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி சபை தேர்தல் உரிய காலத்தில் நடத்த வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. தேர்தலை நடத்தும் சூழல் தற்போது உள்ளதா என்பது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

தற்போதைய நெருக்கடியான நிலையில் தேர்தலுக்கு நிதி ஒதுக்குவது சிக்கலானது என திறைசேரி அரசாங்கத்திடம் அறிவுறுத்தியுள்ளது. அனைத்து காரணங்களையும் கருத்திற் கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும். நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் எதிர்தரப்பினர் நன்கு அறிவார்கள். தேர்தல் விடயத்தில் எதிர்க்கட்சிகள் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# வீடொன்றிலிருந்து இரு சடலங்களை மீட்ட பொலிஸ்

**கலேவெல பகுதியில் அதிர்ச்சி சம்பவம்**




கலேவெல, ஆதாவெல பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுமி மற்றும் இளைஞரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமிக்கு 14 வயது எனவும் இளைஞனுக்கு 20 வயது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவருக்குமிடையியே காதல் தொடர்பு இருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தகவல்கள் வெளிவந்துள்ளன.

நன்னடத்தையின் பின்னர் குறித்த சிறுமி சில நாட்களுக்கு முன்னர் தாயிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# களுத்துறை பிரபல ஆண்கள் பாடசாலை மாணவன் மீது தாக்குதல்; 03 மாணவர்கள் கைது

களுத்துறை பிரதான ஆண்கள் பாடசாலையில் உயர்தர பிரிவில் கல்வி கற்கச் சென்ற மாணவனை மனிதாபிமானமற்ற முறையில் துன்புறுத்தி தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பிரதான ஆண்கள் பாடசாலையொன்றில் உயர்தரப் பிரிவில் முதலாம் ஆண்டில் கல்வி கற்கும் மூன்று மாணவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்கப்பட்ட மாணவன் சிகிச்சைக்காக களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தாக்குதலுக்குள்ளான மாணவன் வாக்குமூலம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளான மாணவனின் அந்தரங்க பகுதியில் தாக்கப்பட்டதால் தையல் இட வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், 24 மணி நேரத்துக்கும் மேலாக அவர் சுயநினைவு இல்லாமல் இருந்ததாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சந்தேகநபர்கள் மூவரையும் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த களுத்துறை தெற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.


பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

மூலச் சான்றிதழ் (Certificate of Origin)

இன் கீழ் உள்ளூர் கொட்டைப்பாக்கு ஏற்றுமதியை முறைமைபடுத்துவதற்காக உள்ளூர் கொட்டைப்பாக்கு ஏற்றுமதியாளர்கள், உள்ளூர் பாக்கு/ கொட்டைப்பாக்கு மொத்த வழங்குநர்கள், சில்லறை வழங்குநர்கள் மற்றும் களஞ்சிய வசதிகளை வழங்குபவர்கள்


பதிவு செய்தல் - 2023

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியா பாகிஸ்தான் உற்பட நாடுகளுக்கு உள்ளூர் கொட்டைப்பாக்கு ஏற்றுமதி செய்யும்போது தோற்றம் சான்றிதழ் (Certificate of Origin) பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பரிந்துறையை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட உள்ளூர் வழங்கல் வலையமைப்பிற்கு உரித்தான உள்ளூர் பாக்கு/ கொட்டைப்பாக்கு ஏற்றுமதியாளர்கள், மொத்த வழங்குநர்கள், சில்லறை வழங்குநர்கள் மற்றும் மொத்த சேகரிப்பாளர்களை பதிவு செய்வதற்கு 1992 இல. 46 ஏற்றுமதி விவசாய மேம்பாட்டு சட்டத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நடவடிக்கையெடுக்கப்படும்.

நீங்கள் மேற்படி விடயங்களில் ஈடுபடும் நபராயின் தயவு செய்து 2023.02.10ம் திகதி அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் மாதிரிக்கு அமைவாக உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றை கீழ்க்காணும் முகவரிக்கு தபாலில் அல்லது 072-9221682 எனும் whatsapp இலக்கத்திற்கு அல்லது bcuexpoagri@gmail.com மின்னஞ்சல் முகவரி மூலம் எனக்கு அனுப்புவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

இது பற்றி உங்களுக்கு ஏதேனும் சிக்கல் அல்லது மேலதிக விபரங்கள் தேவையெனில் தயவு செய்து இந்த அதிகாரிகளை தொடர்பு கொள்ளுங்கள்

| ஜனக்க லின்தர | உபுல் ரணவீர | கீத்விக்ரமசிங்ஹ | சனத் பண்டார |
|---|---|---|---|
| 0714484490 | 0718397172 | 0713900415 | 0774580737 |



உள்ளூர் பாக்கு/ கொட்டைப்பாக்கு விற்பனையாளர்களைப் பதிவு செய்வதற்கான அடிப்படை விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| விண்ணப்பதாரியின் பெயர் | |
| வியாபாரத்தின் பெயர் | |
| வர்த்தக நிலைய முகவரி | தொலைபேசி இல: |
| மாவட்டம் | |
| பிரதேச செயலாளர் பிரிவு | |
| வியாபாரத்தின் தன்மை | ஏற்றுமதியாளர்கள் ☐ மொத்த வழங்குநர்கள் ☐ களஞ்சிய வசதிகள் வழங்குநர்கள் ☐ சில்லறை வழங்குநர்கள் ☐ வேறு ☐ |
| வர்த்தக நிலையத்தினை அடையக் கூடிய விதம் (கிட்டிய நகரத்தில் இருந்து) | |

ஏ.பீ.பீ. திஸ்னா
பணிப்பாளர் நாயகம்,
ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
1095, கெட்டம்பே, பேராதனை.

081-2 079090
081-2 388651
081-2 386018
081-2 386019

முன்னேற்றமான நாடு - வளமான எதிர்காலம்

helpdesk@dea.gov.lk www.dea.gov.lk

Department of Export Agriculture

Designed@COM Div DEA


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.96 | 258.26 |
| கனடியன் டொலர் | 266.74 | 278.59 |
| யூரோ | 384.81 | 400.37 |
| ஜப்பான் யென் | 2.7043 | 2.8159 |
| சிங்கப்பூர் டொலர் | 268.94 | 280.31 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 436.25 | 452.93 |
| சுவிஸ் பிராங்க் | 387.32 | 406.01 |
| அமெரிக்க டொலர் | 360.47 | 371.36 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 960.78 | கட்டார் ரியால் | 98.82 |
| குவைத் டினார் | 1,183.98 | சவூதி ரியால் | 96.48 |
| ஓமான் ரியால் | 940.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.62 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் தை மாதம் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 26

**குறள் தரும் சிந்தனை**

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று

*மனம் வேறு செயல் வேறாக இருப்பவர்களின் வார்த்தைகளை நம்பி எந்தவொரு தெளிவான முடிவையும் எடுக்க இயலாது.*

## உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலனுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாடெங்கிலும் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது. இப்பரீட்சைக்கு 3 இலட்சத்து 31 ஆயிரத்து 709 மாணவர்கள் தோற்ற உள்ளனர்.

இப்பரீட்சையின் நிமித்தம் 2200 பரீட்சை நிலையங்கள் நாடெங்கிலும் அமைக்கப்பட்டுள்ளதோடு, 317 ஒருங்கிணைப்பு நிலையங்களும் 32 பிராந்திய நிலையங்களும் நிறுவப்பட இருக்கின்றன.

இலவசக் கல்விக் கொள்கை முன்னெடுக்கப்பட்டு வரும் இந்நாட்டில் நடைபெறும் பொதுப்பரீட்சைகளில் இதுவும் ஒன்றாகும். இப்பரீட்சையானது, மாணவரொருவரின் 13 வருட காலக் கல்வியின் நிறைவில் நடைபெறக் கூடியதாக உள்ளது. மாணவரின் எதிர்கால உயர்கல்வியைத் தீர்மானிப்பதில் அதிக செல்வாக்கு செலுத்தக்கூடிய பரீட்சை இது.

இப்பரீட்சையில் திறமையாகச் சித்தியடைகின்றவர்கள் உயர்கல்விக்காக உள்நாட்டு பல்கலைக்கழகங்களுக்கு மாத்திரமல்லாமல் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கும் தெரிவு செய்யப்படுவர். அதேநேரம் இந்நாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்குரிய அடிப்படையாகவும் இப்பரீட்சையே அமைந்திருக்கின்றது.

இவ்வாறு முக்கியத்துவம் பெற்று விளங்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகி 14 நாட்கள் நடைபெற உள்ளது. இப்பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, கடந்த வருடம் நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் விளைவாக முன்னெடுக்கப்படும் மின்வெட்டும் நடைமுறையில் இருந்து வருகின்றது. இம்மின்வெட்டானது மாணவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் மிகவும் முக்கியத்துவம் மிக்க நேர காலத்தில்தான் முன்னெடுக்கப்படுகிறது.

இவ்வாறான சூழலில் 13 வருட கல்வியை நிறைவு செய்துள்ள மாணவர்களின் எதிர்கால உயர்கல்வியைத் தீர்மானிப்பதற்கான பரீட்சையை நடத்துவதற்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இருக்கின்றன.

இந்த நிலையில்தான் எரிசக்தி, மின்சக்தி அமைச்சு, இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி பரீட்சைக் காலப்பகுதியில் மின்வெட்டை முன்னெடுக்காதிருக்க தீர்மானித்து இருக்கின்றது. இத்தீர்மானத்தை அமைச்சர் கஞ்சன விஜேசேகர அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். அது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன ஊடகவியலாளர் மாநாட்டிலும் அறிவித்தும் இருக்கின்றார்.

இத்தீர்மானத்தை, இம்முறை பரீட்சை எழுதும் மாணவர்களும் அவர்களது பெற்றோரும் பெரிதும் வரவேற்றுள்ளனர். உண்மையில் இந்நடவடிக்கை பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக அமையும். குறிப்பாக பரீட்சையின் இறுதிநேர ஆயத்தப்படுத்தல்களுக்கு இத்தீர்மானம் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

அதேநேரம், அரசாங்கம் மேற்கொண்டுள்ள இத்தீர்மானம் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டு வருவது மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. பரீட்சை எழுதும் மாணவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி மின்வெட்டை அமுல்படுத்தாது மின்வழங்கவென நாளொன்றுக்கு 357 மில்லியன் ரூபாவை செலவிட நேரிடும்' என்றும், 'இவ்வாறு இப்பரீட்சை நடைபெறும் 14 நாட்களுக்கும் 5 பில்லியன் ரூபாவை செலவிட வேண்டும்' என்றும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாட்டின் இலவசக் கல்விக்காக வருடா வருடம் கோடிக்கணக்கில் செலவிடப்பட்டு வரும் சூழலில், மின்வெட்டை அமுல்படுத்தாது மின்சாரம் வழங்கவென செலவிடப்படும் நிதி, இந்நாட்டின் இலவசக் கல்வியை மேலும் பலப்படுத்துவதற்கான மேலதிக செலவாகவே நோக்கப்பட வேண்டும். பரீட்சைக் காலத்தில் மின்வெட்டை அமுல்படுத்தாதிருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் இலவசக்கல்வியை மேலும் பலப்படுத்த நிச்சயம் வழிவகுக்கும்.

கடந்த வருடம் முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து இன்னும் நாடு முழுமையாக மீட்சி பெறாத சூழலில் இவ்வளவு தொகை நிதி மின்வெட்டை அமுல்படுத்தாதிருக்க செலவிடுவது குறிப்பிடத்தக்கதாகும். தற்போதைய சூழலில் இது ஒரு சாதாரண தொகையும் அல்ல. நாட்டின் இளம் பராயத்தினரின் உயர்கல்வி விடயத்தில் அரசாங்கம் கொண்டுள்ள கரிசனையினதும் அக்கறையினதும் வெளிப்பாடே இது.

ஆகவே மாணவர்களதும் மக்களதும் நலன்களை முன்னிலைப்படுத்தி உயர்தரப் பரீட்சைக் காலத்தில் மின்வெட்டை அமுல்படுத்தாதிருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது நாட்டுக்கும் மாணவர்களின் எதிர்கால உயர்கல்விக்கும் அளிக்கும் பாரிய பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# முஸ்லிம் சமூகம் இனத்துவ அரசியலைக் கைவிட்டு தேசிய அரசியலில் பயணிப்பது காலத்தின் தேவை

**ஐ.தே.கவின் கல்முனை தொகுதி அமைப்பாளரும், அக்கட்சியின் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளருமான ஏ.எம்.ஜெமீல் கூறுகின்றார்**

முஸ்லிம் சமூகம் இனத்துவ அரசியலைக் கைவிட்டு, தேசிய அரசியல் நீரோட்டத்தில் பயணிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளரும், அக்கட்சியின் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளருமான ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவராகவும் ஏ.எம்.ஜெமீல் பதவி வகித்துள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தேசிய அமைப்பாளராக பதவி வகித்து வந்த அவர், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து, அக்கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளராகவும் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.



ஏ.எம்.ஜெமீல் ஊடகத்துக்காக வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:

முஸ்லிம் சமூகம் இனரீதியிலான அரசியலை முன்னெடுத்து, அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லப்படுவதை இனியும் அனுமதிக்க முடியாது. மு.கா தலைவர் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் முஸ்லிம் அடையாள அரசியல் என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்திற்கு வெளியேயுள்ள தலைமைகள் இங்கு வந்து, இனவாதம் பேசி, மக்களை உசுப்பேற்றி, வாக்குகளை சூறையாடி, இனவாத அரசியல் செய்தமையால் சமூகம் இதுவரை அடைந்த நன்மைதான் என்ன?

**'முஸ்லிம் அடையாள அரசியல்' என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்திற்கு வெளியேயுள்ள தலைமைகள் இங்கு வந்து இனவாதம் பேசி, மக்களை உசுப்பேற்றி, வாக்குகளை சூறையாடி, இனவாத அரசியல் செய்தமையால் முஸ்லிம் சமூகம் இதுவரை அடைந்த நன்மைதான் என்ன?**

இதனை சுயமதிப்பீடு செய்து கொள்ளத் தவறுவோமாயின் எமது சமூகம் இன்னும் பாரிய விளைவுகளையே சந்திக்க நேரிடும் என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இனப்பிரச்சினை தலைதூக்கிய காலகட்டத்தில் மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் சமூகத்தின் தேவை கருதி, முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கி, அதில் வெற்றியும் கண்டார்.

ஆனால் அவர் தனது அந்திம காலத்தில் இனத்துவ அரசியலை தொடர்ந்தும் முன்னெடுப்பதானது சமூகத்திற்கு ஆரோக்கியமானதல்ல என்ற தூரநோக்கு சிந்தனையுடனேயே முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குப் பதிலீடாக 'நுஆ' எனும் தேசிய ஐக்கிய முன்னணியை ஸ்தாபித்து, தேசிய அரசியலைத் தொடக்கி வைத்திருந்தார்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம் சமூகமானது இனத்துவ அரசியலை விடுத்து, தேசிய அரசியலை முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் இன்னும் வெகுவாக உணரப்படுகிறது. தேசிய ஐக்கியம், சகவாழ்வு என்பவற்றின் ஊடாகவே ஏனைய இனங்களுக்கு நிகராக முஸ்லிம் சமூகமும் சமத்துவ உரிமைகளுடன் தலைநிமிர்ந்து வாழ முடியும் என்பதையும், எமது இளம் தலைமுறையினரின் எதிர்காலம் பிரகாசமாக அமையும் என்பதையும் நான் திடமாக நம்புகிறேன்.

இவற்றைக் கருத்தில் கொண்டே நான் ஐக்கிய தேசியக் கட்சியில் அரசியல் பயணத்தை மேற்கொள்ளத் தீர்மானித்தேன். நாட்டில் பல தேசியக் கட்சிகள் இருக்கின்ற போதிலும், ஏனைய தேசியக் கட்சிகளுடன் ஒப்பிடுகையில் முதலாளித்துவ கொள்கை சார்ந்த ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே முஸ்லிம்களை அரவணைத்துச் செல்லக்கூடிய கட்சியாக இருக்கிறது.

அதனாலேயே முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்திற்கு முந்திய காலங்களில் முஸ்லிம்கள் பெருவாரியாக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து வந்திருக்கின்றனர்.முஸ்லிம் காங்கிரஸ் எதிர்கொண்ட முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளராகப் போட்டியிட்ட ரணசிங்க பிரேமதாசா அவர்களுக்கே மறைந்த அஷ்ரப் ஆதரவு வழங்கும் தீர்மானத்தை மேற்கொண்டிருந்தார். அது மாத்திரமல்லாமல் அவரது வெற்றிக்காக பிரசாரங்களை மேற்கொண்டு கடுமையாக உழைத்தார்.

தற்போதைய சூழ்நிலையில், அதல பாதாளத்தில் வீழ்ந்திருக்கின்ற நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பக் கூடிய வல்லமை ஐ.தே.க. தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே இருக்கிறது என்கிற யதார்த்தம் உணரப்பட்டதனாலேயே பாராளுமன்றத்தினால் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற தட்டுப்பாட்டினால் நாடு ஸ்தம்பிதமடைந்ததையும் நமது தாய்மார் கூட இவற்றுக்காக வரிசைகளில் நின்று அல்லல் பட்டதையும் எவரும் இலகுவில் மறந்து விட முடியாது. குழந்தைகளுக்குக் கூட பால்மா கிடைக்கவில்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் பாரிய தட்டுப்பாடு நிலவியிருந்தது. இப்படியொரு இக்கட்டான சூழ்நிலையில்தான் சர்வதேச அங்கீகாரம் பெற்ற இராஜதந்திர தொடர்புகளைக் கொண்டிருக்கின்ற ஒரு தலைவரான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஜனாதிபதியாக பொறுப்பேற்று, இப்பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதில் வெற்றி கண்டு வருகின்றார்.

அவரது மதிநுட்பத்தினால் சர்வதேச நாடுகளின் மனிதாபிமான உதவிகள் எமது நாட்டுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஜனாதிபதியின் இடைவிடாத கடின உழைப்பால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும் கிடைக்கப்பெறவிருக்கிறது. இதன் மூலம் இன்னும் சில மாதங்களில் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு கிடைப்பதற்கான சமிக்ஞைகள் நம் கண் முன்னே தெரிகின்றன. இந்நிலையில்தான் சமூகத்தின் நலன் கருதியும் கிழக்கு மாகாண அபிவிருத்தியை இலக்காகக் கொண்டும் நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் கைகோர்த்து ஐக்கிய தேசியக் கட்சியில் எனது அரசியல் பயணத்தை முன்னெடுக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

குறிப்பாக ஐ.தே.க. முக்கியஸ்தர்களான தயா கமகே, அனோமா கமகே போன்றோருடன் சேர்ந்து, இனப்பாகுபாடுகளுக்கப்பால் அம்பாறை மாவட்டத்தையும் முழுக்கிழக்கு மாகாணத்தையும் கட்டியெழுப்புகின்ற ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் அடிப்படையிலேயே கடந்த 03 மாதங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் புத்திஜீவிகள் அமைப்பான United Professional Forum என்கிற ஐக்கிய தொழில் வாண்மையாளர் அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக அக்கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் உள்வாங்கப்பட்டேன்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளராகவும் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன். இப்பொறுப்புகளை சுமந்திருக்கின்ற நான் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கான வேலைத் திட்டங்களை தொடங்கியிருக்கிறேன். இப்பகுதியில் மங்கி மறைந்து போயிருக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சியை மீளக்கட்டியெழுப்புவது என்பதுமிகவும் சவால் நிறைந்த கடினமான பயணமாக இருக்கும் என்பதை நான் நன்கறிவேன். எவ்வாறாயினும் இப்பயணத்தை வெற்றிகரமாக முன்கொண்டு செல்ல முடியும் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது.

கிழக்கில் மாற்றத்தை எதிர்பார்க்கும் இளையோர், புத்திஜீவிகள் உட்பட மக்கள் அனைவரும் நம்பிக்கையுடன் என்னோடு கைகோர்க்குமாறு அறைகூவல் விடுக்கின்றேன்.

அதேவேளை, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதற்காக விரிவுரையாளர்கள் சார்பில் முன்னின்று செயற்பட்ட சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல் தலைமையில் கிழக்கு மாகாணத்திலுள்ள புத்திஜீவிகள் மற்றும் கல்வியியலாளர்களை கட்சியின் மேற்படி United Professional Forum எனும் அமைப்புடன் ஒருங்கிணைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் அறியத் தருகின்றேன்.

இவ்வாறு அவர் மேலும் குறிப்பிட்டார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# கிளிநொச்சி வடக்கு கல்விவலயத்தில் பொங்கல் விழா, முன்பள்ளிகளின் மாதிரிக் கல்வி வலய அங்குரார்ப்பணம்

அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHOUSA) மற்றும் ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட இரட்ணம் பவுண்டேசன் நிறுவனம்(Ratnam FoundationUK)என்பன இணைந்து அமுல்படுத்தும் முன்பருவ பிள்ளை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தில் பொங்கல் விழாவும் முன்பள்ளிகளின் மாதிரிக் கல்வி வலய அங்குரார்ப்பண வைபவமும் அண்மையில் நடைபெற்றன.



மேற்படி இரு வைபவங்களும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலய ஆரம்ப முன்பிள்ளை பருவ அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்றன.

பொங்கல் விழா டொக்டர் சாம் முன்பள்ளி வளாகத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளுடன் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் வரவேற்பு நடனம், கோலாட்டம், கும்மி, காவடியாட்டம், கரகாட்டம் இடம்பெற்றதுடன், இணைந்து கொண்ட அனைத்து முன்பிள்ளை ஆசிரியர்கள்,பெற்றோர்,சிறார்கள் மற்றும் வலய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் பொங்கலுடன் பிரசாதங்களும் ஏற்பாட்டாளர்களினால் வழங்கப்பட்டன.

அன்றைய தினம் கிளிநொச்சி வடக்கு வலயக் கல்வி பணிப்பாளர் க.அ.சிவனருள் ராஜாவின் சிந்தனையில் உருவாகி அவரால் மேற்படி இரு அமைப்புக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக இக்கல்வி வலயம் முன்பள்ளிகளின் மாதிரிக் கல்வி வலயமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் திருஞானம் ஜோன்குயின்ரஸ் இப்பொங்கல் விழாவில் அதற்கான பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.இந்நிகழ்வின் போது முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட செயற்படுசார் திறன்விருத்தி செயலமர்வுகளில் பங்குற்றி தம் திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கான சான்றிதழ்களும் இவரால் வழங்கப்பட்டன. இவ்விரு விழாக்களிலும் அனைத்துலக மருத்துவநல அமைப்பின்(IMHOUSA) இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார்.





வலயக் கல்விப்பணிப்பாளரின் கோரிக்கைக்கமைவாக ஆசிரியர்களுக்கான திறன்விருத்தி பயிற்சிகள் மட்டுமன்றி, அவர்களில் திறமையாக செயற்பட்டவர்களுக்கான மேலதிக பயிற்சிகள், அவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள், தன்னிலை மேம்பாட்டு பயிற்சிகள், நிர்வாக விடயங்களை கையாள்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

விசேட தேவையுடைய சிறார்களை முன்கூட்டியே இனங்கண்டு உதவியளிக்கும் செயற்பாடுகள், சிறுவர் அரங்கு செயற்பாடுகள் மற்றும் மாதிரி முன்பள்ளிகளில் மாதாந்தம் பௌர்ணமி தின கலைநிகழ்வுகளுக்கான பங்களிப்பு போன்றவற்றை இவ்வருட இறுதி வரையான காலப்பகுதிக்குள் வழங்கும் ஏற்பாடுகள் இத்திட்டத்தில் அடங்கியுள்ளன.

# இராமர் பாலம் புராதன சின்னமாக அறிவிக்கப்படுமா?-விரைவில் முடிவு



பா.ஜ.கவின் சுப்பிரமணியன் சுவாமி, இராமர் பாலத்தை புராதன சின்னமாக அறிவிக்க கோருவது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும் என்று உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு பதில் அளித்துள்ளது. இதனையடுத்து இராமர் பாலம் தொடர்பான சுப்பிரமணியன் சுவாமி வழக்கை உச்சநீதிமன்றம் முடித்து வைத்துள்ளது.

மன்னார் வளைகுடா, பாக்குநீரிணையை இணைக்க கூடிய மணற்திட்டுகள் அல்லது சுண்ணாம்பு பாறைகள் ஒரு தொடர்ச்சியாக இருக்கின்றன. இது ஒரு பாலம் போன்ற தோற்றத்தைக் கொண்டது. இதுதான் ஆடம் பாலம், ஆதாம் பாலம், இராமர் பாலம் என அழைக்கப்படுகிறது.

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாக நம்பப்படுகிற கடவுள் இராமர் கட்டிய பாலம் இது என்பது இந்துக்களின் நம்பிக்கை. இந்த நிலையில் தமிழ்நாட்டில், இந்த மணற்திட்டு பகுதியை ஆழப்படுத்தி கப்பல் போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை 150 ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்த கால்வாய்தான் சேது கால்வாய் அல்லது சேது சமுத்திர திட்டம் எனப்படுகிறது.

சேது சமுத்திரத் திட்டத்தை செயல்படுத்த இந்திய மத்திய அரசு முயற்சித்தது. ஆனால் அ.தி.மு.க, பா.ஜ.க ஆகிய கட்சிகள், இராமர் கட்டிய பாலத்தை இடித்து சேது கால்வாய் திட்டத்தை செயல்படுத்துவதா? என கொந்தளித்தன. 2014 இல் மத்தியில் பாஜக ஆட்சி அமைந்த நிலையில் சேது கால்வாய் திட்டம் கைவிடப்பட்டது. அப்போது, இராமர் பாலம் ஒரு புராதன சின்னம் என அறிவிக்க கோரி உச்ச நீதிமன்றத்தில் பாஜகவின் சுப்பிரமணியன் சுவாமி வழக்கும் தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீண்ட காலமாக உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. இந்த நிலையில் மத்திய அரசு நாடாளுமன்றத்தில் இராமர் பாலம் இருந்ததற்கான உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை என அறிவித்தது. இதனடிப்படையில் தமிழ்நாடு அரசு, சேது கால்வாய் அல்லது சேது சமுத்திர திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என தமிழ்நாடு சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

இந்நிலையில் உச்சநீதிமன்றத்தில் இராமர் பாலம் தொடர்பான சுப்பிரமணியன் சுவாமியின் மனு மீது நேற்று தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான பெஞ்ச் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, இராமர் பாலத்தை புராதன சின்னமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை மீது பரிசீலனை நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக விரைவில் முடிவெடுக்கப்படும் என உறுதியளித்தார். இதனை சுப்பிரமணியன் சுவாமி தரப்பு ஏற்க மறுத்தது.

ஆனால் மத்திய அரசின் உறுதிமொழியை ஏற்று வழக்கை உச்சநீதிமன்றம் முடித்து வைப்பதாக அறிவித்தது. மத்திய அரசு, இதில் முடிவு எடுக்காவிட்டால் சுப்பிரமணியன் சுவாமி தரப்பு மீண்டும் நீதிமன்றத்தை அணுகலாம் எனவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இளைஞர்களை ஆற்றுப்படுத்த நபிகளார் கையாண்ட ஒழுங்குகள்

உஹத் யுத்தத்தில் கொல்லப்பட்ட அப்துல்லாஹ் பின் அர்ஹம் (ரழி) அவர்களின் புதல்வர் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் அதற்குப் பத்து மாதங்களின் பின்னர் நடைபெற்ற தாதுர் ரிகா யுத்தத்தில் கலந்து கொள்கிறார்கள். ஹதீஸ்களுடைய அறிவிப்பின்படி, அப்போது அவர் பதினேழு வயதுடைய இளைஞராக இருந்தார்கள். ஜாபிரும் ஒட்டகமும் என்ற பிரபலமான இச்சம்பவத்தை ஜாபிர் (ரழி) அவர்களே அறிவிக்கிறார்கள்.

**தாதுர் ரிகா முடிந்து அனைவரும் மீண்டும் மதீனாவுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். படை நகர்வை அவதானித்து வந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அனைவரிடமிருந்தும் பின்தங்கிய நிலையில் இறுதியாக ஓர் இளைஞர் தனித்து வருவதை அவதானிக்கிறார்கள்.**

**முன்னிலையில் இருந்த நபியவர்கள் தமது ஒட்டகத்தின் வேகத்தை படிப்படியாகக் குறைத்து இறுதியாக வந்து கொண்டிருந்தவருடன் இணைந்து கொள்கிறார்கள். பின்னர் அவரிடம் நபியவர்கள் நீங்கள் யார் என்று வினவுகிறார்கள். நான் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் என அவர் பதிலளிக்கிறார். நீங்கள் ஏன் மெதுவாக வருகிறீர்கள், உங்கள் முகத்தில் கவலை படிந்திருப்பதன் காரணம் என்ன? என்று நபியவர்கள் வினவுகிறார்கள். என்னுடைய தந்தையிடம் இருந்து எனக்குக் கிடைத்த இந்த ஒட்டகம் வயது முதிர்ந்தது. இதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை. அதனால் வேகமாக நடக்கக்கூட முடியாது என ஜாபிர் (ரழி) பதிலளிக்கிறார்கள்.**

**பின்னர் நபியவர்கள் அவருடைய ஒட்டகத்தை உட்கார வைக்கச் சொல்லி நபியவர்களும் தமது ஒட்டகத்தை ஜாபிர் (ரழி) அவர்களுடைய ஒட்டகத்துக்குச் சமமாக உட்கார வைக்கிறார்கள். பின்னர் தமது கையிலிருந்த குச்சியினால் ஜாபிர் (ரழி) அவர்களுடைய ஒட்டகத்தின் முதுகில் தட்டுகிறார்கள். உடனே அது எழும்பி வீறு நடைபோட்டு ஓட ஆரம்பிக்கிறது. நபியவர்கள் அதன் பின்னால் சென்று ஜாபிர் (ரழி) அவர்களுடன் கதைத்தவாறே பயணிக்கிறார்கள்.**

**'யா ஜாபிர், நீங்கள் திருமணம் செய்தீர்களா?', 'ஆம் யாரஸூலுல்லாஹ். 'கன்னிப் பெண்ணையா விதவையையா என்று நபியவர்கள் கேட்கிறார்கள். 'விதவை யாரஸூலுல்லாஹ். 'யா ஜாபிர், நீங்கள் ஏன் ஒரு கன்னிப் பெண்ணை மணந்திருக்கக் கூடாது? அவள் உங்களுடன் விளையாடுவாள். நீங்கள் அவளுடன் விளையாடுவீர்கள். அவள் உங்களை மகிழ்விப்பாள். நீங்கள் அவளை மகிழ்விப்பீர்கள் என்று நபியவர்கள் கூறினார்கள். அதற்கு ஜாபிர் (ரழி) எனது தந்தை இறக்கும்போது ஒன்பது பெண் பிள்ளைகளை என்னிடம் விட்டுச் சென்றார். அவர்களையும் எனது விதவைத் தாயையும் கவனிக்கும் பொறுப்பு எனக்கிருக்கிறது. என்னை விட இளையவரை நான் திருமணம் செய்திருந்தால் அவரும் என்னுடைய தங்கைகளை ஒத்திருப்பாள் என ஜாபிர் (ரழி) பதிலளிக்கிறார்கள்.**

**பின்னர் நபியவர்கள் யா ஜாபிர், உங்களது ஒட்டகத்தை எனக்கு விற்க மாட்டீர்களா எனக் கேட்கிறார்கள். அதில் விற்பதற்கு என்ன இருக்கிறது. நான் அதனை உங்களுக்கு அன்பளிப்பாகவே தந்து விடுகிறேன் என ஜாபிர் (ரழி) சொல்கிறார்கள். அல்லாஹ் உங்களை மன்னிக்கட்டும். எனக்கு நீங்கள் அதனுடைய விலையை மட்டும் சொல்லுங்கள் என நபியவர்கள் கேட்கிறார்கள். ஜாபிர் (ரழி) மீண்டும் மறுக்கிறார்கள். இப்படியாக இருபத்தைந்து தடவைகள் நபிகளார் என்னிடம் கேட்டார்கள் என ஜாபிர் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள். இறுதியில் அவர் விற்பதற்குச் சம்மதித்ததும் எவ்வளவு தருவீர்கள் என நபிகளாரிடம் கேட்கிறார்கள். 'ஒரு திர்ஹம்' நபிகளார் ஆரம்பிக்கிறார்கள். 'முடியாது.' 'சரி இரண்டு திர்ஹம்.' 'அந்த விலைக்கு எங்கும் ஒட்டகம் கிடைக்காது.' இப்படியே பேரம் பேசிப் பேசி கடைசியாக ஒரு ஒட்டகத்தினுடைய சந்தை விலை வந்ததும் பேரம் முடிந்து விடுகிறது. மதீனாவுக்குச் சென்றதும் பணம் தந்து அதனைப் பெற்றுக் கொள்வதாக நபியவர்கள் கூறுகிறார்கள். மதீனாவின் எல்லை வந்ததும் அங்கே படைகளை நிறுத்துவதற்கு உத்தரவிட்ட நபிகளார் முதலில் ஜாபிருடைய வீட்டுக்கு தாம் வருவதாக அறிவியுங்கள், இரண்டு தலையணைகளையும் தயார்படுத்தி வைக்கச் சொல்லுங்கள் என்று சொல்லி அனுப்புகிறார்கள். அதன் பின்னர் ஜாபிர் (ரழி) அவர்களையே முதலில் மதீனாவில் நுழையச் செய்து பின்னரே படையினருடன் நபிகளாரும் மதீனாவுக்குள் நுழைகிறார்கள்.**

**மதீனா வந்த பின்னர் நபிகளார் ஒட்டகத்தின் தொகையைக் கொடுத்து விட்டு ஒட்டகத்தையும் அவரிடமே வைத்துக் கொள்ளுமாறு ஜாபிர் (ரழி) அவர்களிடம் வேண்டிக் கொள்கிறார்கள். நபியவர்களால் வீரியமூட்டித் தரப்பட்ட ஒட்டகத்தையும் நபி (ஸல்) அவர்கள் தந்த மூலதனத்தையும் முதலிட்ட அந்த இளைஞர் ஜாபிர் (ரழி), நபியவர்கள் தந்த மூலதனத்தைப் பெருக்கிப் பெருக்கி முதலிட்டு வந்ததில் நபியவர்கள் தந்த மூலதனம் தொடர்ந்தும் அப்படியே இருந்து வந்ததாக கூறியுள்ளார்கள்.**

இச்சம்பவம் எவ்வளவு நீளமானது என்பதிலிருந்து நபியவர்கள் இந்த இளைஞருடன் எவ்வளவு நேரம் உரையாடியிருப்பார்கள் என்பதனை வெளிப்படுத்தி நிற்கிறது. இன்றைய இளைஞர்களை ஆற்றுப்படுத்துவதில் சமூகம் செய்ய வேண்டிய பணி என்ன என்பதை உணர்த்துவதற்கு இச்சம்பவம் போதுமானது. படையினை முன்னின்று நடத்திச் சென்ற தளபதி அவ்வளவு படையினருக்குள்ளாலும் ஓர் இளைஞர் தனித்து விடப்பட்டிருப்பதை அவதானிக்கிறார். அவரைத் தேடிச் செல்கிறார். அவருடன் அறிமுகமாகிக் கொள்கிறார். அவரது நிலைமையை முகத்தைப் பார்த்தே அறிந்து கொள்கிறார். அவரைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்கிறார். அவர் விரும்பும் விதமாக வார்த்தைக்கு வார்த்தை அவரது பெயரைச் சொல்லி அழைக்கிறார். அவருடைய பொருளாதாரப் பிரச்சினையை அறிந்து கொள்கிறார். அவரது குடும்பச் சூழலை தெரிந்து கொள்கிறார். அவரது பிரச்சினைகளுக்குத் தீர்வு சொல்கிறார். அவருக்குத் தொழில் வாய்ப்புக்கான மூலதனத்தை வழங்கி உதவுகிறார். சமூகத்தின் பின்னிலையில் இருந்த ஓர் இளைஞரை அவரது உள்ளத்துடன் உரையாடி முடிகின்ற போது சமூகத்தில் முன்னிலைப்படுத்தி அழகு பார்க்கிறார்.

ஓர் இளைஞனுக்கு இதை விட வேறென்ன வேண்டும் என்ற புளகாங்கிதத்துடன் எமது இன்றைய இளைஞர்களுக்கு இவற்றில் எதுவெல்லாம் கிடைக்கிறது என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

இன்றைய இளைஞனுக்கு இருக்கும் பிரச்சினைகளும் அழுத்தங்களும் ஓர் இளைஞனால் மட்டும் சுமக்க முடியாதவை. பாடசாலைப் பருவம் முழுவதும் பாடசாலை, டியூசன் என கல்வித் திட்டத்தின் அழுத்தங்கள். முடிந்ததும் உயர்கல்வி, துறையைத் தெரிவு செய்தல், அதற்கான நிதி என ஏகப்பட்ட குழப்பங்கள். பின்னர் குடும்பச் சுமை, தொழில்வாய்ப்பு, திருமணம் என இன்னும் சில சுமைகள்.

ஜாபிர் (ரழி) அவர்கள் போன்ற ஏராளமான இளைஞர்கள் எம்மத்தியிலும் இருக்கிறார்கள். இவர்களுடன் ஆற அமர்ந்து பேசி அவர்களது பிரச்சினைகளையும் ஏக்கங்களையும் ஆதங்கங்களையும் அறிந்து கொள்ளும் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டல் எத்தனை பேருக்குக் கிடைத்திருக்கிறது? அவர்களைப் பட்டை தீட்டி கிரீடத்தில் வைத்து அழகு பார்க்கும் பொறுமை சமூகத்தில் எத்தனை பேருக்கு வாய்த்திருக்கிறது? நபிகளார் தமது மகள் பாத்திமா (ரழி) அவர்களின் கட்டிலில் அமர்ந்து அவருடன் உரையாடுபவர்களாக இருந்திருக்கிறார்கள். நபிகளார் தமது குடும்பத்தாருடன் அமர்ந்திருக்கும் சபையில் மகள் பாத்திமா (ரழி) நுழைந்தால் எழுந்து நின்று வரவேற்பவர்களாக இருந்திருக்கிறார்கள். இளைஞர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து ஆற்றுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்தச் சம்பவங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

பெற்றவர்களின் பாரத்தை இளம் வயதிலேயே சுமக்க நேரிடுகின்ற இளைஞர்கள் அதற்கான பாதை தெரியாமல் தட்டுத் தடுமாறும் போது தட்டிக் கொடுத்து கைதூக்கி விடுவதற்கு யாரும் இல்லாத வெறுமையை இளைஞர்கள் உணர்வார்களானால், அவர்கள் வேறு வழியின்றி தமது பிரச்சினைகளை மறப்பதற்கான வழிகளில் தஞ்சமடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. இந்நிலைக்கு இளைஞர்கள் ஆளாக விடாமல் அவர்களுடைய மன அழுத்தங்களைக் களைவதற்கு நேரத்தையும் அவர்களது எதிர்காலத்துக்கென நிதியையும் செலவிடுவது, அவர்கள் தவறான வழியில் சென்றதன் பின்னர் அதிலிருந்து அவர்களை மீட்பதற்கு நேரம் செலவழிப்பதையும் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காக பணத்தை விரயம் செய்வதையும் விட அறிவுடைமையானதாக அமையும்.

பியாஸ் முஹம்மத்...

# வாசிப்பு ஓர் இறைவழிபாடா?

இறை வழிபாடு என்பது இறைவனின் கட்டளையை நிறைவேற்றுவதாகும். 'தொழுவீராக...', 'நோன்பு நோற்பீராக...' என்பவை இறைக்கட்டளைகளாக இருக்கின்றன. அவை மனமார ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. அவை வழிபாடுகள் எனும் தகுதியைப் பெறுகின்றன.

இதே போன்ற ஓர் இறைக்கட்டளைதான் 'வாசிப்பீராக...' என்பதும் ஆகும். தொழுகை, நோன்பு போன்ற வழிபாடுகள் எல்லாம் பின்னாளில்தான் கடமையாக்கப்பட்டன.

ஆனால் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு இறைவனிடமிருந்து வந்த முதல் கட்டளையே **இக்ரஹ் வாசிப்பீராக** என்பதுதான். **ஓதுவீராக.... படைத்த உம் இறைவனின் திருப்பெயர் கொண்டு...'(அல் குர்ஆன் 96:1).**

இந்த முதல் வசனமே வாசிப்பதும் ஓதுவதும் அறிவு தேடுவதும் இறைகட்டளையாகவே அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அதனால் தொழுவதைப் போன்று நோன்பு நோற்பதைப் போன்று ஸக்காத் கொடுப்பதைப் போன்று வாசிப்பதும் இறை கட்டளை தான். அதுவும் முஸ்லிம்கள் மீது கடமையாகவே அமைந்திருக்கின்றது.

ஆன போதிலும் அல்லாஹ் வாசிப்பதற்கு அளித்துள்ள முக்கியத்துவத்தை பெரும்பாலானவர்கள் அறிந்து கொள்ளாதவர்களாகவே இருக்கின்றனர். இது கவலைக்குரிய நிலைமையாகும். கல்வியையும் அறிவையும் வலியுறுத்தும் வசனங்கள் அல் குர்ஆனில் பரவலாகக் காணப்படுகின்றன.

படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருள் குறித்தும் சிந்தித்துப் பாருங்கள் என மனிதர்களிடையே சிந்திக்கும் பழக்கத்தைத் தூண்டுகிறது அல் குர்ஆன். அதேபோன்று **ஒட்டகங்களை இவர்கள் பார்க்கவில்லையா, அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்று! வானத்தைப் பார்க்கவில்லையா அது எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது என்று! மலைகளைப் பார்க்கவில்லையா அவை எவ்வாறு ஊன்றப்பட்டுள்ளன என்று! பூமியைப் பார்க்கவில்லையா, அது எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது என்று." (குர்ஆன் 88: 1720)**

**'அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது இவர்களுடைய உள்ளங்கள் மீது தாழிடப்பட்டு விட்டதா? (47:24)** என்றும் அல் குர்ஆன் கேள்வி எழுப்பி இருக்கிறது.

இத்தகைய குர்ஆன் வசனங்கள் சாதாரண நம்பிக்கையாளர்களிடம் மட்டுமல்ல, பெரும் பெரும் கலீஃபாக்களின் கவனத்தையும் கூட அறிவின் பக்கம் ஈர்த்தன.

பாக்தாதை ஆட்சி செய்த கலீஃபா ஹாரூன் ரஷீத் காலத்தில் இலட்சக்கணக்கான நூல்கள் அடங்கிய பெரும் நூலகம் ஒன்று இருந்ததாகவும் உலகின் பல பாகங்களில் இருந்தும் மாணவர்கள் கல்வி கற்பதற்காக பாக்தாதில் வந்து குவிந்தனர் என்று வரலாறு கூறுகிறது.

ஒருமுறை நபி (ஸல்) அவர்கள், **இரவு முழுக்க இறைவனை நின்று வணங்குவதைவிட ஒரு மணி நேரம் இறைவனின் படைப்புகள் குறித்துச் சிந்திப்பது நல்லது'** என்று குறிப்பிட்டார்கள்.

தம்முடைய தோழர் ஒருவரை நபிகளார் அழைத்து, யூதர்களின் மொழியைக் கற்றுக்கொள்ளும்படிக் கட்டளையிட்டார்கள். அந்தத் தோழர் பதினைந்து நாள்களில் யூத மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டார். கடிதங்கள் எழுதுவதற்கு அவரைத் தம் உதவியாளராக நபிகளார் பயன்படுத்திக்கொண்டார்கள்.

ஹிஜ்ரி முதல் ஐந்து நூற்றாண்டுகள் கலை, இலக்கியம், அறிவியல் அனைத்தும் முஸ்லிம்களின் கையில்தான் இருந்தன என்று வரலாறு கூறுகிறது.

இதற்குக் காரணம் வாசிப்பும் வழிபாடுதான் என்பதை அவர்கள் உணர்ந்திருந்ததுதான்.

ஆனால் காலப்போக்கில் இஸ்லாம் என்பது தொழுகை, நோன்பு என்று பள்ளிவாசலுக்குள் மட்டுமே சுருக்கிப் பார்க்கப்பட்டது. உலகக் கல்வி, மார்க்கக் கல்வி என்று கல்வி எப்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டதோ அன்றே முஸ்லிம்களின் அறிவு வளர்ச்சி குன்றத் தொடங்கிவிட்டது.

இழந்துவிட்ட அந்த அறிவின் பொற்காலம் மீண்டும் ஏற்பட வாசிப்பும் வழிபாடுதான் என்று உணரும் நிலை ஏற்பட வேண்டும். **"என் இறைவனே, எனக்கு அதிகமான ஞானத்தை வழங்குவாயாக"** என்று இறைஞ்ச வேண்டும். **(அல் குர்ஆன் 20:114).** அப்போது முஸ்லிம்கள் மீண்டும் அறிவில் முன்னிலைக்கு வருவார்கள். அதுவே இன்றைய தேவையாகும்.

அப்துல்லாஹ்...

# உரிய நேரத்தை தவறவிடலாகாது !

ஒவ்வொரு முஸ்லிமின் பார்வையிலும் நேரகாலம் முக்கியத்துவம் மிக்கவையாகவும் பெறுமதியானவையாகவும் இருக்க வேண்டும். அல்லாஹ்தஆலா சில நேர வேளைகளை விசேடமானவையாக ஆக்கி வைத்துள்ளான். அதனால் அந்த நேரகால வேளைகளை அறிந்து தெரிந்து கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதன் ஊடாக அந்த நேரகால வேளைகளை உச்சளவில் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

அந்த வகையில் இரவு வேளைகளில் இரவின் கடைசிப்பகுதி மிகச் சிறப்பான பகுதியாக விளங்குகிறது. அதாவது பஜ்ர் தொழுகைக்கு முந்திய ஸஹருடைய நேரமாகும். இந்நேரத்தில் அல்லாஹ்தஆலா கீழ்வானத்துக்கு இறங்கி அடியாளர்களுடன் உரையாடுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ள ஹதீஸ், முஸ்லிமில் பதிவாகியுள்ளது.

சுவனத்தைப் பெறத் தகுதியான முத்தகீன்களின் முக்கிய பண்புகளில் ஒன்றாக இந்நேரங்களை அவர்கள் பயன்படுத்துவார்கள் என அல் குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**'நிச்சயமாக முத்தகீன்கள் (சுவனத்தின்) சோலைகளிலும், நீரூற்றுக்களிலும் இருப்பார்கள். அவர்கள் தமது இரட்சகன் அவர்களுக்கு கொடுத்ததை (திருப்தியுடன்) எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் அதற்கு முன்னர் நன்மை செய்வோராகவே இருந்தார்கள். இரவில் சொற்ப நேரமே தூங்கக்கூடியோராக இருந்தார்கள். மேலும் அவர்கள் ஸஹர் நேரங்களில் பாவமன்னிப்புக் கோருவார்கள்' (அல் குர்ஆன் தாரியாத் 1518)**

'மாதங்களில் புனித மாதங்கள் நான்கு உள்ளன. அவற்றில் போராடவோ, அநியாயம் செய்யவோ முடியாது. ரஜப், துல்கஃதா, துல்ஹிஜ்ஜா, முஹாரம் என்ற மாதங்கள் பற்றி அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது. **'வானங்கள், பூமியைப் படைத்த நாளில் அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளவாறு மாதங்களின் எண்ணிக்கை அல்லாஹ்விடத்தில் பன்னிரண்டு ஆகும். இவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவையாகும். அதுதான் நேரான மார்க்கமுமாகும். எனவே அவற்றில் நீங்கள் உங்களுக்கு அநீதி செய்து கொள்ளாதிருங்கள். (அல் குர்ஆன் சூரா தவ்பா 36)**

இது பற்றி மற்றுமோர் இடத்தில் அல்லாஹ் இப்படி விளக்குகின்றான். **'புனித மாதங்களில் போராடுவது பற்றி அவர்கள் (நிராகரிப்பார்கள்) உம்மிடம் கேட்கின்றனர். அதற்கு நீர் கூறும் அவற்றில் போரிடுவது பெரிய குற்றமாகும். (அல் குர்ஆன் பகரா 217)**

ஒற்றை நாட்களில் அரபா நாள் சிறந்தது போன்று, இரவுகளில் லைலதுல் கத்ர் இரவு சிறப்புமிக்கது. இதுபற்றி அல்குர்ஆன் குறிப்பிடும்போது, **'அது ஆயிரம் மாதங்களைவிட சிறந்தது' (அல் குர்ஆன் கத்ர் 3)** என்று கூறுகின்றது. யார் இந்த இரவை அமல்கள் மூலம் உயிர்ப்பித்து அதன் பாக்கியங்களை அடைந்து கொள்வாரோ அவர் உண்மையில் உயர்ந்த பாக்கியம் பெற்றவர் ஆவார்.

நாட்களில் துல் ஹிஜ்ஜாவின் ஆரம்பப் பத்து நாட்களும் விசேடமானவை என ஹதீஸ்கள் குறிப்பிடுகின்றன. இந்தச் செய்தியை அல் குர்ஆன் சத்தியமிட்டுக் குறிப்பிடுவதை சூரா பஜ்ரின் ஆரம்ப வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. **'விடியற்காலையின் மீது சத்தியமாக, பத்து இரவுகள் மீது சத்தியமாக இரட்டையின் மீதும் ஒற்றையின் மீதும் சத்தியமாக... (அல் குர்ஆன் பஜ்ர் 13)**

**'(நபியே...) சூரியன் (உச்சியை விட்டு) சாய்ந்ததில் இருந்து இரவின் இருள் சூழும் வரையில் (ளுஹர்), அஸ்ர், மஃரிப், இஷா ஆகிய தொழுகைகளையும் பஜ்ர் தொழுகையையும் நிறைவேற்றுவீராக.... நிச்சயமாக பஜ்ர் தொழுகையானது (மலக்குகள்) சமூகமளிக்கும் தொழுகையாக உள்ளது. மேலும் நீர் உமக்கு உபரியாக இரவில் (அல் குர்ஆனை ஓதுவதன்) மூலம் தஹஜ்ஜத் தொழுவீராக. (இதன் மூலம்) உமது இறைவன் 'மகாமம் மஹ்மூத்' எனும் புகழ்பெற்ற இடத்தில் உம்மை எழுப்பப்போதுமானவன்'. (அல்குர்ஆன் இஸ்ரா 7879)**

ஆகவே அல்லாஹ் சிறப்பித்து வைத்திருக்கும் நேரவேளைகளை உச்சளவில் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப எமது நாளாந்த செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்வோம்.

ஏ.எம். முஹம்மத் ஸப்வான்...
சீனன் கோட்டை, பேருவளை.

# அல்லாஹ்வை நினைவுகூருவோம் !

இன்றைய நவீன யுகத்தில் மனித வாழ்வு இயந்திரமயமாகியுள்ளது. அவசரம், பதற்றம், பரபரப்பு என்பன மனித வாழ்வை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றன. நிம்மதி, அமைதியைத் தேடி அலையும் நிலை மனிதனுக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் அல்லாஹ்தஆலா தன் அருள்மறையில், 'நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வின் நினைவால் அமைதியுறுகின்றன. கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் நினைவால் தான் உள்ளங்கள் அமைதியுறுகின்றன' (அல் குர்ஆன்:13:28) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

இவ்வசனம் இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்பு நபி(ஸல்) அவர்கள் ஊடாக உலகிற்கு அருளப்பட்ட போதிலும் அது இன்றும் என்றும் உயிரோட்டம் மிக்கதாகவே உள்ளது. அல்லாஹ்வை நினைவு கூறுவதன் மூலம் நிச்சயம் உள்ளம் அமைதியடையும். வாழ்வில் நிம்மதி கிடைக்கப்பெறும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வில் அமைதி, நிம்மதி இன்றியமையாததாகும். அதனால்தான் அல்லாஹ்தஆலா மனிதன் தன்னை நினைவுகூறுவதன் அவசியத்தை அருள்மறையின் பல இடங்களில் எடுத்தியம்பி இருக்கின்றான்.

'அல்லாஹ்வை அதிகமதிகம் நினைவு கூறுங்கள், திக்ர் செய்யுங்கள்' (62:10) என்றும் 'என்னுடைய நினைவை அலட்சியப்படுத்தி விடாதீர்கள்' (20:42) என்றும் 'இறைவனை மறந்துவிட்ட மக்களைப் போன்று நீங்களும் ஆகிவிடாதீர்கள். இறைவன் அவருடைய ஆன்மாக்களையே அவர்களை மறக்கடிக்க வைத்துவிட்டான்.' (59:19) என்றும் 'ஈமான் கொண்டவர்களே! பொருட் செல்வமும், குழந்தை செல்வமும், அல்லாஹ்வை திக்ர் செய்வதை விட்டும் உங்களை அலட்சியப்படுத்திவிட வேண்டாம். எவர் இவ்வாறு செய்கிறாரோ நிச்சயமாக அவர்கள்தாம் நஷ்டமடைந்தவர்கள் (63:09) என்றும் குறிப்பிட்டு வைத்திருக்கின்றான்.

அதேநேரம் நபி(ஸல்) அவர்கள் ஒரு தடவை, முஃபர்ரித்துன் முன்னேறிச் சென்றுவிட்டார்கள் என்று சொன்னபோது, யாரஸூலல்லாஹ்! முஃபர்ரித்துன் யார்? என ஸஹாபிகள் கேட்டனர். அல்லாஹுதலாவின் திக்ருக்காகத் தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொண்டவர்கள், திக்ரு அவர்களின் சுமையைக் குறைத்துவிடும். எனவே, கியாமத் நாளன்று அவர்கள் சுமை குறைந்தவர்களாக வருவார்கள் என நபி (ஸல்} அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம் திர்மீதி)

'என் அடியான் என்னை நினைத்து, அவன் உதடுகள் என் நினைவில் அசைந்து கொண்டிருக்கும் போது, நான் அவனுடன் இருக்கிறேன்' என்று அல்லாஹுதலா கூறுவதாக நபி (ஸல்) குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம் இப்னு மாஜா)

அல்லாஹ்வை நினைவுகூறுவதன் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் எடுத்தியம்பும் குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் நிறையவே காணப்படுகின்றன. எனவே அல்லாஹ்வை அடிக்கடி அதிகமதிகம் நினைவுகூறுவோம். அவனது அருளை அடைந்துகொள்வோம்.

## சுயாதீன விசாரணைகளை... (03ஆம் பக்கத் தொடர்)

இடம்பெறலாம் என புலனாய்வு பிரிவினர் தகவல் வழங்கியபோதிலும் முன்னாள் ஜனாதிபதியும் பாதுகாப்பு அதிகாரிகளும் தாக்குதலை தடுக்க தவறிவிட்டனர் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீட்டினை பெறுவதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும். நிதிகளை வழங்கும்போது பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் பிரதிநிதிகளை கலந்தாலோசனை செய்யவேண்டும் எனவும் ஐநா வேண்டுகோள் விடுத்துள்ளது.

மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் பரிந்துரைகளை மீண்டும் வலியுறுத்தியுள்ள லோரன்ஸ், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளின் முடிவுகளை இலங்கை அரசாங்கம் வெளியிட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கை அரசாங்கம் சர்வதேச உதவியுடன் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் ஆதரவுடன் சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். குற்றவாளிகளை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்த வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## குற்றவாளிகள் இனங்காண... (03ஆம் பக்கத் தொடர்)

அவ்வாறு செயல்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபை சமர்ப்பித்துள்ள மோதல்கள் அதனால் கடுமையாக காயமடைந்துள்ளவர்கள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதல்கள் அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் நேற்று சபையில் விசேட உரையொன்றின் மூலம் கருத்துக்களை முன் வைக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

நாட்டில் சிறந்த போக்குவரத்து சேவையை வழங்கும் நிறுவனமாக இலங்கை போக்குவரத்து சபை செயல்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் மீது தனியார் போக்குவரத்து பஸ் ஊழியர்கள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரித்து காணப்படுகிறது.

அந்த வகையில் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்போருக்கு எதிராக பொது சொத்துக்கள் சட்டத்தின்படி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நான் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன்.

போட்டிக்கு பஸ்களை செலுத்தி இலங்கை போக்குவரத்து சபை பஸ்களை சேதப்படுத்தும் நபர்களுக்கு எதிராகவும் ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தி படுகாயங்களுக்கு உட்படுத்தியுள்ள நபர்கள் தொடர்பில் நேரடி முறைப்பாடுகளை செய்யுமாறும் சம்பந்தப்பட்டவர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அமைச்சு பதவியிலிருந்து...

வழங்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எனினும் விவசாய அமைச்சராக மஹிந்த அமரவீர தொடர்ந்தும் செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மின்கம்பிகளை திருடிய...

விசாரணையில் குறித்து இருவரும் ஏற்கனவே மின்கம்பிகளை திருடியமை தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட இருவரும் மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## பாடசாலைகளுக்கு...

அதேவேளை க.பொ.த உயர்தர பரீட்சைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாவதுடன் நாடு முழுவதுமுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கை தொடர்பான மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை இறுதிகட்ட கற்றல் நடவடிக்கைகள் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முறையான தேர்தல்... (03ஆம் பக்கத் தொடர்)

முழு அரசியல் கட்டமைப்பையும் புறக்கணிக்கும் நிலையே உருவாகும் என்றும் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் செயற்பாடுகளின் ஆரம்பமாகவே தேர்தல் செலவுகளை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் அமைந்துள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றியஅவர்,

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப் போடும் ஒரு நடவடிக்கையாகவே தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் கொண்டு வரப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தினூடாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

தேர்தல் செலவினத்தை கட்டுப்படுத்தும் வரைபை தயார்படுத்த குறைந்தது இருமாத காலம் அவசியமென ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டத்துக்கமையவே தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. தேர்தல் தொடர்பில் ஆணைக்குழுவே உரிய தீர்மானம் எடுக்க வேண்டும். ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் நாம் தலையிட முடியாதென்றும் அமைச்சர் தெரிவித்தார்

இதன்போது குறுக்கிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க,

தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டம் சிறந்தது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்,ஆனால் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திப் போடுவதற்கு இந்த சட்டமூலம் ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகின்றதா என்ற சந்தேகம் காணப்படுகிறது என்றும் தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு தாக்கம் செலுத்தாது என அரசாங்கம் குறிப்பிடுவதை நம்ப முடியவில்லை என்றும் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த நீதியமைச்சர்:

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

முறையற்ற தேர்தல் முறை, முறையற்ற அரச நிர்வாகத்தை தோற்றுவிக்கும். முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்கவின் படுகொலைக்கும் முறையற்ற தேர்தல் முறை ஒரு காரணமாக அமைந்தது.

நாட்டு மக்களின் அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கை முழுமையாக சிதைவடைந்துள்ளது.சிறந்த அரசியல் கட்டமைப்பை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தேர்தல் செலவினம் தொடர்பில் கட்டுப்பாடுகள் விதித்தால் தான் முறையான அரச நிர்வாக கட்டமைப்பை தோற்றுவிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய மீனவரின் சட்டவிரோத...

கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு போதுமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென கடற்றொலில் அமைச்சருக்கு எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடற்றொழில் சார் அமைப்புக்கள் இரண்டின் பிரதிநிதிகளினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்புடைய சட்டங்களை முழுமையாக பயன்படுத்தி இந்தச் சட்ட விரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான எழுத்தாணையை வழங்குமாறு மேல் முறையீட்டு நிதிமன்றத்திடம் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இந்த எழுத்தாணை கோரும் வழக்கின் முதலாவது பிரதிவாதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த மற்றும் இலங்கை கடலோர பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுர ஏக்கநாயக்க ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவரும் ஏற்பாட்டாளருமான என் எம் அமீன் தலைமையில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணம் மேற்கொண்ட போரத்தின் பிரதிநிதிகள் ராமேஸ்வரத்தில் உள்ள இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் வாழ்ந்த இல்லத்தை நேரில் பார்வையிட்டனர். இதன்போது போரத்தின் தலைவி திருமதி புர்கான் பீ இப்திகார் தலைமையில் அப்துல் கலாமின் பேரனான சேக் சலீமுடன் எடுத்துக் கொண்ட படம். (படம்: எம் எஸ் எம் ஸாஹிர்)

# வேட்பாளர்களுக்காக எரிபொருள் கோட்டா அதிகரிப்பு சாத்தியமில்லை

### பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எரிபொருள் கோட்டாவை அதிகரிக்குமாறு கோரிக்கைகள் கிடைத்துள்ள போதிலும், அதற்கான அனுமதியை வழங்க முடியாதென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையை கருத்திற் கொண்டு எரிபொருள் கோட்டாவை அதிகரிப்பது நடைமுறையில் சாத்தியமற்றதென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் மொஹமட் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இக் கலந்துரையாடலின் போது, எரிபொருள் கோட்டாவை அதிகரிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர். தற்போது எமக்குள்ள மிகப் பெரிய பிரச்சினை எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு டொலர்கள் தேவைப்படுவதேயாகும். டொலர்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கையின் பணம் தேவைப்படுகிறது. எரிபொருள் கொள்வனவுக்கு எமக்கு தேவையான ரூபாய்கள் எங்களிடம் இல்லை. நாங்கள் அதை மிகத் தெளிவாகக் கூறியுள்ளோம்." என அவர் தெரிவித்தார்.

வேட்பாளர்களின் எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கு ஏதேனும் ஏற்பாடுகள் உள்ளதா? என அவரிடம் கேட்கப்பட்டபோது,

"இதுபோன்ற கோரிக்கைகள் அதிகளவிலுள்ளன, ஆனால் நாங்கள் அதில் எந்த முடிவும் எடுக்கவில்லை. இலங்கையின் எரிபொருள் தேவை சுமார் 40% குறைந்துள்ளது. அந்த கோரிக்கைக்கு ஏற்ற பணத்தை நாங்கள் வழங்குகிறோம். இதை மீண்டும் அதிகப்படுத்தினால் ரூபாய் தேவைப்படுகிறது. எனவே இந்த நடைமுறைச் சிக்கல்களை நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன் " என்றும்அவர் தெரிவித்தார்.

## யாழில் கைதான வேலன்...

இந்த நிலையில், சட்டவிரோதமான ஒன்றுகூடலில் ஈடுபட்டமை, களேபரத்தில் ஈடுபட்டமை, காயமேற்படுத்தியமை, அரச ஊழியர்களுக்கு இடையூறு விளைவித்தமை, அத்துமீறி பிரவேசித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் அவர் நேற்றுமுன்தினம் (18) கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

யாழ்.நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் அவர் நேற்று(19) விடுவிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டது.

## கடன் மறுசீரமைப்புக்கு

டொலர் நிதி உதவியை பெறுவதற்கு இலங்கைக்கு அதிக கடன்களை வழங்கிய இந்தியா மற்றும் சீனாவின் ஆதரவு அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இதுதொடர்பாக இந்தியா மற்றும் சீனாவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இலங்கையானது, இந்தியாவிற்கு ஒரு பில்லியன் டொலர் கடன்களை வழங்கவேண்டியுள்ளது. இதுவும் கடன் மறுசீரமைப்பின் கீழ் வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா கடந்த வருடம் ஜனவரி முதல் ஜூலை வரையான காலப்பகுதிக்குள் இலங்கைக்கு துரித உதவியாக 4 பில்லியன் டொலர்களை வழங்கியது.

எவ்வாறாயினும், இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா ஆதரவளிப்பதாகவும், இதுதொடர்பாக சர்வதேச நாணய நிதியத்திற்கு இந்தியா அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 61 மேலதிக வாக்குகளால்...

நாள் விவாதமாக சபையில் இடம்பெற்ற நிலையில் விவாதத்தின் இறுதியில் பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியும் எதிர்க்கட்சி பிரதம கொரடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல சட்டமூலத்தை நிறைவேற்ற வாக்கெடுப்பைக் கோரினார்.

அதனையடுத்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் தேர்தல் செலவினத்தை ஒழுங்குப்படுத்தல் சட்டமூலத்திற்கு ஆதரவாக 97 வாக்குகளும் எதிராக 36 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதற்கிணங்க சட்டமூலம் 61மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. நேற்றைய இந்த வாக்களிப்பில் 91 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

எதிரணி தரப்பிலிருந்து ஏ. எல். எம் அதாவுல்லா, ஜோன் செனவிரத்ன ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

இந்த சட்டமூலம் மீதான வாக்கெடுப்பில் தமிழ் தேசியக்கட்சிகள் பங்கேற்கவில்லை. அதேபோன்றே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர்களான மனோகணேசன், திகாம்பரம் ஆகியோர் பங்கேற்கவில்லை.

இதேவேளை பாராளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற புனர்வாழ்வு அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்திலும் பங்கேற்காதது போலவே இந்த தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் மீதான விவாதத்திலும் தமிழ்க்கட்சிகள் எதுவும் பங்கேற்கவில்லை. முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தவரையில் புனர்வாழ்வு அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தில் மட்டும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீம் எம்.பி. மட்டும் உரையாற்றியிருந்தார்.

## தேர்தல் செலவு மேலும்...

அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்நிய செலாவணி, தேசிய பணம் பெறும் வழிகள் அனைத்தும் தடைப்பட்டுள்ளதால் அரச நிதி முகாமைத்துவம் மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

திறைசேரிக்கு வருமானமாக 147 பில்லியன் ரூபாய் கிடைத்துள்ளது. அதில் 88 பில்லியன் அரச ஊழியர்களின் சம்பளத்தை செலுத்துவதற்கும் ஓய்வூதிய கொடுப்பனவுகள் மற்றும் சமூர்த்தி கொடுப்பனவுகளுக்கு 30 பில்லியனும் உரத்தைப் பெற்றுக் கொள்ள 6.5 பில்லியனும் சுகாதார அமைச்சுக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளுக்காக 8.7 பில்லியனும் ஏனைய செலவுகளை உள்ளடக்கி 154 பில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

திறைசேரியின் வருமானம் 147 பில்லியன் ஆக இருந்தபோதும் செலவு 154 பில்லியன் என்றால் அந் நிலைமையை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்ற கேள்வி எழும். இந்த நிதி வெளிநாட்டு கடன் மற்றும் வட்டியை செலுத்துவதற்கு செலவிடப்பட்ட தொகையை உள்ளடக்காமலேயே கணக்கிடப்பட்டுள்ளது.அதற்காக டிசம்பர் மாதத்தில் 182 பில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

மேலும் ஓய்வூதிய கொடுப்பனவுகள் 2000ஆம் ஆண்டு 152 பில்லியன், 2005ஆம் ஆண்டு 185 பில்லியன், 2010ஆம் ஆண்டு 478 பில்லியன் என அதிகரித்துள்ளது.

இந் நிலைமையில் செலவுகள் குறித்து கவனம் செலுத்தும் போது அவதானத்துடன் செயல்படவேண்டும்.

சிறு தவறு ஏற்பட்டாலும் அதனால் பாதிக்கப்படுவது பொதுமக்களே என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஜனவரி 23 வரை...

அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த நாட்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வருவதால், தபால் மூலம், விண்ணப்பங்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் 23ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை, தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டங்களை மீறுவது தொடர்பான முறைப்பாடுகளை சமர்பிப்பதற்காக தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் ஒன்றை தேர்தல் ஆணைக்குழு நிறுவியுள்ளது.

அதன்படி தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல், வட்ஸ்அப், வைபர் அல்லது பேஸ்புக் மூலம் தேர்தல் சட்டங்களை மீறுவது தொடர்பான முறைப்பாடுகள் குறித்த நிலையத்துக்கு சமர்ப்பிக்க முடியும்.

## சிங்கள சினிமாவின் பிரபல...

இலங்கை சினிமாவை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கு பெரும் பங்களிப்பு வழங்கியுள்ள சுமித்ரா பீரிஸின் மறைவு நாட்டிற்கும்,சினிமாத் துறையுடன் தொடர்புடைய அனைத்து கலைஞர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் பெரும் இழப்பாகுமென தெரிவித்த அமைச்சர் அவரது மறைவு தொடர்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

**எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ**

திரைப்படத் துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய பெண்மணியாக சுமித்ரா பீரிஸை அடையாளப்படுத்த முடியுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். காலஞ்சென்ற லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸுடன் கைகோர்த்து சுமித்ரா பீரிஸ் இந்த நாட்டின் சினிமாத் துறையை மேம்படுத்த பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

அவரது மரணம் தொடர்பில் பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்கள் சார்பிலும் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதாகவும் எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டார்.

**அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க**

இலங்கையின் சினிமாத் துறைக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ள சுமித்ரா பீரிஸின் இழப்பு இன்றைய தினத்தை விட எதிர்காலத்திலேயே பெரிதாக உணரப்படுமென கலாசார அலுவல்கள்அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

சிலர் செயற்படுவதற்கு அச்சமடைந்த விடயங்களை துணிச்சலுடன் கையேற்று சுமித்ரா பீரிஸ் அதனை நடைமுறைப்படுத்தியமை அவரது விசேட திறமையாகும்.சினிமாத் துறையை இந்தளவுக்கு உயர் மட்டத்துக்கு மேம்படுத்த அவர் அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

அவரது கணவரான காலஞ்சென்ற லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் முன்னெடுத்த பணிகளை சுமித்ரா பீரிஸ் மேற்கொண்டு வந்துள்ளார். ஏனையோர் அறியாத பக்கங்களை இணங்கண்டு சினிமா ரசிகர்களுக்கு நெருக்கமாக செயற்பட்டு அதனை ரசிகர்களுக்கு அண்மித்ததாக கொண்டு வர பாடுபட்டவர் எனவும் தெரிவித்தார்.

## கல்முனைக்கு வழங்கப்பட்ட...

உச்ச நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்த்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழு, இரு அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலித்தபோதே இந்த உத்தரவு பிறப்பித்துள்ளது.

சாய்ந்தமருதைச் சேர்ந்த அஹமட் லெப்பை மொஹமட் சலீம் மற்றும் அஹமட் ரஹீம் மொஹமட் அஸீம் ஆகிய இருவர் இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அவர்கள் வசிக்கும் பகுதி சாய்ந்தமருது நகர சபைக்கு சொந்தமானதென்றாலும், கல்முனை மாநகர சபைக்கு உரித்தாக்கி அண்மைய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு எதிராக இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் சமூகம் முகம்கொடுக்கும்...

இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார அதனை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

முதலாவது உலக யுத்தத்துக்குப் பின்னர் உலகம் மிகப் பெரிய மாற்றத்துக்கு முகம்கொடுத்து வந்த காலகட்டமே1922 ஆம் ஆண்டாகும். இக்காலப்பகுதியில் கலீபா ஆட்சி முறையை ஒழிக்கும் நடைமுறையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. கலீபா ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கு இந்தியா மிகப் பெரிய இயக்கமொன்றைக் கொண்டிருந்தது. ஆனால் இலங்கையில் அதே காலப்பகுதியில் தான் முஸ்லிம்களின் எண்ணங்களதும் சிந்தாந்தத்தினதும் மையமாகச் செயற்படும் உலமா சபை எனும் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் அப்போதிருந்த சில பிரச்சினைகளுக்கு நாம் இன்றும் முகம்கொடுக்க நேரிட்டுள்ளது.

நாம் இப்போது வித்தியாசமானதொரு உலகத்தில் வசிக்கின்றோம். 1922 ஆம் ஆண்டில் 150 நாடுகளும் அப்போது இருக்கவில்லை. நாம் புதிய நூற்றாண்டில் வசிக்கின்றோம். விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி, அரசியல் உரிமைகளின் முன்னேற்றம் என்ற இந்தப் பின்னணியில் நாம் இலங்கை முஸ்லிம்களின் எதிர்காலத்தைப் பார்க்க வேண்டும்.

இஸ்லாம் மட்டுமன்றி அனைத்து சமயங்களுமே தமது சமயத்தின் அடிப்படைகளையே பார்க்கின்றன. சமயம் கூறும் தூய்மையான அர்த்தங்கள் எவை? அவற்றை எவ்வாறு நவீன உலகத்துடன் இணைப்பது? சமயத்தின் அடிப்படையை நீங்கள் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திற்கு பயன்படுத்த வேண்டும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் பௌத்தம். புத்த பெருமான் கங்கைக் கரைகளில் இருந்து பௌத்த மதத்தைப் போதிக்கும்போது கரையோர நகரிகமே இருந்தது. எனினும் அது இலங்கைக்கு கொண்டுவரப்பட்டபோது பௌத்த சமயத்தில் ஓரளவு அடிப்படையைக் கொண்டிருந்த கரையோர நாகரீகத்தை கட்டியெழுப்ப எம்மால் முடிந்தது. அது கௌதம புத்தருடைய காலத்தில் இல்லை என்பதற்காக நாம் இந்த நாகரீகத்தை நிராகரிக்கவில்லை. எனினும் எம்மால் அந்த நாகரீகத்தை ஏற்றுக் கொள்ள முடிந்தது.

அதுபோன்றே, நாம் அனைவரும் நிகழ்காலத்தில் வாழ்ந்து கொண்டே எதிர்காலத்தைப் பார்க்க வேண்டும். எமது சமயத்தின் அடிப்படையைப் பார்ப்பதற்கு கடந்த காலம் எமக்கு உதவியாக அமையும். எந்தவொரு சமயமும் வெறுப்புச் சமயம் அல்ல. அது வெறுப்புச் சமயமாக இருக்கவும் முடியாது. அது நிச்சயமாக இரக்கமானதாகவே இருக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

சமய தலைவர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமால் குணரத்ன, பாகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## திருட்டு குற்றத்திற்கு நால்வரின்...

கந்தகாரில் உள்ள கால்பந்து மைதானத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் முன்னிலையில் திருட்டு உள்ளிட்ட குற்றசாட்டப்பட்ட 9 பேரை தலிபான்கள் அழைத்து வந்தனர். அவர்களுக்கு 35 முதல் 39 முறை கசையடி அளிக்கப்பட்டது.

பின்னர் திருட்டு குற்றத்துக்காக 4 பேரின் கைகளை வெட்டி துண்டித்தனர். கடந்த 2021ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு கடந்த மாதம் 7ஆம் திகதி பராமாகாணத்தில் ஒருவருக்கு மரண தண்டனையை நிறைவேற்றினர்.

இதேபோல் பல்வேறு குற்றத்துக்காக பலருக்கு கசையடி உள்ளிட்ட தண்டனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதே போன்ற தண்டனைகளுக்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு கிளம்பியபோதும் அதை தலிபான்கள் அரசு கண்டு கொள்ளவில்லை.

தூதுவர் அமீர் அஜ்வத் எழுதிய

# இலங்கை - ஓமான் உறவுகள் பற்றிய ஆங்கில நூல் கொழும்பில் வெளியீடு



ஓமான் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் எழுதிய "இலங்கை ஓமான் உறவுகள்; நேற்று, இன்று, நாளை" என்ற ஆங்கில நூல் வெளியீடு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய

கற்கை நிறுவனத்தில் இலங்கை வெளிவகார அமைச்சு மற்றும் இலங்கையிலுள்ள ஓமான் நாட்டுக்கான தூதரகத்தின் அனுசரணையுடன் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருனி விஜயவர்தன, இலங்கைக்கான ஓமான் தூதுவர் அஹ்மத்அலி அல் றஷ்தி மற்றும் நூலாசிரியர் தூதுவர் அமீர் அஜ்வத் ஆகியோர் இணைந்து நூலை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்தனர்.

நூல் வெளியீட்டு விழாவின் ஆரம்ப உரையை நிகழ்த்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வேலைப்பழுமிக்க தனது தூதரகப் பணிகளுக்கு மத்தியிலும் நூல் எழுதும் சிரமமான பணியை மிகச்சிறப்பாகச் செய்துள்ள நூலாசிரியரைப் பாராட்டினார். இலங்கைக்கும் ஓமானுக்குமிடையிலான நேரடி கடல் போக்குவரத்து தொடர்பில் நூலாசிரியரின் முன் மொழிவுகளின் சாத்தியத்தை வலியுறுத்தினார்.

இலங்கைக்கான ஓமான் தூதுவர் அஹ்மத் அலி அல் றஷ்தி தனதுரையில், நூலாசிரியரின் இந்த பயனுள்ள முயற்சி. ஓமான் இலங்கைக்கான ஓர் உறவுப் பாலமாக அமையும் என்றார்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நூலாசிரியரின் இந்த முயற்சி ஓர் முன்மாதிரியானதும் எதிர்கால தூதுவர்களுக்கு இந்நூல் ஒரு வழிகாட்டியாகவும் அமையும் என்றார். மத்திய கிழக்கு நாடுகளுடனான மிக நீண்ட கால உறவை மேலும் மேம்படுத்துவது அரசாங்கத்தின் முன்னுரிமைக் கொள்கைகளில் ஒன்றாகும் என வலியுறுத்தினார்.

இலங்கையின் தனியார் துறையை பிரதிநிதித்துவப் படுத்தி விழாவில் உரையாற்றிய தேசிய வர்த்தக சபையின் தலைவர் நன்திக புத்திபால, இலங்கையின் தனியார் துறையுடன் ஓமானின் தனியார் துறையை இணைப்பதிலும் இருதரப்பு விஜயங்களை ஒழுங்கு செய்வதிலும் சிறந்த பங்களிப்புச்செய்த நூலாசிரியரின் முயற்சியைப் பாராட்டியதோடு இந்நூல் தனியார் துறைக்கு ஒரு கையேடாக அமையும் என்றார்.

சர்வதேச அரசியல் மற்றும் ஊடகத் துறை ஆய்வாளருமான கலாநிதி ரங்க கலன்சூரிய நூல் மீளாய்வு உரையை நிகழ்த்தினார்.

புத்தளம் மாவட்டத்தில்

## முஸ்லிம் காங்.-ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டி

*நீர்கொழும்பு தினகரன் நிருபர்*

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தின் நாத்தாண்டிய தேர்தல் தொகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட இருப்பதாக நாத்தாண்டிய பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.எஸ்.எம்.றில்வான் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கோட்டப் பிரிவு அடிப்படையிலேயே நடைபெறவுள்ளது. இதனால் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களான தும்மோதர மற்றும் கொட்டராமுல்ல ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம்களின் கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி எதிர்பார்ப்பதாக பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம்.றில்வான் குறிப்பிட்டார். கொட்டாரமுல்ல கோட்டப் பிரிவில் பல்வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் சார்பாக முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிட உள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

## பேருவளை நகர சபைக்கு அஸாம் பளீல் தலைமையில் சுயேச்சை குழு கட்டுப்பணம்

பேருவளை நகர சபைக்கு அஸாம் பளீல் தலைமையில் சுயேச்சைக்குழுவொன்று நேற்று (19) களுத்துறை மாவட்ட செயலக தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் பேருவளை நகர சபைக்கு பல அரசியல் கட்சிகள் களமிறங்கவுள்ளதோடு பல முன்னணி வர்த்தகர்களும் இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்முறை சுயேச்சைக் குழுவில் தலைமை வேட்பாளராக போட்டியிடும் அஸாம் பளீல், முன்னாள் பேருவளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான மர்ஹூம் எம்.எஸ்.எம். பளீல் ஹாஜியாரின் புதல்வரும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் இளைய சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



மாத்தறை மாவட்ட 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் நேற்று முன்தினம் செலுத்தப் பட்டது. இந்நிகழ்வில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், அமைச்சர் காஞ்சன விஜேசேக உட்பட பிரதேச சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். படம் வெலிகம தினகரன் நிருபர்

## ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்பாளராக தாஹிர் பாஸி

*பாணந்துறை மத்திய குறூப் நிருபர்*

பாணந்துறை பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் எம்.என்.எம். தாஹிர்பாஸி இம்முறை பிரதேச சபைத் தேர்தலில் களமிறங்கவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொட்டவத்தை கிளை சார்பில் தொட்டவத்தை வட்டாரத்தின் வேட்பாளராக இவர் தெரிவு செய்யப்பட்டு இம்முறை தேர்தலில் போட்டியிட ஏகமனதாக இவர் தெரிவாகியுள்ளார்.

இவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் களுத்துறை மாவட்ட இணைப்பாளருமாவார்.

கடந்த காலங்களில் பாணந்துறை பிரதேச சபையில் ஆறு முஸ்லிம்கள் உறுப்பினர்களாக இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரம் மாவட்டத்தில்

## காட்டு யானை தாக்குதலில் உயிரிழந்த குடும்பங்களுக்கு இழப்பீட்டு தொகை

*அநுராதபுரம் தினகரன் நிருபர்*

அநுராதபுரம் மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரண்டு கோடியே 40 இலட்சம் ரூபா நிதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட இழப்பீட்டு பிரிவு தெரிவிக்கின்றது.



கடந்த 2022 ஆம் ஆண்டு அநுராதபுரம் மாவட்டத்தில் யானை மனித மோதலின் போது உயிரிழந்தவர்களுக்கே இத்தொகை வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் மாத்திரம் அநுராதபுரம் மாவட்டத்தில் 37 பேர் காட்டுயானைகளின் தாக்குதலில் பலியாகியுள்ளனர். மாவட்டத்தில் 22 பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் 15க்கும் அதிகமான பிரிவுகளில் இப்பிரச்சினை காணப்படுகின்றதுடன் மத்திய நுவரகம் பளாத்த மற்றும் கெப்பித்திகொள்ளாவ பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே அதிக உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

உயிரிழந்த 37 பேரில் இருவர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையினை வழங்குவதற்காக வேண்டி சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர் பிரிவுகளில் அவர்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அவர்களுடைய விபரங்கள் கிடைத்ததும் அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகை சம்பந்தப்பட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் இலக்கியக்களம் - 367

சைவப்புலவர் கந்தையா பத்மானந்தன் தலைமையில் இன்று 20ம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5.30 மணிக்கு இலக்கியக் களம் நிகழ்ச்சியில் "ஜீவநதி சிறப்பிதழ்கள் ஒரு கண்ணோட்டம்" என்னும் தலைப்பில் மருத்துவர் ச.முருகானந்தம் உரை நிகழ்த்தவுள்ளார்.

## அறிவோர் ஒன்றுகூடல் - 800

கல்வி அமைச்சின், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.இதயராஜா தலைமையில் எதிர்வரும் 25ம் திகதி புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் "உன்னை அறிந்து கொள் மானுடச் சூழலிற் பார்வை" என்னும் தலைப்பில் சீர்மியச் செயற்பாட்டாளர் திரு.எஸ்.நாதன்சர்மா உரை நிகழ்த்தவுள்ளார்.

## கல்விக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய ஜெமீமா அகமடொன்



வடமேல் மாகாண முஸ்லிம் மகளிர்கள் கல்வியில் பின்தங்கியிருந்த காலகட்டத்தில் அவர்களது கல்வி முன்னேற்றத்திற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றியவர் திருமதி ஜெமீமா அகமடொன். ஆசிரியராக, அதிபராக சமூக சேவகியாக அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. புத்தளம் பாத்திமா மகளிர் மகாவித்தியாலயத்தில் பல வருட காலம் அதிபராக சேவையாற்றி இக் கல்விக்கூடத்தை உன்னத நிலைக்கு கொண்டு வருவதில் முன்னோடியாக செயல்பட்டவர். ஏனைய சமூகத்தவர் மத்தியிலும் பெரும் நன்மதிப்பைப் பெற்றவராக விளங்கியவர்.

ஜெமீமா அகமடொன் அவர்கள் எழுதிய "சுயசரிதை" ஆங்கில நூல் அண்மையில் ஸூம் இணையதளம் மூலம் வெளியிடப்பட்டது. இதற்கான நிகழ்வு சிலாபம் சிங்கபுர வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது. இதன் போது, சமூகத்தில் தோன்றும் இத்தகைய பெண்களின் முக்கியமானவராக கருதப்படக் கூடிய ஜெமீமா அகமடொன் அவர்களைப் பிரமுகர்கள் பலரும் பாராட்டிப் பேசியதுடன் வெளிநாடுகளில் வாழும் அவரது புதல்வர்களும் இணைய தளம் மூலம் நிகழ்வில் இணைந்து கொண்டிருந்தனர். திருமதி பின்தாரி சாபர், திருமதி ரிஸ்கியா மற்றும் பௌஃஸில் ரோஷான் ஆகியோர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இந் நூலின் விற்பனையில் கிடைக்கும் முழு நிதியும் அறக்கட்டளை ஒன்றுக்கு அன்பளிப்பாக வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.01.18
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5004 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.13,598,100.00
ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 6 3 8 5 1 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3246 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 72,212,634.40
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 01 10 47 66

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 313 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,564,035.80
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 01 05 23 35 — விசேட இலக்கினம் மகரம்

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1459 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,508,142.00
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 4 9 1 8 3 2

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1034 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 142,746,171.60
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 15 18 51 58

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1352 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 293,770,506.00
ஆங்கில எழுத்து C — சுப்பர் இலக்கம் 06 — வெற்றி இலக்கங்கள் 23 31 38 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00



## வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABP-0774 | பஜாஜ் | 2017 | எம்பிலிபிட்டிய |
| ABL-4924 | பஜாஜ் | 2016 | ராகம |
| ABG-8284 | பஜாஜ் | 2015 | ரத்தினபுர |
| ABD-0363 | பஜாஜ் | 2015 | ராகம-2 |
| AAW-8145 | டி.வி.எஸ் | 2015 | ராகம |
| ABI-9134 | பஜாஜ் | 2015 | அம்பார |
| ABC-8490 | பஜாஜ் | 2015 | அம்பார |
| ABF-5109 | பஜாஜ் | 2015 | அம்பார |
| AAR-8132 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAR-9611 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAL-8926 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAL-7788 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAB-3504 | பஜாஜ் | 2012 | குருநாகல் |
| YQ-6696 | பஜாஜ் | 2011 | பாணடுர |
| YB-0022 | பஜாஜ் | 2010 | மாதர |
| QX-0393 | பஜாஜ் | 2010 | ராகம |
| YD-5068 | பஜாஜ் | 2010 | ராகம |
| YB-2189 | பஜாஜ் | 2010 | நுவரேலியா |
| QS-2301 | பஜாஜ் | 2009 | கண்டி |
| QU-0531 | பஜாஜ் | 2009 | கண்டி |
| QP-7352 | பஜாஜ் | 2008 | ராகம-2 |
| QO-6049 | பஜாஜ் | 2008 | பாணடுர |
| QG-3201 | பஜாஜ் | 2006 | ராகம |
| QA-5419 | பஜாஜ் | 2005 | ராகம-2 |
| QF-9341 | பஜாஜ் | 2006 | ராகம |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CBE-5042 | சுசுகி | 2018 | ராகம |
| CBF-9640 | சுசுகி | 2017 | பாணடுர |
| HC-4213 | டாடா | 2003 | திருகோணமலை |
| 18-8444 | ஹோண்டா | 1992 | ராகம |
| 17-8276 | நிசான் | 1989 | அனுராதபுரம் |
| 17-1807 | நிசான் | 1987 | குருநாகல் |

| மோட்டார் லாரி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LO-7380 | JMC | 2018 | ராகம |
| LH-7196 | லங்கா அசோக் லேலண்ட் | 2010 | ராகம-2 |
| LD-5016 | டாடா | 2007 | அனுராதபுரம் |

| இரட்டை நோக்கம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| GL-0031 | மிட்சுபிஷி | 1995 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAG-2062 | தைஹட்சு | 2012 | அம்பார |

| டிராக்டர் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| RF-1206 | TAFE | 2016 | அம்பார |

| மோட்டார் சைக்கிள் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| BFK-4235 | ஹீரோ | 2017 | திருகோணமலை |
| BFJ-7458 | டி.வி.எஸ் | 2016 | திருகோணமலை |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

எம்பிலிபிட்டிய 0773 610 188
ராகம 0778 523 285
ரத்தினபுர 0774 857 351
அம்பாறை 0773 547 556
திருகோணமலை 0767 526 087
பாணடுர 0775 215 263
குருநாகல் 0764 425 205
கண்டி 0773 972 860
நுவரேலியா 0777 717 562
அனுராதபுரம் 0767 139 916
மாதர 0771 479 490

# தெஹிஅங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் 85 ஆவது ஆண்டு விழா

## அதிபரின் உள்ளத்திலிருந்து...



பாடசாலைக்கு அதிபர் ஒன்று இல்லாத சந்தர்ப்பத்தில் 2020.03.10ஆம் திகதி பாடசாலையை பொறுப்பேற்றேன். அன்றிலிருந்து இன்றுவரை பாடசாலையின் முன்னேற்றத்தை மட்டுமே கருத்திற் கொண்டு இயங்கி வருகிறேன்.

தற்போது 85 வருடத்தினை நிறைவு செய்து கம்பீரமாக காட்சியளிக்கின்ற அல்–அஸ்ஹர் கலையகம் கல்வி அபிவிருத்திகள் மற்றும் பல பௌதிக அபிவிருத்திகளையும் கொண்டுள்ளது. இதற்காக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு (SDEC) அங்கத்தவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அன்று முதல் இன்று வரை முழு அளவிலான சேவைகளை பாடசாலைக்காக வழங்கி வருகிறார்கள்.

85 வருட ஞாபகார்த்தத்தை நினைவு கூரும் முகமாக நினைவு மலர் வெளியிடல், இரத்ததான முகாம், கண்காட்சி போன்ற பல அம்சங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. நினைவு மலர் வெளியிடல், ஞாபகார்த்த முத்திரை வெளியிடல் போன்ற அம்சங்கள் 17ஆம் திகதி பாடசாலையின் கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றன. 'மண்வாசனை' என்ற பெயரில் வெளியான இந்த நினைவு மலர் பாடசாலையின் வரலாற்றின் ஓர் அடையாளமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதேபோன்று ஞாபகார்த்த முத்திரை வெளியிட்ட நிகழ்வும் நீங்கா இடம் பிடித்தது. அல் அஸ்ஹரின் பழைய மாணவரும் தெஹியங்கையை பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரதி தபால் மா அதிபருமான M.H.M. அஸ்லமின் ஒத்துழைப்பினால் இந்த முத்திரையை வெளியிட முடிந்தது. இந்த பாடசாலையின் ஸ்தாபகர் மர்ஹூம் ஒமர் லெப்பை ஹாஜியாரின் நினைவாக விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றமை அன்றைய வைபவத்திற்கு மேலும் மெருகூட்டியது. கண்காட்சி நாளை மறுதினம் 22 ஆம் தேதி பிற்பகல் 5 மணியோடு நிறைவுக்கு வரும் கண்காட்சியானது இந்த நான்கு நாட்களும் காலை 08 மணி முதல் 05 மணி வரை இடம்பெறுகிறது. இதில் மாணவர்களின் ஆக்கங்களுக்கு மேலதிகமாக பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடம், தபால் திணைக்களம், அஞ்சல் திணைக்களம் போன்ற அமைப்புகளும் இணைவது விசேட அம்சமாகும்.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்



## மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி...



தெஹியங்க அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யின் 85 ஆவது நினைவுத் தினத்தின் நினைவு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 1937ஆம் ஆண்டில் இருந்து மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் தெஹியங்கை எனும் அழகிய பிரதேசத்தில் மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாட்டை சிறக்க வைக்க இப் பாடசாலை மும்முரமாய் இயங்கி வருவது பாராட்டத்தக்க ஒரு விடயமாகும். க/ தெஹியங்க அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி எதிர்காலம் வேண்டி நிற்கும் பல்வேறு துறைசார் நிபுணர்களை உருவாக்குவதிலும், அதற்கான அடிப்படை திறன்களை விருத்தி செய்வதிலும் இப்பாடசாலை வீறு நடை போடுகின்றது. இப்பாடசாலையின் அத்திவாரமாக இருந்து அயராத முயற்சிகளை மேற்கொண்ட இதன் ஸ்தாபகர் மற்றும் அன்று தொட்டு இந்நாள் வரை பாடசாலையின் வெற்றியிலும் முன்னேற்றத்திலும் பாடுபடும் அதிபர்கள், ஆசிரியர்கள், தோழமையோடு தோள் நிற்கும் பெற்றோர், பழைய மாணவ மாணவிகள் அனைவருக்கும் ஏக வல்லோனின் இறை அருள் என்றென்றும் கிட்ட வேண்டும்.

**உனைஸ் எம் ஆரிப்.**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
மத்திய மாகாணம் கண்டி

## வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி...



இப் பாடசாலை இன்று 85 ஆண்டுகள் கடந்து அதன் உச்சத்தை தொட்டுள்ளதைக் கண்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தளவு கல்வித் துறையிலும் பௌதீக வளர்ச்சியிலும் உயர்நிலையை அடையக் காரணம் அதிபரினதும், ஆசிரியர்களினதும், மாணவர்களினதும், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பெற்றோர்களின் அயராத முயற்சியே என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி இன்று தெநுவர கல்வி வலயத்தில் எல்லா துறைகளிலும் சிறந்த பாடசாலையாகத் திகழ்ந்திருப்பது எமது வலயத்திற்கு கிடைத்த பெரும்பேறு எனக் குறிப்பிடலாம். தெநுவர கல்வி வலயத்தில் எனது பணியை ஏற்ற போது இப்பாடசாலை இத்தகைய ஒரு விழாவைக் கொண்டாடுவது என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பீ. நயோமி ஹெட்டியாரச்சி**
வலயக் கல்விப் பணிப்பாளர்
தெநுவர வலயக் கல்விப் பணிமனை

## பழைய மாணவர் சங்கத்தின் ஆசிச் செய்தி....

தெஹிஅங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யின் 85 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு சஞ்சிகையொன்று வெளியிடுவதையறிந்து இம்மண்ணின் மைந்தர்கள் எனும் ரீதியிலும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என்ற வகையிலும் பேருவகை அடைகிறோம். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் சமூக பொருளாதார வளர்ச்சி கல்வியிலிருந்து கூடுதலான தேவைகளை வேண்டி நிற்கின்றபடியால் சமூக அடிப்படையிலும் தனிப்பட்ட வகையிலும் கல்விக்கான கேள்வி நாள்தோறும் அதிகரித்து வருகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் தெஹிஅங்க அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி அன்னையை நிறுவ வித்திட்ட காலஞ்சென்ற ஒமர் லெப்பை ஹாஜியார் அவர்களுக்கு எமது உளம் நிறைந்த நன்றிகளை சமர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம். மேலும் இப்பணியிலே அளப்பரிய சேவையாற்றி எம்மை விட்டு மறைந்த ஆசான்கள், அதிபர்கள், ஓய்வு பெற்றுச் சென்ற ஆசான்கள், அதிபர்கள் மற்றும் இப்பணியை தொடரும் எமது தற்போதைய அதிபர் திருமதி . நயிமா உட்பட ஆசான்கள் அனைவரையும் நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்ற அதேவேளை அவர்கள் அனைவரது சேவையையும் அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக எனப் பிரார்த்தித்துக் கொள்கிறோம். மேலும் அல் அஸ்ஹரின் வளர்ச்சிக்காக அயராது ஒத்துழைப்பு, உதவிகளை நல்கும் பாடசாலை அபிவிருத்தி சங்கம், பெற்றோர்கள், தனவந்தர்கள், பிரமுகர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என்ற பலதரப்பட்டோரின் பங்களிப்பை மனமுவந்து பாராட்டுகிறோம்.

பழைய மாணவர் சங்கம் சார்பாக செயலாளர்
**தெஹியங்க அல் அஸ்ஹர்**
ம.க. (தே.பா)

## 'விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை'



தெஹியங்கை அல்அஸ்ஹர் தேசிய பாடசாலை தனது 85 ஆவது அகவை நிறைவை முன்னிட்டு ஒழுங்கு செய்துள்ள கண்காட்சி மற்றும் நினைவுமலர் வெளியீட்டு நிகழ்வை எண்ணி பூரிப்படையும் கிராமத்து மக்களுள் யானும் ஒருவனாகி, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு (SDEC) செயளாலர் என்ற வகையில் புளகாங்கிதம் அடைவதோடு அக் குழு சார்பில் வாழ்த்துச் செய்தியை பகிர்ந்து கொள்வதில் ஆனந்தம் அடைகின்றேன். கடந்த 85 ஆண்டு பயணத்தில் எமது கல்லூரிக்கு வித்திட்ட மர்ஹூம் ஒமர் லெப்பை ஹாஜியார், கல்லூரியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் பலர் இன்று எம்மத்தியில் இல்லை. முதற்கண் அன்னவர்களின் ஆத்மா சாந்தியடையவும், நற்சுவனம் கிடைக்கவும் பிரார்த்தித்துக்கொண்டவனாக.. கல்லூரியின் வளர்ச்சியில் பங்கேற்று இன்று எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு சார்பாக,
**எம்.ஏ.எம் தனூஸ்** (ஆசிரியர்)
செயலாளர் SDEC

## காலங்கள் மாறலாம், காலம் தந்த அடையாளங்கள் நெஞ்சை விட்டு நீங்காது



காலங்கள் மாறலாம். ஆனால் காலம் தந்த அடையாளங்கள் நெஞ்சை விட்டு நீங்காது. இக்கலாசாலையின் 85 வருட பயணம்,அதன் நினைவாக வெளியிடப்பட்ட சஞ்சிகை மற்றும் நடாத்தப்படும் கண்காட்சி என்பன ஆழ்மனதில் அழியா இடம்பிடிக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. சமூகத்தில் உள்ள சகல தரப்பையும் அரவணைத்து பயணிக்கும் வகையில் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இதில் இணைத்துக் கொண்டோம். எல்லா சந்தர்ப்பங்களிலும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் (SDEC) பங்களிப்பு அளப்பரியது. தமது சொந்த வேலைகளையும் ஒதுக்கிவிட்டு இதற்காக அல்லும் பகலும் பாடுபட்டனர். எப்போதும் பக்க பலமாக இருந்தனர். புதிதாக நியமிக்கப்பட்ட பழைய மாணவர் சங்கமும் தம்மால் முடிந்த சகல பங்களிப்பையும் வழங்கினர். எனவே சஞ்சிகை, கண்காட்சி இரண்டும் மிகப்பெரும் சுமைகளாக இருந்தாலும் சகல தரப்பும் சங்கடமில்லா ஒத்துழைப்பு வழங்கின. இப்பணிகளை சிறப்பாக நிறைவேற்ற உதவிய எல்லாம் வல்ல இறைவன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! மேலும் ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**கே. எம். எம். சர்ஜதீன்.** (ஆசிரியர்)
தலைவர்.
சஞ்சிகை மற்றும் கண்காட்சி குழு.

# அஸ்ஹரின் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்...

கண்டி மாநகரில் தெஹியங்கை கிராமத்தில் கம்பீரமாய் உயர்ந்து விளங்கும் அறிவு பொக்கிஷமாம் அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) தனது 85 ஆவது ஆண்டு நிறைவை அடைந்துள்ளது.

இக்கல்லூரியின் உருவாக்கத்திற்கு வித்திட்ட மர்ஹூம் H.L. ஒமர் லெப்பை ஹாஜியார் கண்டி மீராமக்கம் பள்ளி வாயலில் கடமை புரிந்த காலமது. அப்பள்ளிக்கு அண்மையில் அமையப் பெற்றுள்ள சில்வஸ்டர் கல்லூரியைப் பார்க்கும் தருணமெல்லாம் தனது ஊரிலும் இவ்வாறான கலாசாலையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் மனதை ஆட்கொண்டுள்ளது. இதுவே 1937.12.13 அன்று இக் கலாசாலை உருவாவதற்கான பின்னணியாக கருதப்படுகின்றது.

ஒமர் லெப்பை என்ற மாமனிதரின் நல்லெண்ணம் இன்று அல் அஸ்ஹர் என்ற நாமம் தாங்கி எட்டுத்திக்கும் அறிவொளி பரப்பிக் கொண்டிருக்கின்றது. அன்னார் முதன் முதலில் தென்னை ஓலையால் வேயப்பட்ட சாதாரண குடிசை ஒன்றை அமைத்து 02 மாணவர்களையும் ஓர் ஆசிரியரையும் வைத்து 1937.12.13 அன்று பாடசாலையை ஆரம்பித்தார். இதற்கு 'தெஹியங்கை தமிழ் முஸ்லிம் கலவன் பாடசாலை' எனப் பெயர் சூட்டப்பட்டது. பின்னர் 50★15 அளவுள்ள ஒரு சாதாரண கட்டடம் அமைக்கப்பட்டது. இப்பாடசாலையின் முதல் மாணவனாக M.L.M. அஷ்ரப் அவர்களும் முதலாவது ஆசிரியராக மர்ஹூம் M.A. ரவுப் அவர்களும் இருந்துள்ளார்கள் என அறியமுடிகிறது. இப்பாடசாலையை அரசு பொறுப்பேற்கும் வரைக்கும் ஆசிரியர்களுக்கான செலவுகள் மர்ஹூம் ஒமர் லெப்பை ஹாஜியார் அவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமை அவரது தியாகத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் சான்றாக அமைகின்றது. ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்க வீடுவீடாக சென்று பணம் வசூலித்துள்ளார். ஊர் மக்களிடமிருந்து எதிர்பார்த்த ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. அதற்காக அவர் முயற்சியைக் கைவிடவுமில்லை. பிள்ளைகளின் கல்வியே அவரது மூச்சாய் இருந்தது. பாடசாலையை அரசுக்கு வழங்குவதாக இருந்தாலும் முறையான கட்டடம் இருக்க வேண்டும், தேவையான காணியை அரசுக்கு வழங்க வேண்டும் போன்ற பல நிபந்தனைகள் அதற்கும் தடையாய் அமைந்தன. எவ்வாறாயினும் சங்கம் ஒன்றின் பொறுப்பில் பாடசாலை இருந்தால் அதற்கு முன்னுரிமை வழங்கி அரசு பொறுப்பேற்கும் என்பதை அறிந்த அவர், 'தெஹியங்கை முஸ்லிம் கல்வி அபிவிருத்தி சங்கம்' என்பதை உருவாக்கி அதன் மூலமும் முயற்சிகள் நடந்துள்ளன. பின்னர் அப்போதைய கல்வி அமைச்சருக்கு அரசாங்க சபை சோனகப் பிரதிநிதி சேர். றாஸிக் பரீத் மூலம் 1939.01.09 ஆம் திகதி ஒமர் லெப்பை அவர்களால் அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அவரது வேண்டுகோள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு எமது பாடசாலை அரசாங்க பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டதுடன் 'தெஹியங்கை முஸ்லிம் வித்தியாலயம்' என்றும் பெயர் சூட்டப்பட்டது. இந்நிகழ்வு 1939.10.01 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு இடம் பெற்றதுடன் அக்கால கல்வி அமைச்சராக இருந்த C.W.W. கன்னங்கரா கூட்டத்திற்கு தலைமை தாங்கியதுடன் மத்திய மாகாண சர்க்கார் ஏஜண்ட் திரு E.D. டைசன் பாடசாலையை திறந்து வைத்து உரையாற்றினர். அவர் தனது உரையில் 'மேற்படி பாடசாலையை கிராமவாசிகள் ஒற்றுமையுடன் நடாத்தி வர வேண்டும் என்றும் ஆண் கல்வி மட்டுமன்றி பெண் கல்வியும் மிக மிக அவசியம்' என்றும் குறிப்பிட்டார்.



**எம்.ஏ. அமீனுல்லா**

1938.11.28 ஆம் திகதி தரவுகளின்படி V.M.M. லெப்பை எமது கல்லூரியின் முதலாவது தலைமை ஆசிரியராவார். 1940.11.13 ஆம் திகதி தரவுகளின் படி மாணவர் தொகை 160 ஆகவும் 6 வகுப்பறைகள் இருந்தன.

1951ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரம் எமது பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு இடைப்பட்ட காலப்பகுதியில் எமது பாடசாலையின் கல்வித் துறையில் ஏற்பட்ட முன்னேற்றப் படிகளின் விளைவாக 1960ம் ஆண்டு எமது பாடசாலை 'மகா வித்தியாலயமாக' தரம் உயர்த்தப்பட்டதுடன் அத்தின விழாவிலே 'அல்அஸ்ஹர்' என நாமம் சூட்டப்பட்டது. இக் காலப் பகுதியில் மாணவர் தொகை 370 ஐ தாண்டியிருந்தது.

1962.03.24 அன்று விளையாட்டு மைதானம் ஒன்று எமது பாடசாலைக்காக வெட்டப்பட்டது. இதற்கான காணி 1955 ஆம் ஆண்டு 3000 ரூபாய் பெறுமதியான பணத்தை ஒதுக்கீடு செய்து பாடசாலைக்கென கொள்வனவு செய்யப்பட்டது.

N.M.M. சாஹிர் அதிபர் காலப்பகுதியில் எமது பாடசாலை மாணவர்களுக்கான முதலாவது விளையாட்டு போட்டி இடம் பெற்றதாக வாய்மொழி தகவல்களின் ஊடாக அறியக் கிடைத்தது. 1963ம் ஆண்டு காலப்பகுதியில் Head Master என்ற சொற்பிரயோகம் Principal என மாற்றம் பெற்றது. இது S.I. இஸாம்தீன் அதிபர் காலத்தில் இடம்பெற்றது.

1964ம் ஆண்டு எமது பாடசாலையில் க.பொ.த. உயர்தரம் கலைப்பிரிவு ஆரம்பமானது.

1965ம் ஆண்டு காலப்பகுதியில் எமது பாடசாலையின் அதிபராக இருந்த D.S சனி முஹம்மட் காலத்தில் பாடசாலை இலட்சினை வடிவமைக்கப்பட்டது.பாடசாலை கீதத்தை மர்ஹூம் H.M. ஆதம் லெப்பை ஆசிரியர் இயற்றியுள்ளார்.இசையமைத்தவர் கிழக்கு மாகாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட அக்கால ஆங்கில ஆசிரியரான மர்ஹூம் M.M.M. பசீர் ஆவார். அத்துடன் எமது பாடசாலை கீதத்தினை சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தவர் தற்போது எமது பாடசாலையில் கடமையாற்றும் திருமதி R.P.S. சிறிவர்தன ஆசிரியரையே சாரும். இது A.C.M. இப்திகார் அவர்களால் இயற்றப்படுத்தப்பட்டது.

1966 ஆம் ஆண்டு எமது பாடசாலையில் ஆசிரியர் விடுதி கட்டப்பட்டது. 1978 இல் முதன்முறையாக கலைப் பிரிவிலிருந்து இரண்டு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக் கொண்டனர்.

1982.03.06 ம் திகதி இரண்டு நாட்களாக இடம்பெற்ற கலை நிகழ்ச்சியினால் கிடைக்கப்பெற்ற பணத்தைக் கொண்டு மின் இணைப்பு பெற முயற்சி செய்யப்பட்டதாக அறிய முடிகிறது.

1986.09.08 கொத்தணி அமைப்புப் பாடசாலையாக பிலிமதலாவ மகா வித்தியாலயத்தை மத்தியாகக் கொண்டு பிரதேச பாடசாலைகளில் ஒன்றாக இணைக்கப்பட்டது.

1972இல் விஞ்ஞான அறை விஞ்ஞான ஆய்வுகூடமாக நிர்மாணிக்கப்பட்டு 1992.10.10 அன்று விஞ்ஞான ஆய்வு கூட திறப்பு விழா இடம்பெற்றது.

மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் 1994.02.18 ஆம் திகதி கொண்ட நிலை அழைப்புக் குழு தீர்மானக் கடிதப்படி 'மத்திய மகா வித்தியாலயமாக' 1994.02.21 அன்று தரமுயர்த்தப்பட்டது.

2001 இல் மர்ஹூமா நசூஹா பீபீ ஹசன் லெப்பை என்பவரால் (மர்ஹூம் ஸரீப் ஹஸ்ரத்தின் துணைவியார்) கிணறு ஒன்று அமைப்பதற்காக 4★4 அடி அளவுள்ள காணி பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

உலக வங்கியின் நன்கொடையில் 2002.11.06 அன்று நூலக கட்டடம் ஒன்று அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு 2003.04.03 அன்று வாசிகசாலை கட்டடம் பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து 2005.03.19 IBHC நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வந்த மூன்று மாடி கட்டடத்தின் முதற்கட்ட வேலை பூர்த்தியை அடுத்து அப்போதைய முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவால் திறந்து வைக்கப்பட்டது.

2010 காலப் பகுதியில் எமது பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் போன்ற பலதரப்பட்ட நபர்களின் உதவி ஒத்தாசைகளுடன் ஏற்கனவே கட்டப்பட்ட கட்டடத்தின் மேல்மாடி (2ம் மாடி) கட்டப்பட்டு 2010.10.10 கையளிக்கப்பட்டது. இது ஜனாப் B.M. ஹனீபா அதிபரின் காலத்தில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து 2016 இல் 'அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை (லங்கம பாசல ஹொதம பாசல)' என்ற வேலைத் திட்டத்தின் கீழ் கேட்போர் கூடத்துடன் கூடிய இரண்டு மாடிக் கட்டடம் கிடைக்கப் பெற்றது. 2016ல் பாடசாலைக்கென 1.5 பேச்சர்ஸ் காணி தெஹியங்கையைச் சேர்ந்த A.C.M. இப்திகார் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது. 2018ல் ஆரம்பப் பிரிவில் “Child Friendly Class Room” வகுப்பறைகள் சிறப்பான முறையில் வடிவமைக்கப்பட்டு ஆரம்ப வகுப்பு சிறார்களின் கல்வி செயற்பாடுகளுக்கு ஏற்ற விதத்தில் 'Model Class Room' உருவாக்கப்பட காரணமாக இருந்தவர் அக்காலப் பிரிவில் பாடசாலை அதிபராக செயலாற்றிய N.M. சித்தீக் அவர்களாவார்.

மேலும் SBPTD வேலைத் திட்டத்தின் கீழ் 2021.03.17 அன்று எமது பாடசாலையில் ஆசிரியர் வள நிலையம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் எமது பாடசாலைக்கென இணையத் தளம் (Web Site) உருவாக்கப்பட்டது. 2021 மார்ச் மாதம் எமது ஊரைச் சேர்ந்த தொழிலதிபரான தேசகீர்த்தி தேசபந்து M.N.M. . பைசர் உதவியால் ஆரம்பப் பிரிவுக்கான குழாய்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டது. 2021.06.01 அன்று ஆயிரம் பாடசாலைகள் வேலை திட்டத்தின் கீழ் எமது பாடசாலை 'தேசிய பாடசாலையாக' தரமுயர்த்தப்பட்டது.இவை அனைத்தும் எமது தற்போதைய அதிபர் திருமதி M.T.S நயிமாவின் காலத்திலேயே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. தற்போது இக்கல்லூரி பல்வேறு வளர்ச்சிப் படிகளைத் தாண்டி அதிபர் திருமதி M.T.S நயிமா உட்பட நாற்பத்தொரு ஆசிரியர்கள், ஐந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 866 மாணவர், பத்து கட்டடங்கள், விளையாட்டு மைதானம் போன்ற பௌதிக வளங்களையும் கொண்டமைந்துள்ளது. இது ஒரு 1 AB பாடசாலையாக காணப்படுவதுடன் இங்கு கா.பொ.த உயர்தரத்தில் கலை மற்றும் வர்த்தகப் பிரிவுகள் உள்ளன. எதிர்காலத்தில் விஞ்ஞான பிரிவு மற்றும் தரம் 6 இல் இருந்து ஆங்கில மொழி மூலமான இருமொழிக் கல்விப் பிரிவை நிறுவுவதற்கான வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தொகுப்பு:
**திருமதி. M.H. Fasmila Begam**
(B.A. Hons, PGDE)
தகவல் திரட்டுவதற்கு உதவியோர்:
**M.I.F. Safana**
(B.A. Hons, PGDE (R)

SDEC உறுப்பினர்கள்



Mrs. M.T.S. Naima (President) | Mr. M.A.M. Thanoos (Secretary) | Mr. M.N.N. Mohammed (Treasurer)
Mr. U.L.M. Rizan (D.P.) | Mr. A.L.M. Riyas (Teacher) | Mr. A.C.M. Ifthikar (Member)
Mr. M.B.M. Naleem (Member) | Mr. M.H.M. Jaufar (Member) | Mr. L.I.H.M. Irfan (Member)
Mr. J.A.A. Razak (Member) | Mr. U.L.M. Iqbal (Member) | Mrs. A.W.S.M. Wahid Z.E.O. Representative



ஆசிரியர் குழாம்



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. கீழே உள்ள பாடலை வாசித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்குக.**

செக்கச் சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் கண் விழித்துக் கிளம்பிட
வானில் உதித்துவிட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியும் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே புவி சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது

1. இப்பாடல் ஒரு நாளில் எவ்வேளையை வர்ணித்துக் காட்டுகிறது?

   ………………………………………………………………………………………

2. பாடலிலுள்ள இரண்டு பறவைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

   ………………………………………………………………………………………

3. பறவையைக் குறிக்கும் ஒத்த சொல்லை பாடலிலிருந்து தெரிந்து எழுதுக.

   ………………………………………………………………………………………

4. செங்கதிரோன் - இதனை பிரித்தெழுதுக.

   ………………………………………………………………………………………

5. பந்தியிலுள்ள பெயர் அடைமொழி ஒன்றினை எழுதுக.

   ………………………………………………………………………………………

6. உயர்திணை, படர்க்கை, பன்மை, பெயர்ச்சொல் ஒன்றினை பந்தியிலிருந்து தெரிக.

   ………………………………………………………………………………………

**II.**

7. பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து கோடிடுக.

   i. மீன்கள் ………………………யில் அகப்பட்டன. (வலை / வளை)

   ii. பூவிலிருந்து …………………… வீசியது (நறுமனம் / நறுமணம்)

   iii. அகரவரிசைப்படி சொற்களுக்கு பொருள் கூறும் நூலானது (அகராதி / அரிச்சுவடி)

8. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழாவானது

   ………………………………………………………………………………………

9. கீழே கொடுக்கப்பட்ட ஆண்பால் சொற்களுக்கு பொருத்தமான பெண்பால் சொற்களை தருக.

   i. சீமான் - ……………………………………

   ii. வீரன் - ……………………………………

   iii. குறவன் - ……………………………………

10. பின்வரும் சொற்களை சரியான வடிவத்தில் எழுதுக.

    i. கருவேப்பிலை - …………………… ii. மலற்சி - ……………………

    iii. சிலவு - …………………… iv. காச்சல் - ……………………

11. எதிர்கருத்துச் சொற்களை எழுதுக.

    i. தண்ணீர் - …………………………… ii. புதுமை - ……………………

12. சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.

    i. இ.போ.ச. - ……………………………………………………………

    ii. தே.க.நி. - ……………………………………………………………

13. சேர்த்தெழுதுக.

    i. உடை + அலங்காரம் - ……………………………………………………

    ii. நஞ்சு + பாம்பு - ……………………………………………………

14. தொனிகளை எழுதுக.

    i. கோழி - …………………………… ii. சிங்கம் - ……………………………

15. கூட்டத்தினைக் குறிக்கும் சொல்லின் கீழ் கோடிடுக.

    i. மலை - (படை / தொடர் / வரிசை)

    ii. மா - (கூட்டம் / குலை / தோப்பு)

16. கப்பல் ஓட்டுபவன் - ……………………………………………………………

17. விகடமாக பேசுபவன் - ……………………………………………………


18. ஆலய மணி ……………………………………………………… என ஒலித்தது.


19. பின்வரும் ஆங்கில சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக மாற்றுக.

    i. you / what / like / do ……………………………………………………

    ii. I / red / have / a / book ……………………………………………………


20. பின்வரும் படங்கள் குறிக்கும் சிங்கள சொற்களை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.






    i. …………………………… ii. ……………………………

**III**

21. 

    இவ்வுருவிலுள்ள சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை யாது?

    ……………………………………………………………………


22. 

    உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாக தருக.

    ……………………………………………………

23. 1kg 500g தேயிலையின் விலை ரூபாய் 1800.00 எனில் 750g தேயிலையின் விலை என்ன?

    ………………………………………………………………………………………

24. 

    இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

    ……………………………………………………

25. அதிகாலை 6.30 மணியை நியம நேரமாக தருக. ……………………………………

26. 7m 4 cm இதனை cm இல் தருக. ……………………………………………………

27. 1 1/2*l* பாலில் இருந்து எத்தனை பேருக்கு 150 ml அளவு பாலை கொடுக்கலாம்?

    ………………………………………………………………………………………

28. இரண்டு வளைந்த விளிம்புகளைக் கொண்ட திண்ம வடிவம் எது?

    ………………………………………………………………………………………

29. கூடையிலிருந்த 500 தேங்காய்களில் 350 தேங்காய்கள் விற்கப்பட்டன. மிகுதியில் இரண்டில் ஒரு பங்கு எவ்வளவு?

    ………………………………………………………………………………………

**IV. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. எமது நாட்டின் தேசியக் கொடியை முதன் முதலில் ஏற்றியவர் யார்?
    i. டி.எஸ்.சேனநாயக்க ii. ஆனந்த சமரக்கோன் iii. அமரதேவ

31. இலங்கையின் தேசிய விளையாட்டு
    i. கால்பந்து ii. கரப்பந்து iii. கூடைப்பந்து

32. எமது நாட்டில் சனத்தொகை குறைந்த மாவட்டமாக கருதப்படுவது
    i. கொழும்பு ii. முல்லைத்தீவு iii. நுவரெலியா

33. தியலும நீர்வீழ்ச்சி அமையப்பெற்ற இடமானது
    i. கண்டி ii. இரத்தினபுரி iii. பதுளை

34. தாவர இலைகளில் கூடமைக்கும் பறவையினமானது
    i. கிளி ii. காகம் iii. தையல்குருவி

35. நாகமலரிலுள்ள இதழ்களின் எண்ணிக்கையானது
    i. 4 ii. 5 iii. 6

36. ஔடதமாக பயன்படும் பூக்களில் ஒன்றானது
    i. வில்வம்பூ ii. மல்லிகை iii. செவ்வந்தி

37. நிலத்தை தோண்டி முட்டையிடும் பறவையானது
    i. பென்குயின் ii. வான்கோழி iii. கிவி

38. தேசிய படத்தில் காடுகளைக் குறிக்கும் நிறமானது
    i. நீலம் ii. பச்சை iii. கறுப்பு

39. பின்வருவனவற்றுள் நாருரு வேர் கொண்ட தாவரமல்லாதது
    i. தென்னை ii. மா iii. பலா

40. விற்றமின் C அதிகளவு அடங்குகின்ற உணவு பதார்த்தமானது
    i. கீரை ii. பயறு iii. எலுமிச்சை

41. ஆழமற்ற நீர்நிலைகளில் மீன் பிடிக்க உதவும் உபகரணமானது
    i. வலை ii. கரப்பு iii. தூண்டில்

42. முளைவிடும் வித்துக்களை தேர்ந்தெடுக்க சரியான வழிமுறை
    i. உப்பு நீரில் இட்டு பார்த்தல் ii. சுடு நீரில் இடுதல்
    iii. தண்ணீரில் இடல்

43. சிவப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் ஒன்றாக சேர்க்கும் போது பெறப்படும் நிறமானது
    i. ஊதா ii. செம்மஞ்சள் iii. இளஞ்சிவப்பு

44. இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட குளமானது
    i. திசாவாவி ii. அபயவாவி iii. பசவக்குளம்

45. ஆடையில் பட்ட தார்க்கறையை போக்க பயன்படுத்தப்படும் பொருளானது
    i. வினாகிரி ii. சவர்க்காரம் iii. மண்ணெண்ணெய்

46. கொள்ளை நோய் பரவுவது
    i. எலியால் ii. நுளம்பால் iii. நாயினால்

47. இலங்கைக்கேயுரிய தாவரமல்லாதது
    i. எண்ணெய் மரம் ii. நிலவேம்பு iii. தென்னை

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II


48. 
படத்தில் காட்டப்பட்டுள்ள இலச்சினை குறிப்பது
i. இலங்கை தீயணைப்பு
ii. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
iii. இலங்கை போக்குவரத்து

49. செவிப்புல ஊடகமாக மட்டும் விளங்குவது
i. வானொலி ii. தொலைக்காட்சி iii. கணினி

50. மண்ணரிப்பு ஏற்படக் காரணமான மனித செயற்பாடு யாது?
i. மழை ii. வீசும் காற்று iii. மரங்களை வெட்டுதல்

51. ஒலிம்பிக் கொடியிலுள்ள வளையங்களின் எண்ணிக்கை
i. 4 ii. 5 iii. 6

52. மின்னல் தாக்கம் ஏற்படக் காரணமாக அமைவது
i. வாகனத்தில் செல்லும் போது ii. வீட்டினுள் இருக்கும் போது
iii. திறந்த வெளியில் நிற்கும் போது

53. 
உருவிலுள்ள பாதம் குறிக்கும் பறவையினமானது
i. வாத்து
ii. கோழி
iii. புறா

54. இலைகளின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரமானது
i. மாதுளை ii. வல்லாரை iii. சதைக்கரைச்சான்

55. புவியை சுற்றி பயணிப்பது
i. சூரியன் ii. சந்திரன் iii. நட்சத்திரம்

56. பிராணிகளிடமிருந்து பெறப்படும் மிகப் பெறுமதியான பொருள்
i. முத்து ii. தங்கம் iii. வெள்ளி

57. முலையூட்டி இனத்தைச் சேர்ந்த கடல்வாழ் உயிரினம்
i. வௌவால் ii. திமிங்கலம் iii. சுறாமீன்

58. இலங்கையில் அமைந்துள்ள நிலக்கரி மின் உற்பத்தி நிலையம்
i. விக்டோரியா ii. களனிதிஸ்ஸ iii. நுரைச்சோலை

59. அரச இலச்சினை பொறிக்கப்பட்ட தனியார் சொத்தாக அமைவது
i. தனியார் வாகனம் ii. தனியார் கட்டடங்கள் iii. கதைப் புத்தகங்கள்

V.

60. "சுற்றுப்புறச் சூழல் தூய்மை பேணுவதின் அவசியம்" எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக பேணப்பட வேண்டும்.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

### கடந்த வார (13.01.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 1 | 21. 2 | 31. 3 |
| 2. 2 | 12. 2 | 22. 3 | 32. 3 |
| 3. 1 | 13. 1 | 23. 2 | 33. 1 |
| 4. 3 | 14. 2 | 24. 1 | 34. 2 |
| 5. 2 | 15. 3 | 25. 2 | 35. 1 |
| 6. 2 | 16. 1 | 26. 1 | 36. 1 |
| 7. 3 | 17. 1 | 27. 3 | 37. 3 |
| 8. 1 | 18. 2 | 28. 3 | 38. 1 |
| 9. 1 | 19. 3 | 29. 1 | 39. 3 |
| 10. 3 | 20. 1 | 30. 2 | 40. 2 |

# சம்மாந்துறை பிரதேச செயலக வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு

சம்மாந்துறை பிரதேச செயலக ஊழியர்கள் நலன்புரி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். முகம்மது ஹனிபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

உதவி பிரதேச செயலாளர் யு. எம். அஸ்லம் வழங்கிய வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம். ஏ. டக்ளஸ் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தார்.

கௌரவ அதிதிகளாக அம்பாறை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஆதம்பாவா, அம்பாறை மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ், முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் ரி.மோகனகுமார், முன்னாள் மாவட்ட பொறியியலாளர் எம். ஐ. எம். ராசிக்,







பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் ஷாபீர், இறக்காமம் பிரதேச செயலாளர் எம். எஸ். எம்.றஸான், சம்மாந்துறை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ். ஐ. முகம்மது கபீர் ,சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியகட்சகர் மருத்துவர் எம்.ஆஷாத், நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ், அம்பாறை மாவட்ட செயலக தலைமை காணி உத்தியோகத்தர் கே. எல்.எம். முஸம்மில் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் அதிதிகளாக கணக்காளர் I.M.பாரீஸ், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி A.L.M. அஸ்லம் மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர் AK. ரினோஷா, சமுர்த்தி தலைமைபீட முகாமையாளர் U.L.M. சலீம் நிர்வாக உத்தியோகத்தர் K.B.சலீம், கிராம நிலதாரி நிருவாக உத்தியோகத்தர் M.L.தாஸிம் மற்றும் கிளை தலைவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தனர்.

சம்மாந்துறை பிரதேச செயலகம், மாவட்ட செயலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அலுவலர்கள் பலரும் கௌரவிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.


**றிசாத் ஏ. காதர்**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# கட்டுமான, சுகாதார கண்காட்சியின் 2 ஆவது நிகழ்வு இம்மாதம் லாகூரில்

பாகிஸ்தான் வர்த்தக மேம்பாட்டு ஆணையம், கடந்த வருடம் பெப்ரவரியில் ஏற்பாடு செய்திருந்த கட்டுமான மற்றும் சுகாதாரக் கண்காட்சியின் வெற்றிகரமான முதலாவது நிகழ்வின் பின்னர் அதன் 2 ஆவது நிகழ்வை 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 முதல் 25 வரை லாகூரில் உள்ள கண்காட்சி மையத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கண்காட்சியில் வளைகுடா நாடுகள், ஆப்கானிஸ்தான், சீனா, மத்திய ஆசிய குடியரசுகள், ஆபிரிக்க நாடுகள் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து சுமார் 400 வணிகப் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுமானப் பொருட்கள், கனிமங்கள் மற்றும் பளிங்கு, விவசாய இயந்திரங்கள், மின்விசிறிகள், மின்இயந்திரங்கள் மற்றும் வீட்டுஉபயோகப் பொருட்கள், மொபைல் போன்கள், பிளாஸ்டிக் மற்றும் அதன் தயாரிப்புகள், வர்ணங்கள் மற்றும் கெமிக்கல்ஸ், மருந்துப் பொருட்கள், இசைக்கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள், உணவு பரிமாறும் உபகரணங்கள், சமையல் பாத்திரங்கள், உருக்கு மற்றும் இரும்பு, இரத்தினங்கள் மற்றும் நகைகள், தளபாடங்கள், மெத்தைகள், இறப்பர் மற்றும் இறப்பர் தயாரிப்புகள், போக்குவரத்து, எழுதுபொருட்கள், காகிதப் பலகை, கைவினைப் பொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் ஆகிய துறைகளில்




பாகிஸ்தானில் இருந்து 200 இற்கும் மேற்பட்ட கண்காட்சியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானும் இலங்கையும் முக்கிய இரு வர்த்தக பங்காளிகள். மேலும், 2005 முதல் இருநாடுகளும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டுள்ளன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது இரு நாடுகளுக்கும் இடையிலான பரந்த அளவிலான இறக்குமதி /ஏற்றுமதி பொருட்களுக்கு வரிச்சலுகையினை வழங்கியுள்ளதால் இருதரப்பு வர்த்தகம் மிகவும் மலிவானதாக காணப்படுகிறது.

கட்டுமான மற்றும் சுகாதாரக் கண்காட்சி 2023 ஆனது, பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே 20 இற்கும் மேற்பட்ட துறைகளில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கான சிறந்த தளத்தை வழங்குகிறது. வருகை தரும் பிரதிநிதிகள் பாகிஸ்தானின் வர்த்தக மேம்பாட்டு ஆணையத்தினால் நியமிக்கப்பட்டுள்ள தயாரிப்பு அதிகாரிகளின் சிறப்பு உதவியுடன் பரந்த அளவிலான பாகிஸ்தான் உயர்தர வர்த்தக கண்காட்சியாளர்களுடன் B2B சந்திப்புகளை நடத்துவதற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

பாகிஸ்தான் வர்த்தக மேம்பாட்டு ஆணையம் மற்றும் கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் இந்நிகழ்வில் பங்குபற்றுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் விவரங்களுக்கு, இந்நிகழ்வின் இணையதளமான ehcs.tdap.gov.pk ஐப் பார்வையிட முடியும். மேலதிக விபரங்களுக்கு உயர் ஸ்தானிகராலயத்தின் வர்த்தகப் பிரிவை tia.colombo@commerce.gov.pk மற்றும் aselarangana@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக தொடர்பு கொள்ளலாம்.

# படைப்புழுக்கள் வேகமாக பரவக் காரணம் இறக்குமதி செய்யப்படும் சோளம் விதைகள்!

## திறப்பனை பிரதேச செய்கையாளர்கள் தமது அவதானிப்பில் கண்டுபிடித்த உண்மை!

ஒவ்வொரு போகத்திலும் சோளம் உற்பத்தியின் போது வேகமாகப் பரவும் படைபுழுவின் தாக்கம் இறக்குமதி செய்யப்படும் கலப்பின சோளம் விதைகளாலேயே உண்டாகின்றது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விதைகளை நடுவதன் மூலம் இதன் வித்தியாசம் தெரியவந்ததாக திறப்பனை பகுதி விவசாயி ஒருவர் தெரிவிக்கின்றார்.

திறப்பனை கனுமுல்லேகம எஸ்.எம். கே. பண்டார என்ற விவசாயி கூறுகையில்

"பொதுவாக ஒவ்வொரு போகத்திலும் வெளிநாட்டு கலப்பின சோளம் விதைகளை நடுவேன். ஆனால் இப்போகத்தில் இரண்டு இடங்களில் சோளம் விதைகளை நட்டேன். ஒரு இடத்தில் வெளிநாட்டு கலப்பின சோளம் விதைகளை நட்டினேன். மற்றொரு இடத்தில் உள்ளூர் சோளம் விதைகளை நட்டினேன். இரண்டிற்கும் இடைப்பட்ட இடைவெளி ஒரு வாரம் காலம்.

இப்போது, வெளிநாட்டு கலப்பின சோளம் விதைகளால் பயிரிடப்பட்ட சோளம் பயிர்களில் படைப்புழுவின் தாக்கம் உணரப்பட்டு அவற்றை அவை முற்றாகத் தின்று விட்டன. ஒவ்வொரு மரத்திலும் ஒரு புழு உள்ளமை தெரியவந்துள்ளது. எவ்வளவுதான் பூச்சிகொல்லி மருந்தை விசிறினாலும் இப்புழுக்கள் இறக்காது உயிருடன் காணப்படுகின்றன. ஒவ்வொரு மரமாக நாசினி தெளித்தல் வேண்டும். அப்போதுதான் இப்புழுக்களின் பாதிப்பிலிருந்து தமது சோளச் செய்கையை பாதுகாக்க முடியும், அத்துடன் இவற்றை முற்றாக ஒழிக்க அதிக நேரமும் செலவும் தேவைப்படும். ஆனால் இதற்காக கொள்வனவு செய்யும் 01 கிலோ விதை பொதியானது 17000. கிருமி நாசினி போத்தல் ரூ. 5000, இதனால் செலவு அதிகம்.

மற்றைய பருவங்களில் அறுவடை நெருங்கும் போதே படைப்புழுவின் தாக்கம் உணரப்பட்டது. ஆனால் இந்தப் பருவத்தில் அவை ஆரம்பப் பருவத்திலேயே வந்து விட்டன. மகாஇலுப்பள்ளம விவசாயப் பண்ணையில் வாங்கி விளைவிக்கப்பட்ட பயிர்களில் புழுக்கள் இல்லை. சில மரங்கள் நன்றாக வளர்ந்துள்ளன" என்றார்.

இக்கிரிகொல்லாவ கள்ளஞ்சிய பகுதியில் இம்முறை செய்கை பண்ணப்பட்ட சோளச் செய்கையிலும் படைப்புழுவின் ஆதிக்கம் காணப்படுவதாக அங்குள்ள விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இப்போது அறுவடை செய்யும் காலம்



என்பதால் படைப்புழுக்களின் ஆதிக்கத்தோடு, காட்டு யானைகளின் பாதிப்புகளில் இருந்தும் தமது பயிர் நிலத்தை பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் பாதுகாப்பதே பெரும் வேலை என்று தெரிவிக்கும் இப்பகுதி விவசாயிகள், தாம் உயர்ந்த மரங்களில் 'குடிசை வீடு' கட்டி அதில் இரவு முழுவதும் விழித்திருந்து காவல் காப்பதாகக் கூறுகின்றனர்.

காட்டு யானைகள் வரும் நேரங்களில் சீனவெடிகளை கொளுத்தி,சத்தங்களை எழுப்பி ஒருவாறு காட்டுயானைகளை விரட்டி விடுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் தாம் மிகவும் கஷ்டப்பட்டு செய்கை பண்ணிய தமது சோளத்தை தனியார் வியாபாரிகள் தமது சேனைநிலத்துக்கே வந்து கொள்வனவு செய்து வருவதாகவும், செய்கை பண்ணப்பட்ட சில சோளத்துக்குள்ளும் படைப் புழுக்கள் காணப்படுவதாகவும் விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

படைப்புழுவின் தாக்கம் மாத்திரம் இல்லை என்றால் சோளம் உற்பத்தியில் தாம் எதிர்பார்த்த விளைச்சலை அடைந்து கொள்ள முடியுமாக இருக்கும் என்றும் இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தாம் இரவு பகல் பாராது கஷ்டப்பட்டு, அதிகம் செலவு செய்து செய்கை பண்ணிய சோளத்தை காட்டு யானைகளை விட கள்வர்களிடமிருந்து பாதுகாப்பதும் தமது அன்றாட



வேலையாக உள்ளதாக தெரிவிக்கும் விவசாயிகள், அண்மைக் காலங்களில் இரவு நேரங்களில் தமது சேனை நிலங்களுக்குள் புகுந்த கள்வர்களை கையும் மெய்யுமாக பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவங்களும் இப்பகுதியில் இடம்பெற்றதாக தெரிவிக்கின்றனர்.

படைப்புழுவின் தாக்கம் காரணமாக விளைச்சல் பாதிக்கப்படுவதாகவும், சில இடங்களில் சிறிய சிறிய சோளக்கதிர்களே உண்டாவதாகவும், படைபுழுக்கள் முற்றாக சோளக் கதிர்களை அழித்து விடுவதாகவும் தெரிவிக்கும் விவசாயிகள், இதற்குரிய பூச்சிகொல்லி மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களம் அண்மையில் தெரிவித்தது தமக்கு ஆறுதல் அளிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

படைப்புழுவை ஆங்கிலத்தில் Fall Armyworm என அழைக்கிறார்கள். இதற்கு பெயர் வரக் காரணம் இது மிக விரைவாக பல்கிப் பெருகி ஒரே இரவில் கூட ஏக்கர் கணக்கான தோட்டங்களை துவம்சம் செய்யக் கூடிய ஒரு பீடை என்பதனால் ஆகும். படைப்புழுக் கூட்டம் ஒரு போர்ப்படை வீரனைப் போல செயல்படுகிறது என்ற பொருளில் 'சேனைப்படை' என்று இப்புழுவுக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப்புழுவானது பிரதானமாக சோளம் உட்பட 80 இற்கும் அதிகமான பொருளாதாரப் பயிர்களை உண்டு உயிர் வாழக்கூடியவை. இப்புழுக்கள் இலங்கையைப் பொறுத்தவரை சோளத்திற்கு அடுத்ததாக நெல்,கரும்பு,குரக்கன்,அவரை தானியங்கள் உட்பட வன்மையான இலைகளை கொண்ட எண்பதுக்கும் அதிகமான பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களை அழிக்கக் கூடியது.



உண்மையில் இதன் வாழ்க்கை வட்டத்தில் குடம்பிப் பருவமே பயிர்களை உண்டு நாசம் விளைவிக்கிறது. எனவே இதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்த வேண்டுமாயின் இதன் வரலாற்றையும்,வாழ்க்கை வட்டத்தையும் அறிந்து வைத்திருப்பது முக்கியமாகும்.

இப்பீடையானது அயன, உபஅயன மண்டல அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டதாகும். இங்கிருந்து 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் பரவி அங்கு ஆபிரிக்கர்களின் பிரதான உணவாக விளங்கிய சோளத்திற்கு பெரும் சேதம் விளைவிக்கத் தொடங்கி இன்று வரை அங்கு காணப்படுகின்றது. 2017 இல் கிழக்கு,தென் ஆபிரிக்க நாடுகளுக்கு பரவியது. இதனைத் தொடர்ந்து 2018 ஆம் ஆண்டில் இந்தியாவுக்குப் பரவி ,2018 ஒக்டோபர் மாதமளவில் இலங்கையின் அம்பாறை, அநுராதபுரம், மொனராகலை, குருநாகல் மாவட்டங்களில் இதனை அவதானிக்கக் கூடியதாக இருந்து தற்போது நாட்டின் எல்லாப் பிரதேசங்களினதும் இதன் தாக்கம் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையில் சோளத்தை பொறுத்தவரை இன்றுவரை சுமார் 82 ஆயிரம் ஹெக்டயர் காணிகளில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது. இதில் சுமார் 50 வீதம் வரையில் படைப்புழுவின் தாக்கம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படைப்புழுவின் வாழ்க்கை முறையை தெளிவாக அறிந்து கொள்வது இதனை கட்டுப்படுத்துவதற்கு பெரும் உதவியாக அமையும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனை இரசாயனங்களினால் மாத்திரம் கட்டுப்படுத்தாமல் ஒருங்கிணைந்த பீடை கட்டுப்பாட்டு முறைகளை பாவிப்பதே உகந்தது எனவும் விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



**ஏ.ஆர்.எம்.ரபியுதீன்**
திறப்பனை தினகரன் நிருபர்

# 'இயேசு நம்மோடு'

JESUS WITH US PRAYER MINISTRY COLOMBO

## ஜெப ஊழியத்தின் மாபெரும் ஆசிர்வாத அபிஷேகப் பெருவிழா

### தலைமைப் போதகர் சுரேஷ் பேர்னாண்டோ அழைப்பு

- ★ வத்தளை–எந்தளையில் இன்றும் நாளையும்
- ★ 'ஜெபதோட்ட ஜெயகீதங்கள் புகழ்' பிரபல கிறிஸ்தவ பாடகரும் நற்செய்தியாளருமான அருட்தந்தை எஸ்.ஜே பெர்ச்மான்ஸ் அடிகளார் கலந்துக்கொள்கிறார்.
- ★ 'புது நம்பிக்கையிலே தொடருவோம்' இணையில்லா தேவனை இணைந்தே ஆராதிப்போம்'





இலங்கை தேசத்தின் சமாதானத்தையும், ஆசிர்வாதத்தையும் நோக்கி இயேசு நம்மோடு ஜெப ஊழியம் இவ்வருடத்தின் அதன் தொனிப்பொருளாக ஆதியாகமம் 28:15படி நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும், உன்னைக் கைவிடுவதில்லை என்கின்ற வசனத்தின் ஊடாக நாடு தழுவிய ரீதியில் தமது ஊழியத்தை முன்னெடுத்து வருகின்றது.

இயேசு நம்மோடு ஜெப ஊழியமானது 29 அகவையை கடந்துக் கொண்டிருக்கின்ற இத்தருணத்தில் அதன் தலைமை போதகர் வண. ஏ.சுரேஸ் பெர்னாண்டோ அவர்கள் தனது ஆன்மீக பணியில் இடைவிடாது சேவையாற்றி வருபவர். கொழும்பிலும், வடக்கிலும், கிழக்கிலும், மலையகத்திலும் தனது அர்ப்பணிப்பான ஊழியம் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இதன் அடிப்படையில் இப்புத்தாண்டு மக்களுக்கு ஆசிர்வாதமாக அமைய வேண்டுமென்பதே தனது பேரவா.

இன்றும் நாளையும் இல52, கெனல் வீதி, எந்தளை, வத்தளை என்ற முகவரியில் அமைந்துள்ள இயேசு நம்மோடு ஜெப ஆலயத்தில் ஆசிர்வாத அபிஷேக பெருவிழா இன்று நடைபெறும். இதில் பங்கேற்று சிறப்பிக்க தமிழ்நாடு சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல நற்செய்தியாளரும், தமிழ் கிறிஸ்தவ பாடகருமான அருட்தந்தை எஸ்.ஜே பெர்மான்ஸ் கலந்து கொள்கின்றார். அவர் ஏறத்தாழ 350க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ பாடல்களை தமிழில் இயற்றி, பாடி 'ஜெபத்தோட்ட ஜெய கீதங்கள்' எனும் பெயரிலும், மேலும் மலையாளம், தெலுங்கு கன்னடம் போன்ற தென்னிந்திய மொழிகளிலும் ஹிந்தி, ஒடியா, சிங்களம் மற்றும் ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்த 2023ஆம் ஆண்டு இலங்கையை அதிசயவிதமாகவும், அற்புதமாகவும் மாற்ற இயேசு கிறிஸ்து வல்லவமாயிருக்கிறார். இன, மத பேதமின்றி அனைத்து இன மக்களுக்கும் இதில் கலந்து ஆசிர்வாதத்தை பெற்றுக்கொள்ள இயேசு நம்மோடு ஜெப ஊழியம் அழைப்பு விடுக்கின்றது.

இயேசு கிறிஸ்து உங்களை நிறைவாக ஆசிர்வதிப்பாராக!

**தேவதாஸ் சவரிமுத்து**
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்


















# கலைச் சங்கமம்

## மீன் பாடும் தேன்நாட்டில்

# பேராசிரியர் கைலாசபதி நினைவு நிகழ்வும் 'என்றென்றும் கைலாசபதி' நூல் வெளியீடும்

மூத்த இலக்கிய படைப்பாளி கைலாசபதி மாக்சிச சித்தாந்தங்களின் அடிப்படையில் தனது விமர்சன கருத்துக்களை முன் வைத்தாலும் அவர் தனித்துவமான விமர்சனப் பாணியை பின்பற்றினார் பேராசிரியர் ரமீஷ் அப்துல்லா தெரிவித்தார்.

'பின் நவீனத்துவம் போன்ற மேற்குலக இலக்கியக் கோட்பாடுகள் குறித்த நாடுகளுக்கே மிகப் பொருத்தமானது .அதனை அப்படியே நாம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை'

எமது பிரச்சினைகளை நாம் எமக்கான கோட்பாடுகளுடன் எழுதுவதே சிறந்தது, என்ற கருத்துடையவர் பேராசிரியர் கைலாசபதி என்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் றமீஸ் அப்துல்லா குறிப்பிட்டார்.


ஈழத்து இலக்கியப் பரப்பில் முதல் முறையாக மூன்று மாவட்டங்களின்

கலை இலக்கிய அமைப்புகளான.மட்டக்களப்பு மகுடம் கலை இலக்கிய வட்டம்,சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையம்,சம்மாந்துறை தமிழ்ச்சங்கம் ஆகியன இணைந்து நடாத்திய

பேராசிரியர் கைலாசபதி நாற்பதாவது ஆண்டு நினைவில்.. ஞாபகார்த்த நிகழ்வும்

'என்றென்றும்_கைலாசபதி' நூல் வெளியீடும் அண்மையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்புரையாற்றும்போதே பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் இவ்வாறு தெரிவித்தார்.





அமரர் லெனின் மதிவாணத்தின் சகோதரரும் கல்முனை உயர் நீதிமன்ற நீதிபதியுமான

இரா.நெ.ட்ரொட்ஸ்க்கி மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்து 'என்றென்றும் கைலாசபதி' நூலின் முதல் பிரதியை நூலின் தொகுப்பாசிரியர் பேராசிரியர் பாலசுகுமாரிடமிருந்து பெற்றுக்கொண்டார். மகுடம் வி. மைக்கல் கொலினின் வரவேற்புரையுடன்

ஆரம்பமாகிய இந் நிகழ்வு பேராசிரியர் கைலாசபதியின் மாணவர் கவிஞர் மன்சூர் ஏ. காதரின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தொடர்ந்தும் தனதுரையில்:

கைலாசபதியின் மாக்சிச சித்தாந்தங்களின் அடிப்படையில் தனது விமர்சன கருத்துக்களை முன் வைத்தாலும் அவர் தனக்கென ஓர் விமர்சனப் பாணியை பின்பற்றினார். தனது படைப்புகளில் அவர் வலிந்து மேற்குலக சித்தாந்தங்களை புகுத்தவில்லை. ஆனால் அவைகள் பற்றிய பூரண அறிவு அவருக்கிருந்தது.

அவர் தனது விமர்சனத்திலும் தனது எழுத்துகளிலும் தமிழிற்கு தேவையான எழுத்து முறையை பின் பற்றினார். அதனாலேயே இன்றும் அவரது விமர்சன முறை உயிர் வாழ்கிறது.

மேற்குலக கோட்பாடுகளை அவர் அப்படியே வாய்ப்பாடாக கொள்ளவில்லை என்றார்.

பேராசிரியர் கைலாசபதியின் மாணவரான பாலசுகுமாரும் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

பார்வையாளர் கருத்துரையில் பேராசிரியர் கைலாசபதி மலையகத்திற்கு ஆற்றிய பங்களிப்பு பற்றியும் தினகரன் பத்திரிகை ஆசிரியராக அவர் கடமையாற்றியவேளை மலையக படைப்பாளிகளின் படைப்புகளுக்கும் மலையகத்துக்கும் ஆற்றிய பங்களிப்பு பற்றி பல்வேறு கருத்துகளை முன் வைத்தார் நீதிபதி ட்ராட்ஸ்கி.





சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு காத்திரமாக நடைபெற்ற இந்த விழா அனைவரதும் பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**தகவல்: படங்கள் உதவி: மைக்கல் கொலின்.**

# இதயத்தை ஈரமாக்கும் கவி வரிகளுடன் புறநானூற்றுப் புதையல்

இலக்கியத்தின் மூல ஊற்று மனித வாழ்க்கையும் அவனைச் சுற்றியுள்ள இயற்கையின் பிறப்பிடமுமாகும். அதனால் இலக்கியம் வாழ்க்கையோடு பிரிக்க இயலாத அளவிற்குப் பின்னிப்பிணைந்துள்ளது.

தமிழ் நமது தாய்மொழி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக விழுதிறக்கிய விருட்சம். அதன் வேர்கள் கரையான்களால் அழிக்க முடியாத ஆழத்தில் இருக்கிறது. அந்த வேர்களின் உழைப்பில் தான் எண்ணற்ற இலக்கிய, இலக்கணங்கள் முகிழ்த்தன.

காலத்தின் பரிசாக செம்மொழி என்னும் சிம்மாசனம் இப்போது கிடைத்திருக்கின்றது.

அந்த அடிப்படையில் சங்க இலக்கியம் ஓர் அழகான நந்த வனம். இதில் நுழைந்தவர்கள் எவரும் வெறுங்கையோடு திரும்பியதில்லை.

### புறநானூற்றுப் புதையல்:

புறநானூறு என்பது புறப்பாட்டு மட்டுமல்ல. அது தமிழர்களின் போர்ப்பாட்டு வாழ்க்கையை, வாழ்க்கையின் வெற்றியை ஆர்ப்பரித்துப்பாடும் பரணிப்பாட்டு.புறநானூறு, நானூறு பாடல்களின் தொகுப்பு மட்டுமல்ல, வணங்காமுடித் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு. உறங்காத உணர்வுகளின் ஊர்வலம்.போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடாமல் நின்றவர்களை, நடுகற்களாக நிற்க வைத்த வெற்றிகளின் கணக்கெடுப்பு. கல்லாக நின்றவர்களைக் கவிதைச் சொல்லாக நிற்க வைத்த கனவுகளின் படப்பிடிப்பு. இப்படி இதற்குள் புதைந்திருக்கும் புதையல்களை எடுத்துக் கொண்டே இருக்கலாம்.படிக்கப் படிக்க மனதில் மண்டிக்கிடந்த அச்ச இருள், மெல்ல மெல்ல விலகுகின்றது. வாழ்வின் அர்த்தம் புரிகின்றது. அப்படி என்ன அந்தப் பாடலில் இருக்கின்றது.



இதயத்தில் இடம்பிடித்த அந்தப் பாடல்.

பிறருக்காக வாழும் வாழ்க்கை:' உண்டால் அம்ம இவ்வுலகம்' இப்படித்தான் அந்தப்பாடலின் முதல் அடி தொடங்குகின்றது. இந்த உலகம் எத்தனை எத்தனை நூற்றாண்டுகளாக இன்னும் அழியாமல் இயங்கிக் கொண்டே இருக்கின்றதே என்பது தான் இந்த முதல் அடியின் பொருள்.

இந்த இயக்கம் தான் 'அம்ம' என்ற வியப்புச் சொல்லுக்குக் காரணம்.இப்படி விழிகளை வியப்படையச் செய்வதற்கு யார் காரணம்? இதைத் தான் பாடலின் அடுத்த அடிகள் பதில் சொல்லுகின்றன.இந்த உலகம் இன்னும் அழியாமல் இயங்கிக் கொண்டிருப்பதற்கு யார் காரணம்?. இது தான் இதயத்தை ஈர்ப்பதற்கான காரணம்.கேள்விகள் தானே இதயத்தைத் திறக்கிற இனிய சாவிகள். பதில்கள் ஒவ்வொன்றாய் இதய வாசல்களைத் திறக்கின்றன.

அமிழ்தம். சாகா உயிர் கொடுக்கும் அமிழ்தம்.

இந்த இனிய அமிழ்தம் தேவர்களுக்கும் இந்திரனுக்கும் கிடைக்கக்கூடிய அமிழ்தம். அப்படிப்பட்ட அமிழ்தமே கிடைத்தாலும் தான் மட்டுமே இனிமையானது என்று அருந்தாதவர்கள்.

பிறரிடம் கோபப்படாதவர்கள்,

பிறர்கண்டு பயப்படுவதற்குத் தாமும் பயந்து வீணே இருக்காதவர்கள், புகழ்பெற உயிரையும் கொடுப்பவர்கள், ஆனால், அதே நேரத்தில் பழிமிகுந்த செயல் என்றால் அதற்குப் பரிசாக இந்த உலகத்தையே கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளாத உயர் பண்பினை உடையவர்கள்.

ஒரு போதும் மனத் தளர்வு இல்லாதவர்கள், இப்படிப்பட்ட நல்ல குணங்கள் நிறையப் பெற்று தனக்காக மட்டும் வாழாமல், பிறருக்காக வாழும் பொதுநலம் பேணுபவர்கள். இப்படிப்பட்டவர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றது,
இயங்கிக் கொண்டும் இருக்கிறது.

இதோ! அந்தப்பொருள் நிறைந்த பாடல்
உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரன்
அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனில் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்வு இலர் அன்
னமாட்சி அனைய ராகித்தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே!

இதுதான் இதயத்தைக் கவர்ந்த அந்த இனிய பாடல்.

இதிலும் பாடலின் இறுதி வரிகள் 'தனக்காக மட்டும் வாழாமல், பிறருக்காக வாழுகின்ற முறையில் வாழும் வாழ்க்கை முறையில்தான், அப்படி வாழ்பவர்களால் தான் இந்த உலகம் இன்னும் இருக்கின்றது, என்கிற உயர்ந்த உண்மையை எடுத்துக்காட்டும் வரிகள்.

இந்த இதயம் தொட்ட இனிய பாடலை எழுதியவர் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன்.

மன்னர்களும் புலவர்களாக இருந்து சங்கத் தமிழை தங்கத்தமிழாக மாற்றியிருக்கின்றார்கள் என்பதற்கு இந்தப்பாடல் ஓர் எடுத்துக்காட்டு.

மன்னர்கள் வீரர்களாக மட்டுமல்ல ஈரம் மிகுந்தவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்பதை இந்தப்பாடல் எடுத்துக்காட்டுகின்றது.வீரத்தைக் காட்டிலும் ஈரம் தானே நெடுநாள் நிலைத்திருக்கும். அந்த ஈரம் நிறைந்த இதயத்தால் பெருவழுதியும் இன்னும் இந்தப் பாடலால் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அதனால் எல்லோரது இதயத்திலும் இடம்பெற்றிருக்கிறான்.

இலக்கியம் இதயத்தில் இடம் பிடிப்பதற்குக் காரணம் இலக்கை நோக்கிய அதன் பயணம் தான்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்பதையும், வாழும் வழி எப்படி என்பதையும் இந்த இலக்கியங்கள் தான் எடுத்துக்காட்டுகின்றன. படிப்பதற்குத்தான் யாருக்கும் இன்று நேரமில்லை.

இயந்திர கதியில் ஓடிக்கொண்டிருக்கின்றது வாழ்க்கை, என்றாலும் சக மனிதர்களைப் பற்றி சிந்திக்க மனமில்லாதவர்கள் எப்படி சமூக மனிதர் களாக முடியும். பணம் தேடும் வாழ்க்கையின் வேகத்தில் மனிதம் முழுமையாக மறைந்து போய்விடுமோ என்று மனம் ஏங்குகின்றது.

இதோ மனதை ஈரப்படுத்தும் ஓர் இலக்கிய காட்சி.

**இதயத்தை ஈரமாக்கிய முல்லைப் பூக்கள்:**

ஒல்லையூர் என்னும் சிற்றூர். சாத்தன் இந்த ஊரில் வாழ்ந்த ஒரு பெரு வீரன். கொடுக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரன். அவனது உயர்ந்த குணங்களைக் கேட்டறிந்த குணவாயிற்கீரத்தனார் என்ற புலவர் அவனைத் தேடி அவ்வூருக்கு வருகிறார்.

ஊருக்கு வந்த போது அந்த வீரன் இறந்து விட்டான் என்ற செய்தி எட்டுகிறது. அவரது உள்ளம் அழுகின்றது. பரிசில் பெறவில்லையே என்ற வருத்தம் அவருக்கு இல்லை. ஒரு பெரும் மகான் இறந்தானே. இனி பாணர், பானிகளுக்குப் புகழிடம் எது? என்ற கேள்வி அவர் இதயத்தைத் தாக்கியது. செய்வதறியாது திரும்புகின்றார்.

ஒல்லையூர்ப் பகுதியிலே முல்லைக் கொடிகள் பூத்துக்கிடக்கின்றன. பூக்களைப்பார்க்கின்றார் புலவர். அவற்றோடு பேசத் தொடங்கி விடுகின்றார். இதயத்தில் எழுந்த அவலம் அவரைப் பேசச் செய்கின்றது.

முல்லையே ஒல்லையூரிலே நீ பூக்கின்றாயா? சாத்தன் இறந்த பிறகும் நீ பூக்கின்றாயா? ஏன் பூக்கின்றாய்? பூத்த மலரைப் பறித்து யார் சூடப் போகின்றார்கள்? இளைய வீரர்கள் சூடமாட்டார்கள். வளையல் அணிந்த மகளிரும் சூட மாட்டார்கள். பாணனும், பாடினியும் கூட பறிக்க மாட்டார்கள். அனைவருமே சோகத்தால் அல்லவா! சூழ்ந்து போயிருக்கின்றார்கள்.

ஒருவருக்கும் பயன்படவில்லை என்றால் வீணாக ஏன் நீ பூக்கின்றாய்? அவனது பிரிவு உனக்கு துயரத்தைத் தரவில்லையா? தந்தால் நீ பூக் கலாமா? என்று தம்மை மறந்து பூக் களைப் பார்த்துப் புலம்புகின்றார் புலவர்.

இந்தப் பாடலைப் படிக்கும் போதும் உள்ளம் உருகும். கண்கள் கலங்கும். கையறு நிலை பாடிய புலவர் நம்மையும் கையறு நிலைக்குக் கொண்டு போய் விடுகின்றார். இதுதான் இதயத்தை ஈரமாக்கிய இலக்கியக் காட்சி.

**பரணர் விரும்பிய சிறந்த பரிசு:**

இதோ, மனிதநேயத்தைக் கற்றுத்தரும் ஒரு மனிதநேயக்காட்சி. ஒழுக்கத்தோடு வாழக் கற்றுத்தரும் வாழ்வியல்காட்சி.கடையேழு வள்ளல்களுல் ஒருவன் பேகன். அவன் ஒருநாள் உலாப் போய்க் கொண்டிருக் கிறான். வான்மேகம் கருத்துத் திரள்கிறது. குளிர்ந்த காற்று வீசுகின்றது. அங்கே அழகிய மயிலொன்று தன் தோகையை விரித்து ஆடுகின்றது. பார்க்கின்றான் மன்னன் பேகன். வாடைக் காற்றால் வருந்துகின்றது என்று நினைத்து, தான் அணிந்திருந்த விலை உயர்ந்த பட்டாடையை அம் மயிலுக்குப் போர்த்தினான்.

மயிலுக்கு மட்டுமல்ல தன்னை நாடி வரும் இரவலர்களுக்கெல்லாம் இப்படி வாரி வாரி வழங்கிய வள்ளல் பேகன். அவனது கொடைச்சிறப்பினைக் கேட்ட புலவர் பரணர், அவனை நேரில் பார்க்கச் செல்கின்றார். ஆனால் அவன் அங்கு இல்லை. மனைவி கண்ணகியிடம் மன்னனைப் பற்றி கேட்கிறார். அவள் தன் கண்களில் தேங்கி நின்ற கண்ணீரைத் துடைத்துக்கொண்டே 'அவர் இங்கில்லை இன்னொருத்தியோடு உறவு கொண்டு முல்லை நல்லூரில் வாழ்கின்றார்' என்கிறாள்.

'ஒழுக்கம் உயிரை விட மேலானது' என்ற உண்மையை உணர்ந்த பரணர், கண்ணகியின் கண்ணீர் சொல் கேட்டு மனம் பதறினார். பெரிய வீரனும், சிறந்த கொடை வள்ளலும் ஆகிய பேகனிடத்தில் இருந்த கூடா ஒழுக்கத்தைப் போக்குவது தமது கடமை என்று நினைத்து பேகன் வாழ்ந்திருந்த ஊருக்குச் சென்றார்.

பேகனைப் பார்க்கின்றார் புலவர். 'பேகனே! காட்டு மயிலின் வாட்டத்தைப் போக்கியவனே! உன் கருணை மனதைப் பாராட்டுகிறேன். ஆனால் நீ உன் வீட்டு மயில் போன்ற மனைவியை தனிமையில் வாட விடலாமா? உன்னைப் போற்றிப் பாடுகின்ற எம்மைப் போன்ற புலவர்களுக்கெல்லாம் பரிசில் அளிக்க வேண்டுமென்று நீ விரும்பினால், இப்பொழுதே உன் தேரில் ஏறிச் சென்று உன் மனைவியுடன் வாழ்வதே எம்மைப் போன்றவர்களுக்கு நீ அளிக்கும் சிறந்த பரிசு, அதுவே இதயத்தை ஈர்க்கும் பரிசாகும்.

இதைத்தான்,
அறம் செய் தீமோ அருள் வெய் யோயென
இஃதுயாம் இரந்த பரிசில் அஃது இருளின்
இன மணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அருடம் படர் களைமே
என்கிறார்.

பரணரின் நல்லுரை கேட்ட பேகன், நன் கலமாகிய தேர் ஏறித் தன் மனைவியிடம் செல்கிறான். மங்கலமாகிறது மனைமாட்சி.

இந்தக் காட்சியும் சங்க இலக்கியமான புற நானூற்றில் இடம் பெற்றிருக்கின்றது.

புறநானூற்றில் மட்டுமல்ல சங்க இலக்கியங்கள் ஒவ்வொன்றிலும் இதயத்தை ஈரமாக்கும் இத்தகைய இனிய பாடல்கள் புதையல்களாய்ப் புதைந்து கிடக்கின்றன.

-**இனியவன்**

# மணிக்கவிதை



**உன் பிஞ்சு பாதங்கள்**
பூக்களைக்கொண்டு
தரையமைப்பேன்
உன் பிஞ்சு மென்
பாதங்கள் குதித்தோட

**புதிய பாதை**
பாதை இல்லாத போதும்
உன் பாதங்களை பதிய வை..
புதிய பாதை ஆகட்டும்!

**முதல் மொழி**
கவிதையின்
முதல் மொழி
குழந்தையின்
மழலை……ம் மா……

**மரியாதை**
கோபத்திற்கு
இருக்கும் மரியாதை
யாரும் புன்னகைக்கு
கொடுப்பதில்லை…

**சிறு சந்தோஷம்**
பேரின்பம் வேண்டாம்
சிறுசிறு சந்தோஷங்கள்
போதும்
நம் வாழ்வை நாமே
அனுபவித்து வாழ…!

**நினைவுத் துளி**
சிந்தும்
மழை தூறலில்
சேர்ந்து
நனைந்த நினைவு
துளிகள்…!

**நீயாகவே**
மற்றவர்களைப்
பார்த்து பார்த்து
நீ அவர்களைப்
போல் வாழ்ந்தால்
உன்னைப் போல்
யார் வாழ்வது
ஆகவே நீ
நீயாகவே இரு…!

**அழகு**
நிலவை
அழகாக்க
இருளை பூசிக்கொண்டது
இரவு…

**மருந்து**
குழந்தையின்
சிரிப்பு ஒன்றே
போதும்
மனதிலுள்ள காயங்களை
குணப்படுத்த…!

**நம்பிக்கை**
வெற்றிபெறும் நேரத்தைவிட
நாம் மகிழ்ச்சியுடனும்
நம்பிக்கையுடனும்
வாழும் நேரமே
நாம் பெறும்
பெரிய வெற்றி…

**நிம்மதி**
விட்டுக் கொடுங்கள்
அல்லது
விட்டு விடுங்கள்
நிம்மதி நிலைக்கும்

**தொகுப்பு: எல்.எஸ்.**

# கிழக்கின் குரல்



# கல்முனை இந்துமயானத்தில் கல்லறை நிர்மாணிக்க தடை

## மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

**கல்முனை விசேட நிருபர்**

கல்முனை இந்து மயானத்தில் கல்லறைகள் நிர்மாணிப்பதற்குத் தடை விதிக்கும் தீர்மானம் கல்முனை மாநகர சபையினால் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 58ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்று முன்தினம் (18) மாநகர முதல்வர், சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்ற போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான ஹென்றி மகேந்திரன் இது தொடர்பான பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றினார்.



அவர் தனது உரையில் தெரிவித்தாவது,

"மரணமடைகின்ற இந்துமக்களின் பூதவுடல்களை கல்முனையிலுள்ள இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்து, மரணமடைந்தவர்களின் நினைவாகவும் அடையாளப்படுத்துவதற்காகவும் அவர்களின் குடும்பத்தவர்களினால் கல்லறைகள் கட்டப்படுகின்றன. இது எமது பாரம்பரிய மரபாக இருந்துவரும் போதிலும், தொடர்ச்சியாக இதனைச் செய்வதற்கு அனுமதித்தால், இன்னும் சிறிது காலத்தில் இம்மயானத்தில் பூதவுடல்களை அடக்கம் செய்வதற்கு இடமில்லாமல் போகக்கூடிய நிலைமை ஏற்படும்.

இதேவேளை, கல்முனை பிரதேசத்தில் இன்னொரு புதிய மயானத்தை உருவாக்குவதற்கும் இடமில்லை.

ஆகையினால், இவற்றைக் கருத்தில் கொண்டு இம்மயானத்தில் அடக்கம் செய்யப்படும் பூதவுடல்களுக்கு கல்லறைகள் கட்டுவதைத் தவிர்க்குமாறும், அடையாளப்படுத்துவதற்காக மாத்திரம் பெயர் விபரங்களை ஒரு பலகையிலோ அல்லது கல்லிலோ எழுதி நடுவதன் மூலம் எதிர்காலத்தில் இடப்பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ள முடியும்" என்றார்.

"மாநகர சபையின் பொது வசதிகள் குழுவின் தவிசாளர் எனும் வகையில் இதற்கான முயற்சி எடுத்து பிரேரணையை இச்சபையில் சமர்ப்பித்துள்ளேன். எமது சமூகம் சார்ந்த, எதிர்கால சந்ததியின் நன்மையை கருத்தில் கொண்டு இப்பிரேரணையை நிறைவேற்றுவதற்கு ஆதரவு வழங்கவும்" என கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மேற்படி பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

# திருமலை மாவட்ட செயலகத்தில் த.ம.வி.பு. கட்சி வேட்புமனு தாக்கல்



**கந்தளாய் தினகரன் நிருபர்**

2023ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை, திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இராஜங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி நேற்று முன்தினம் (18) தாக்கல் செய்தது.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் (18) ஆரம்பமாகியதுடன், எதிர்வரும் 21ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வேட்புமனுக்கள் ஏற்கப்படவுள்ளன.

இந்நிலையில், திருகோணமலை மாவட்ட செயலகத்தில் முதலாவது வேட்புமனுவை, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தாக்கல் செய்தது.

# நிந்தவூரில் கருத்தரங்கு



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்வதற்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கொன்று நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில், ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் ஸ்தாபகர் மர்யம் மன்சூர் நளீமுதீனால், இது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதில் இளைஞர், யுவதிகள் பலரும் கலந்துகொண்டு நன்மையடைந்தனர்.

# களுதாவளை வீடொன்றில் திருட்டு; 5 சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை பிரதான வீதியை அண்டி அமைந்துள்ள வீடொன்றில் திருட்டுப் போன சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட 5 பேரை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த வருடம் மேற்படி வீட்டிலிருந்து 54 பவுண் தங்கநகைகளும் 10 இலட்சம் ரூபா பணமும் திருட்டுப் போயிருந்தது. இது தொடர்பாக விசாரணையை முன்னெடுத்த களுவாஞ்சிக்குடி பொலிஸார், கடந்த 16ஆம் திகதி ஓந்தாச்சிமடம் பிரதேசத்தில் பிரதான சந்தேக நபரைக் கைது செய்தனர். இச்சந்தேக நபரிடம் விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், 3 ஆண்களையும் ஒரு பெண்ணையும் கைது செய்தனர்.

இச்சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி, 3 தோட்டாக்கள், ஒரு கைக்குண்டு, ஒரு இரும்புக்கம்பி, போலி இலக்கத்தகட்டுடன் ஒரு மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசிகள், 120 கிராமுடைய தங்கக்கட்டி, ஒரு தங்கச்சங்கிலி, குறடு, ஸ்கூட்றைவர் ஆகியவற்றை மீட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் 2 நாட்கள் பொலிஸ் தடுப்பு விசாரணையில் வைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (18) ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம்



**பெரியநீலாவணை விசேட, மருதமுனை தினகரன் நிருபர்கள்**

போதைப்பொருள் பாவனையை முற்றாகக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பாக ஆராயும் கூட்டமொன்று, மருதமுனை அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், பிரான்ஸ் சிற்றி வீட்டுத்திட்டத்திலுள்ள றையான் ஜும்ஆ பள்ளிவாசலில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மருதமுனையிலுள்ள 22 பள்ளிவாசல்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

போதைப்பொருள் பாவனையால் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக இக்கூட்டத்தில் கலந்துகொண்டோர் கருத்துகளை முன்வைத்தனர்.

பொலிஸார், அதிரடிப்படையினர், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பள்ளிவாசல்களின் நிர்வாகங்களின் ஒத்துழைப்புடன் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# தம்பலகாமம் பிரதேசத்தில் பாரம்பரிய பொங்கல் விழா





**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேசத்தில் பாரம்பரிய முறையில் தைப்பொங்கல் விழா நேற்று (19) மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பொங்கல் விழாவின் போது, பிரதேச செயலகத்திலிருந்து மாட்டு வண்டியில் வயல்வெளிக்குச் சென்ற உத்தியோகத்தர்கள், பாரம்பரிய முறையில் நெல் அறுவடையை மேற்கொண்டனர். இதனை தொடர்ந்து, தம்பலகாமம் பிரதேச செயலக வளாகத்தில் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் வகையில் விசேட பூஜையுடன் பொங்கல் விழா நடைபெற்றது. விசேட பூஜையை சுவாமிமலை பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள் மோகன சர்மா நடத்தினார். இதன்போது, மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

# அட்டாளைச்சேனை ப.நோ.கூ.ச விசேட பொதுச்சபை கூட்டம்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, 9 இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவின் போது, பெண்கள் இருவர் போட்டியின்றித் தெரிவாகினர்.

18 - 35 வயதுக்குட்பட்டோருக்கான இருவர் தெரிவில் 4 பேர் முன்மொழியப்பட்டு, 4 பேரும் வாக்கெடுப்பின் போது சம வாக்குகளை பெற்றனர். இதன் பின்னர், இருவர் திருவுளச்சீட்டின் மூலம் தெரிவாகினர்.

ஏனைய ஐவரை தெரிவு செய்வதற்கான தெரிவின் போது, 10 பேருக்கிடையில் போட்டி நிலவியது. வாக்குகளின் அடிப்படையில் முதல் 5 பேர் தெரிவாகினர். இத்தெரிவு வாக்குகளை மீள எண்ணுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மீளவும் எண்ணி சரி பார்க்கப்பட்டது.



இரு வேறு குழுக்களுக்கிடையில் போட்டி நிலவிய போதும், முன்னாள் தலைவர் சார்பான அணிக்கு 6 உறுப்பினர்களும் மாற்று அணிக்கு 3 உறுப்பினர்களும் தெரிவாகினர்.

98 பொதுச் சபை உறுப்பினர்களில் 94 பேர் சமுகமளித்திருந்தனர்.

உத்தியோகத்தர் எம்.ஐ.எம். பரீட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# திருமலையில் தேர்தல் முறைப்பாட்டு நிலையம்

**றொட்டவெவ குறூப் நிருபர்**

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பாக மாவட்ட தேர்தல் பிணக்குகள் தீர்த்தல் நிலையமொன்று, திருகோணமலை மாவட்ட செயலகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை இந்நிலையத்தில் முன்வைக்க முடியுமென, தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிரதம கணக்காளர் நடேசு சற்கணேஸ்வரன், பட்டினமும் சூழலும் உதவிப் பிரதேச செயலாளர் எம்.டி.எல்.என். குணதிலக்க, மாவட்ட செயலகக் கணக்காளர் ஏ.ஏ.எல்.பிரசாத் விஜேசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# பன்மைத்துவ சமூகத்தை கட்டியெழுப்பும் செயலமர்வு

**கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



'பன்மைத்துவம் கொண்ட சமூகத்தைக் கட்டியெழுப்புதல்' தொடர்பாக இரு நாட்களைக் கொண்ட பயிற்சிச் செயலமர்வொன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்லடியிலுள்ள தனியார் விடுதியில் நேற்று (19) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் சர்வமத பேரவையின் ஒழுங்குபடுத்தலின் கீழ்,

'இன நல்லுறவு, இன ஐக்கியப்பாட்டை மேம்படுத்துவதற்காக பன்மைத்துவம் கொண்ட சிறந்த சமூகத்தை கட்டியெழுப்புவது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

இச்செயலமர்வின் வளவாளர்களாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களான கலாநிதி என்.புஸ்பராஜாவும் கலாநிதி கே.சுரேஸூம் கலந்துகொண்டனர்.

# அரபுமொழி தினம்; இலச்சினை வழங்கல்



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

அரபுமொழித்தினத்தையொட்டி அம்பாறை மாவட்டத்திலுள்ள அல்ஹம்றா மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்களுக்கும் கல்விசாரா ஊழியர்களுக்கும், மௌலவி ஈ.எல்.எம்.ஹஸ்ஸானின் ஏற்பாட்டில் கௌரவ இலச்சினை வழங்கி வைக்கப்பட்டது.

பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

ஆசிரியரும் மௌலவியுமான எம்.எல். பைசால் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# கல்முனையில் மாணவர்களின் போஷாக்கை அதிகரிக்கும் திட்டம்

**ஒலுவில் விசேட நிருபர்**

பாடசாலை மாணவர்கள் மத்தியில் போஷாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை அப்பல்கலைக்கழகத் தகவல் தொழில்நுட்பப்பீட பீடாதிபதி யூ.எல். அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்றது.

மாணவர்களுக்காக தற்போது தயாரிக்கப்பட்டு வரும் ஆயுர்வேத போஷணை மிக்க பிஸ்கட்டுகள், போஷாக்கு மா ஆகியவை தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.








லண்டனிலுள்ள ஒக்ஸ்போட் உலக வரலாற்று மையத்தில் புலம்பெயர் செயற்பாட்டாளர்களால் பாரம்பரிய தமிழர்களின் பறை இசையுடன் தைப்பொங்கல் நிகழ்வு நடைபெற்றது. படத்தில் பறையிசை கலைஞர்களையும் காணலாம். (படம்: வவுனியா விசேட நிருபர்)

# ஏ–9 வீதியில் கரடியின் சடலம் மீட்பு

**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**



ஏ9 வீதியில் விபத்தில் உயிரிழந்த நிலையில் முதுமையான கரடியொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொக்காவிலுக்கும் மாங்குளத்துக்கும் இடைப்பட்ட ஏ 9 வீதிப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 10.00 –12.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் கரடி உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

அப்பகுதியில் விலங்குகள் நடமாடுவதாக அறிவிப்பு பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன. எனினும் இரவு நேரத்தில் வாகனத்தை அதிவேகமாக செலுத்தியமையால் விலங்கின் உயிர் பறிபோயுள்ளது. கரடியின் மரணம் தொடர்பாக முல்லைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். விலங்குகளை பாதுகாப்பது மக்களின் பொறுப்பாகும். குறிப்பாக பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் வழியாக இரவில் வாகனம் செலுத்தும்போது விலங்கினங்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு வாகனத்தை செலுத்துமாறு வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில்

# போஷாக்குக் குறைபாட்டால் 931 குழந்தைகள் பாதிப்பு

**வவுனியா விசேட நிருபர்**

பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 931 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட வினாவுக்கு பதில் வழங்கிய போதே அதில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா மாவட்டத்தின் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக 6465 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளனர். அத்துடன் 931 குழந்தைகளும், 213 கர்ப்பிணிப் பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.



# மிருசுவிலில் மாடுகள் திருட்டு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் திருட்டுப் போவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் மிருசுவில் மருதங்குளம் பகுதியில் வீட்டு வளவுக்குள் கட்டப்பட்டிருந்த மாடுகளை கடத்தும் முயற்சியில் சிலர் வாகனத்தில் வந்துள்ளனர். எனினும் ஊரவர்கள் விழித்துக்கொண்டதில் ஒரு பசுமாட்டை மாத்திரம் திருடிச் சென்றிருப்பதாக தெரியவருகின்றது.

சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான பசு மாடு மாத்திரம் திருடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதுதொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்யப்பட்டுள்ளது. அதே சமயம் கடந்த வாரம் மிருசுவில் பகுதியிலிருந்து திருடிச் செல்லப்பட்ட பசு மாடு ஒன்று வடமராட்சிப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டிருந்த போது பொலிஸாரால் மீட்கப்பட்டது.

# வர்த்தக நிலையம் மீது தாக்குதல் : ஐந்து இலட்சம் ரூபா கொள்ளை

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றின் மீதும் அதன் உரிமையாளர் மீதும் இனம் தெரியாத குழுவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தாக்குதல் நடத்தி, ஐந்து இலட்ச ரூபா பணத்தினை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

வர்த்தக நிலைய உரிமையாளர் வர்த்தக நிலையத்தை மூடுவதற்கு தயாரான நேரத்தில் வாள் மற்றும் கொட்டன்களுடன் 3 மோட்டார் சைக்கிளில் வந்த 7 பேர் கொண்ட குழுவினரே தாக்குதலை நடாத்தியுள்ளனர். தாக்குதலாளிகள் வர்த்தக நிலையம் மீது வெற்று கண்ணாடி போத்தல்களால் தாக்குதல் நடத்தியதுடன் உரிமையாளரை வாளினால் வெட்டிவிட்டு வர்த்தக நிலையத்தை அடித்து நொறுக்கியுள்ளனர்.

அத்துடன் வர்த்தக நிலையத்திலிருந்த ஐந்து இலட்சம் ரூபா பணத்தினையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வெட்டுக்காயங்களுக்குள்ளான வர்த்தக நிலைய உரிமையாளர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார், தடயவியல் பொலிஸார் மற்றும் கோப்பாய் பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சி.சி.டி.வி காணொளிகளின் அடிப்படையில் குழுவினரை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல்கள்



உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான சிங்கள மொழி மூல அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வழிகாட்டல் கருத்தரங்கில் தென் மாகாணத்தைச் சேர்ந்த பிரதி பிரதம செயலாளர் சந்திரலால் (நிர்வாகம்) பிரதான வளவாளராக கலந்து கொண்டார்.

கருத்தரங்கானது உதவித் தேர்தல் ஆணையாளர் தேவராசா , ஹென்ஸ்மனின் ஏற்பாட்டில் நடைபெற்றதுடன் வெலிஓயா பிரதேச செயலாளர், முல்லைத்தீவு மாவட்டத்தின் தரைப்படை , கடற்படை, விமானப்படை, பொலிஸார் போன்றோர் கலந்து கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான தமிழ் மொழிமூல அத்தாட்சிப்படுத்தும் அலுவலகர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் நடைபெற்றது.

கருத்தரங்கானது உதவித் தேர்தல் ஆணையாளர் தேவராசா ஹென்ஸ்மனின் தலைமையில் நடைபெற்றது. மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன்(நிர்வாகம்), முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல அரச திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையம்





பாடசாலை மாணவர்களின் பல் சுகாதாரத்தை சிறப்பாக வைத்துக் கொள்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டு நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு (18.01.2023) முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் பற்சிகிச்சை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மு.உமாசங்கர் ஆகியோர் திறந்துவைத்தனர். இதில் முக்கியமான விடயம் யாதெனில் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் தங்கள் பற்சுகாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள பற்சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியும். இந்நிகழ்வில் முல்லை வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் திரு. உ.சுரேஸ்குமார் (கல்வி நிர்வாகர்), சுகாதார வைத்திய அதிகாரி திரு. சிவ கணேசன், முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் ஞா.ஜெபநேசன், பல் வைத்தியர், பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், தாதியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# முள்ளிவாய்க்காலில் துப்பாக்கிகள் மீட்பு!

**மாங்குளம் குருப் நிருபர்**

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் பகுதியில் தனியார் காணியொன்றில் கிணற்றை தோண்டும் போது அதிலிருந்து துப்பாக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் மக்கள் பாதுகாப்பு தரப்பினருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கிகளை மீட்டு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். பழுதடைந்த துருப்பிடித்த ஏ.கே துப்பாக்கியொன்றும் கைத்துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டுள்ளது. இதனை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# கஞ்சாவுடன் இருவர் கைது விளக்கமறியல் உத்தரவு

**மாங்குளம் குருப் நிருபர்**

முல்லைத்தீவு ஜயன்கன்குளம் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டவர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஜயன்கன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சாவை கடத்த முற்பட்ட இருவரை ஜயன்கன்குளம் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்தனர்.

விசுவமடு கிழக்கைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவரும் தர்மபுரம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் சுமார் 6 கிலோ கஞ்சாவை கடத்த முற்பட்டதாக தெரியவருகின்றது. ஜயன்கன்குளம் பொலிஸாரின் விசேட நடவடிக்கையால் கைது செய்யப்பட்டு மாங்குளம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

# குளத்திலிருந்து சடலம் மீட்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், நல்லூர் நாயன்மார் கட்டுக்குளத்திலிருந்து நேற்றைய தினம் வியாழக்கிழமை பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அதே பகுதியை சேர்ந்த செல்வத்துரை மகேஸ்வரி (வயது 56) எனும் பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



யாழ்ப்பாணம் கொட்டடிப்பகுதியில் அமைந்துள்ள விலூன்றி இந்து கல்லூரியில் கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கிவைக்கப்பட்டது. இந்நிகழ்வை யாழ்.மாநகரசபை உறுப்பினரும் யாழ். மாவட்ட தேசோதய தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் தனது மனைவியின் ஞாபகார்த்தமாக வழங்கிவைத்தார்.


உங்கள்
நேத்ரா Tvயில்
மனங்கவர்ந்த திரைப்படங்கள்
சூரரைப் போற்று
SULTHAN
அசுரன்
ஈஸ்வரன்
சந்தோஷ் சுப்ரமணியம்
SANTOSH SUBRAMANIAM
வாரணம் ஆயிரம்
யாரடி நீ மோகினி
குருவி
நேத்ரா TV
நேசத்தின் நெருக்கம்
வார இறுதி நாட்களில் நண்பகல் 12:00மணிக்கு / இரவு 08:30க்கு
காணத்தவறாதீர்கள்!!

# இந்து–புனித பத்திரிசியார் போட்டி சமநிலையில் முடிவு



யாழ். இந்து மற்றும் புனித பத்திரிசியார் கல்லூரிகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட பிரிவு மூன்றின் இரண்டு நாள் போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது.

இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை நிறைவடைந்த இந்தப் போட்டியில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 160 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த புனித பத்திரிசியார் கல்லூரி ஆட்ட நேர முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 251 ஓட்டங்களை பெற்றது.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்துக் கல்லூரி 8 விக்கெட் இழப்புக்கு 334 ஓட்டங்களை பெற்றது.

அபாரமாக துடுப்பெடுத்தாடிய இடது கை துடுப்பாட்ட வீரர் கிரிஷ்னராஜன் பரஷித் 107 ஓட்டங்களை பெற்றதோடு வை. தருஜன் 80 ஓட்டங்களை குவித்தார்.

# டாக்கா மரதன் போட்டியில் இலங்கையிலிருந்து 12 பேர்

**குமார் சண்முகேஸ்வரனும் பங்கேற்கிறார்**



பங்களாதேஷில் நடைபெறவுள்ள டாக்கா மரதன் போட்டியில் இலங்கையில் இருந்து 12 வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இன்று (20) நடைபெறவுள்ள இந்த சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் கென்யா, எதியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த உலகின் முன்னணி மரதன் ஓட்ட வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். இதில் இலங்கை வீரர்கள் முழு மரதன் மற்றும் அரை மரதன் என இருவகை போட்டிகளிலும் களமிறங்கவுள்ளனர்.

இதில் தேசிய மட்ட அரை மரதன் மற்றும் நீண்ட தூர ஓட்டப் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தி வரும் மலையக வீரரான குமார் சண்முகேஸ்வரன் ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் இலங்கை சார்பில் போட்டியிடவுள்ளார்.

தவிர, பிரதீப் தம்மிக்க (கடற்படை), தலவாரிகே ரத்னபால (விமானப் படை), எம்.எஸ். குமார (கடற்படை) ஆகியோர் ஆடவர் முழுநேர மரதன் போட்டியில் கலந்துகொள்ளவிருப்பதோடு ஆடவர் அரை மரதன் போட்டியில் டி.எஸ். திஸாநாயக்க (இராணுவம்), ஜி.டி சந்தகெலும் (இராணுவம்) ஆகிய வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

# சாஹிரா 2000 குழுவின் கிரிக்கெட் ஜன. 22இல்

**ருஸைக் பாரூக்**

கொழுப்பு சாஹிரா கல்லூரி 2000ஆம் ஆண்டு பழைய மாணவர் குழு நான்காவது வருடமாக ஏற்பாடு செய்துள்ள 5 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டி ஜனவரி 22 ஆம் திகதி காலை 7.30 மணி தொடக்கம் கொழும்பு ஷாலிகா மைதானத்தில் அந்தக் குழுவின் தலைவர் ஷப்ராஸ் சாலியின் தலைமையில் நடைபெறவுள்ளது.

கொழும்பு சாஹிரா கல்லூரி கிரிக்கெட் அணியின் முன்னாள் துணைத் தலைவர் ஷிஹாம் சுஹைர் பிரதம அதிதியாகவும், 2000ஆம் ஆண்டு குழுவின் முன்னாள் தலைவர்களான ரியாஸ் காசிம், ஜாபர் உஸ் சாதிக் மற்றும் மொஹமட் ரில்வான் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொள்வார்கள் என பொதுச் செயலாளர் ஹஸ்மில் ஹம்தூன் தெரிவித்தார்.

# ஹாஷிம் அம்லா ஓய்வு



தென்னாபிரிக்க அணிக்காக இரண்டாவது அதிக டெஸ்ட் ஓட்டங்களை பெற்றுள்ள 39 வயது ஹாஷிம் அம்லா அனைத்து வகை கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வை அறிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் ஜக் கலிஸுக்கு (13,206) அடுத்து அதிக ஓட்டங்களாக 9,282 ஓட்டங்களை பெற்றிருக்கும் அம்லா, 124 டெஸ்ட் போட்டிகளில் ஆடி இருப்பதோடு அவரது ஓட்ட சராசரி 46.64 ஆகும்.

அவர் 2004 தொடக்கம் 2019 வரை தென்னாபிரிக்காவுக்காக அனைத்து வடிவ கிரிக்கெட்டிலும் மொத்தம் 18,672 ஓட்டங்களை பெற்றிருப்பதோடு, ஒருநாள் போட்டிகளில் பெற்ற 27 சதங்கள் தென்னாபிரிக்காவின் சாதனையாக உள்ளது.

2012இல் இங்கிலாந்துக்கு எதிராக ஓவலில் ஆட்டமிழக்காது அம்லா பெற்ற 311 ஓட்டங்களுமே தொன்னாபிரிக்க வீரர் ஒருவரின் அதிகூடிய டெஸ்ட் ஓட்டங்களாகவும் உள்ளது.

எனினும் 2019 ஓகஸ்டில் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற அம்லா அது தொடக்கம் லீக் போட்டிகள் மற்றும் கவுண்டி கிரிக்கெட்டுகளில் மட்டும் விளையாடி வந்தார். தற்போது அதிலிருந்தும் விடைபெற்றுள்ளார்.

ஓய்வு அறிவிப்பு குறித்து சர்ரே கவுண்டி அணியின் வலைதளத்திற்கு அளித்த பேட்டியில், "எனக்கு ஓவல் மைதானத்தைப் பற்றிய சிறந்த நினைவுகள் உள்ளன. இறுதியாக அதை ஒரு வீரராக விட்டுச் செல்வது, என்ன நடந்தது என்பதற்கான மகத்தான நன்றியுடன் என்னை முழுமை அடைய செய்கிறது." என்று தெரிவித்தார்.

# பாபர் அஸாமின் 'சர்ச்சை' செய்தி பொய்யென உறுதி



பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாம் சக வீரரின் காதலியுடன் ஆபாசமாக பேசுவதாக ஊடகங்கள் வெளியிட்ட செய்தி பொய்யானது என்று அந்த பொய்ச் செய்தியை வெளியிட்ட நபரே சமூக ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செய்தியை சரிபார்க்காமல் வெளியிட்ட ஊடகங்களை சாடிய, தனது அடையாளத்தை வெளியிடாத அந்த நபர் ஊடகங்கள் இதற்காக பாபர் அஸாமிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இதற்காக தனிப்பட்ட முறையில் பாபர் அஸாமிடமும் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

பாபர் அஸாம், சக கிரிக்கெட் வீரர் ஒருவரின் காதலியுடன் மெசேஜ் செய்வதும், ஆபாசமாகப் பேசுவதுமான வீடியோ ஒன்று சமூக வலைதளத்தில் வெளியானது. இது பல இந்திய ஊடகங்களிலும் ஒளிபரப்பப்பட்டன.

அந்த வீடியோவில், "நீ என்னுடன் தொடர்ந்து ஆபாசமாகப் பேசிக் கொண்டு இருந்தால் உனது காதலனை நான் அணியிலிருந்து நீக்க மாட்டேன்" என்று அவர் கூறுவது போன்ற காட்சி இடம் பெற்றிருந்தது.

இந்நிலையில் போலி ட்விட்டர் கணக்கு ஒன்றில் இருந்தே இந்த வீடீயோ பகிரப்பட்டுள்ளது. இந்த ட்விட்டை 850,0000 அதிகமானோர் பார்வையிட்டுள்ளனர். எனினும் நையாண்டிக்காக செய்யப்பட்ட இந்த வீடியோவை அந்த ட்விட்டர் கணக்கே நீக்கிய நிலையிலும் பிரதான ஊடகங்களில் அந்த செய்தி பிரபலம் அடைந்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# இந்தியாவுடன் பேச்சுக்கு பாக். பிரதமர் அழைப்பு




காஷ்மிர் போன்ற முக்கிய பிரச்சினைகள் குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் "தீவிரமான மற்றும் நேர்மையான பேச்சுவார்த்தைக்கு" பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷரீப் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவுடனான மூன்று போர்களுக்குப் பின்னர் பாகிஸ்தான் பாடம் கற்றுக்கொண்டதாகவும் அண்டை நாட்டுடன் அமைதியை விரும்புவதாகவும் டுபாயை தளமாகக் கொண்ட அல் அரபியா தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"காஷ்மிர் போன்ற எரியும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மேசையில் அமர்ந்து தீவிரமான மற்றும் நேர்மையான முறையில் பேசுவோம் என்ற செய்தியை இந்தியத் தலைமை மற்றும் பிரதமர் மோடிக்கு நான் விடுக்கிறேன். நிம்மதியாக வாழ்ந்து முன்னேற்றம் காண்பது அல்லது ஒருவருக்கு ஒருவர் சண்டை பிடித்து நேரத்தையும் வளத்தையும் வீணடிப்பது எமது கையிலேயே உள்ளது" என்று ஷரீப் தெரிவித்தார்.

# 11 வயது சிறுவனை சுட்டு கொன்ற 10 வயது சிறுவன்



மெக்சிக்கோவில் 10 வயதுச் சிறுவன் 11 வயதுச் சிறுவனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மெக்சிகோவில் போதை கடத்தல் தொடர்பில் அதிக வன்முறை இடம்பெறும் வரக்ரூஸ் மாநிலத்திலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது.

கொல்லப்பட்ட 11 வயதுச் சிறுவன் வீடியோ விளையாட்டில் 10 வயதுச் சிறுவனைத் தோற்கடித்ததாக அதிகாரிகள் கூறினர். அதனால் கோபமடைந்த 10 வயதுச் சிறுவன் வீட்டுக்குச் சென்று துப்பாக்கியை எடுத்துவந்து 11 வயதுச் சிறுவனைச் சுட்டதாகக் கூறப்படுகிறது.

அந்தச் சிறுவனும் அவனது குடும்பத்தாரும் தப்பியோடி விட்டனர். உயிரிழந்த சிறுவனின் தாய் நீதி வேண்டும் என்று செய்தியாளர்களிடம் கூறினார். 10 வயதுச் சிறுவனின் பெற்றோர் பொறுப்பின்றித் துப்பாக்கியை மேசையில் வைத்ததால் தான் தனது மகன் கொல்லப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

# நியூசிலாந்து பிரதமர் ஆர்டன் திடீர் இராஜினாமா அறிவிப்பு



நியூசிலாந்து பிரதமர் பதவியை அடுத்த மாதம் இராஜினாமா செய்யப்போவதாக ஜெசின்டா ஆர்டன் திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். தலைமை வகிப்பதற்கான ஆற்றல் தொடர்ந்தும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

வரும் பெப்ரவரி 7 ஆம் திகதிக்கு முன்னதாக ஆளும் தொழில் கட்சி தலைமை பதவியில் இருந்து அவர் விலகவுள்ளார். அவரது இடத்திற்கான புதிய தலைவரை தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ளது.

நியூசிலாந்தில் வரும் ஒக்டோபர் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

கோடை விடுமுறையில் தனது எதிர்காலம் பற்றிய தீர்மானத்தை எடுத்ததாக 42 வயதான ஆர்டன் குறிப்பிட்டுள்ளார். "அந்தக் காலப்பகுதியில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி நான் முடிவெடுத்தேன். துரதிருஷ்டவசமாக என்னால் (பதவியில்) தொடர முடியாது என்பதோடு நான் பதவியில் தொடர்ந்தால் நியூசிலாந்துக்குச் செய்யும் அவமதிப்பாக இருக்கும்" என்று ஆர்டன் நேற்று (19) செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டு தனது 37 வயதில் பிரதமராக தெரிவானபோது உலகின் இளம் பெண் பிரதமராக பதிவானார். ஓர் ஆண்டின் பின் பதவியில் இருக்கும்போது குழந்தை பெற்றுக்கொண்ட இரண்டாவது பெண் தலைவராக பதிவானார்.

கொவிட் பெருந்தொற்று, அதனைத் தொடர்ந்து பொருளாதார மந்தநிலை மற்றும் கிறிஸ்சேர்ச் பள்ளிவாசல் துப்பாக்கிச்சூடு காலப்பகுதியில் அவர் நியூசிலாந்து தலைவராக இருந்துள்ளார்.

2020 தேர்தலில் ஆர்டனின் தொழில் கட்சி பெரு வெற்றி பெற்றபோதும், அண்மைக் காலத்தில் அவரது புகழ் நாட்டில் பெரும் வீழ்ச்சி கண்டிருப்பது கருத்துக் கணிப்புகளில் தெரிய வருகிறது.

# ஜெனினில் இஸ்ரேல் படையால் இரு பலஸ்தீனர் சுட்டுக்கொலை



ஜெனின் நகரில் இஸ்ரேல் படை நடத்திய சுற்றிவளைப்பில் மேலும் இரு பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதன்மூலம் ஜனவரி மாதத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படையினரால் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 17ஆக உயர்ந்துள்ளது.

உள்ளூர் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருக்கும் ஆறு குழந்தைகளின் தந்தையான 57 வயது ஜவாத் பரீத் பவக்னி கடந்த வியாழக்கிழமை காலை ஜெனின் அகதி முகாமில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதன்போது ஜெனின் போராட்ட குழுவுடன் தொடர்புபட்ட 28 வயது அதம் ஜபரீன் என்ற இளைஞனும் கொல்லப்பட்டிருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

துப்பாக்கிச் சூட்டில் மேலும் நான்கு பலஸ்தீனர்கள் காயமடைந்துள்ளனர். 70 கவச வாகனங்களுடன் ஜெனின் அகதி முகாமுக்குள் நுழைந்திருக்கும் இஸ்ரேலிய துருப்பினர் மூன்றரை மணி நேரத்திற்கு பின்னரே அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

ஜனவரி மாதத்திற்குள் இஸ்ரேலிய படையினரால் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களில் நான்கு சிறுவர்கள் அடங்குகின்றனர்.

# மனைவி தலையை துண்டித்த நபருக்கு எட்டு ஆண்டுகள் சிறை



தனது 17 வயது மனைவியின் தலையை துண்டித்து கொலை செய்த ஆடவர் ஒருவருக்கு எட்டு ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அஹ்வாஸ் நகரில் மனைவியின் துண்டிக்கப்பட்ட தலையுடன் சஜ்ஜாத் ஹெய்தாரி என்ற அந்த ஆடவர் சிரித்தபடி இருக்கும் படம் பரந்த அளவில் கோபத்தை ஏற்படுத்தியது. இது ஒரு கௌரவக் கொலை என்று கருதப்பட்டது.

அந்தப் பெண்ணின் பெற்றோர் ஆடவருக்கு மன்னிப்பு வழங்கியதாலேயே தண்டனை குறைக்கப்பட்டதாக ஈரானிய நீதித்துறை பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கொலைக்கு தான் ஒப்புதல் அளிக்கவில்லை என்று அந்தப் பெண்ணின் தந்தை முன்னதாகக் குறிப்பிட்டிருந்தார்.

மோனா என்ற அந்தப் பெண் 12 வயதிலேயே திருமணம் புரிந்து 14 வயதில் ஆண் குழந்தை ஒன்றை பெற்றுள்ளார். கணவரின் கொடுமை காரணமாக அவர் துருக்கிக்கு தப்பிச் சென்றிருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. நாடு திரும்பிய நிலையிலேயே அவர் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார்.

**ஜப்பானில் கொவிட் தொற்றை:**

# சாதாரண சளிக்காய்ச்சலாக வகைப்படுத்துவதற்கு திட்டம்



கொவிட்–19 நோய்ப் பரவலின் தரம்பிரிப்பில், அதன் கடுமையை மிகக் குறைந்த நிலைக்குக் கொண்டுவர ஜப்பான் திட்டமிட்டுள்ளது. ஜப்பான் சாதாரண சளிக்காய்ச்சல் போலவே அதை வகைப்படுத்த நினைப்பதாக அரசாங்கத்தின் நிக்கேய் செய்தி நிறுவனம் கூறியது.

புதிய வகைப்படுத்தும் முறை கொவிட்–19 நோய்ப் பரவலை நாடு எப்படி எதிர்கொள்கிறது என்பதைத் தீர்மானிக்கும். இதனால் தனிமை உத்தரவு உள்ளிட்ட பல அம்சங்களில் பெரிய மாற்றம் வரலாம்.

உள்ளரங்குகளில் முகக்கவசம் அணிவதும் கைவிடப்பட்டு, தொற்று உள்ளவர்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லாமல் போகலாம். ஜப்பானில் ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் பேர் வரை கொவிட்–19 நோய்க்கு ஆளாகும் நிலையில் புதிய மாற்றம் குறித்த பேச்சு நடைபெற்று வருகிறது.

பிரதமர் புமியோ கிஷிடா இது தொடர்பில் இன்று (20) அமைச்சர்களைச் சந்திக்கவுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**107**

**டொயோட்டா கார்கள்**
விற்பனைக்கு

WP KP-3036 TOYOTA DAA-NHW20 Prius Motor Car 2008 White கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் இல. 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 200272. 004024



**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

EP BDV-6656 Bajaj Platina M/ Cycle அதியுயர் விலைக்கு ண்டு . செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழ மையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 003988

EP BIW-3570 Bajaj Platina M/ Cycle அதியுயர் விலைக்கு ண்டு . செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 0774789216. திங்கட்கிழ மையிலி ருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 003990

### வேலைவாய்ப்பு



**319**

**வெற்றிடங்கள்**
**வீட்டு வேலையாளர்கள்**

வயோதிப தாயாரை வீட்டில் இருந்து பார்த்துக் கொள்வதற்கு (50 வயதிற்குக் குறைந்த பெண்) தேவை. (சம்பளம் 35, 000) ஆவதுடன் அவரது வேலை கண்காணிக்கப்பட்டு பின்னர் சம்பளம் அதிகரிக்கப்படும். உணவு, தங்குமிடம் வழங்கப்படும். 0779281663. 003547

**பெயர் மாற்றம்**

சம்மாந்துறை 07ம் பிரிவு, 1ம் குறுக்குத்தெரு, 3வது ஒழுங்கை, இல:82/1 இல் வசிக்கும் உதுமாலெப்பை ம.்றூப் ஆகிய நான் எனது மகனுடைய பெயரான ம.்றூப் அஸ்மாத் சாகி என்ற பெயரை இன்று முதல் அஸ்மத் ஸகி என பெயர்மாற்றிக் கொண்டேன். எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரை பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**U.L.ம.்றூப் (தந்தை)**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**டெர்மினல் திரிஹன்ட்ரட் சிக்ஸ்ட்டி ஐ (பிவிடீ) எல்டிடீ**
பதிவிலக்கம்: PV 124914
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 22.08.2017
பதிவு முகவரி: **இல. 23-1/2, காசல் லேன், கொழும்பு-14**

**சபையின் கட்டளைப் பிரகாரம்**
**தலைவர்/ பணிப்பாளர்**

## எஸ் ஓ எஸ் சிறுவர் கிராம இலங்கை அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

குமாரசிறி ரத்னாயக்க ஆகிய நான் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "எஸ் ஓ எஸ் சிறுவர் கிராம இலங்கை அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) இலங்கையினுள் எஸ் ஓ எஸ் சிறுவர் கிராமங்களை தாபித்தல்

(ஆ) எஸ் ஓ எஸ் சிறுவர் கிராமங்களில் வாழும் பிள்ளைகளுக்கு குடும்பத்தையொத்த முழுமையான பராமரிப்பினை வழங்குதல் மற்றும்

(இ) தாய்மார் மற்றும் பிள்ளைகளுக்கான சமூக நிலையங்களை தாபித்தல், ஹர்மன் மைனர் கல்லூரிகளை தாபித்தலும் தொழில் பயிற்சி நிலையங்களை தாபித்தலும்.

**பிறவும்.**

**குமாரசிறி ரத்னாயக்க**
**பாராளுமன்ற உறுப்பினர்**

## நகர சபை மன்னார்
# அறிவித்தல்

மன்னார் நகராட்சி மன்றத்தின் நவீன சந்தைக் கடைத்தொகுதியில் அமைந்துள்ள 18 ம் இலக்க கடை (புதிய இலக்கம் VM 17) 2021 ஜனவரி மாதம் முதல் நிலுவை செலுத்தப்படாது காணப்படுவதாலும் மற்றும் 21 ம் இலக்க கடை (புதிய இலக்கம் VM 20) 2020 ஐப்பசி மாதம் முதல் நிலுவை செலுத்தப்படாது காணப்படுவதாலும் இரு கடைகளும் பலமாதங்களாக தொடர்ச்சியாக பூட்டப்பட்டு காணப்படுவதனாலும் கடை உரிமையாளர்கள் 02.02.2023ம் திகதிக்கு முன் மன்னார் நகர சபையுடன் தொடர்பு கொண்டு நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தி உடன்படிக்கையினை புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தவறும் பட்சத்தில் கடைகள் மன்னார் நகராட்சி மன்றத்தால் கையகப்படுத்தி பொருத்தமான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்பதனை இத்தால் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**நகரசபை, மன்னார்**
20.01.2023

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை
# ஏலவிற்பனை அறிவித்தல்
## அழிவுறக்கூடிய கப்பல் பண்டங்களின் விற்பனை
## ஏலவிற்பனைத் திகதி: 2023.01.24

**ஏலவிற்பனை இல.: 01**

**எனது இல.: LD/S/T/446/2022/SLPA**

ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்காக அரிசியானது விலங்குணவாக 02x20' கொள்கலன்களில் அட்டவணைப்படுத்தப்பட்ட தடையகற்றப்படாத கப்பற் பண்டங்கள் JCT திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ளன. இப்பண்டத்தின் ஏலவிற்பனையானது 2023.01.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பண்டாரநாயக்க வாசல் நலன்புரி கட்டிடத்தில் நடைபெறும்.

**ஏலவிற்பனை இல.: 02**

**எனது இல.: LD/S/T/449/2022/SLPA**

ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்காக மனித உணவாக 01x20' கொள்கலனொன்றில் அட்டவணைப்படுத்தப்பட்ட தடையகற்றப்படாத கப்பற் பண்டங்கள் **JCT** திறந்த வெளியில் வைக்கப்பட்டுள்ளது. இப்பண்டத்தின் ஏலவிற்பனையானது 2023.01.24 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பண்டாரநாயக்க வாசல் நலன்புரி கட்டிடத்தில் நடைபெறும்.

ஏலவிற்பனை ஆவணங்கள் மற்றும் கேட் அனுமதிப்பத்திரங்கள் கொழும்பு-01, லோட்டஸ் வீதி, 15 ஆம் இலக்கத்திலுள்ள ஒரு நிறுத்த ஆவணமாக்கல் நிலையம், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவு ஏலவிற்பனை பிரிவின் அலுவலகத்தில் 2023.01.23 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து மு.ப. 11.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 (plusVAT & SSCL) ரூபா மற்றும் பணக்கொடுப்பனவாக 200,000 ரூபாவை மீளளிக்கப்படும் கட்டணமாகவும் செலுத்திய பின்னர் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த ஏலவிற்பனைகள் தனித்தனியான நடைமுறைகள் என்பதை தயவு செய்து கவனித்துக் கொள்வதுடன் மேலே குறிப்பிட்டுள்ள இரு பொருட்களுக்கும் விலைகளை இரண்டிற்கும் சமர்ப்பிக்க விரும்பும் நபர்கள் மேலேயுள்ள ஒவ்வொரு ஏலவிற்பனைக்குமான வைப்புக்களை ஒவ்வொன்றிற்கும் ஆயத்தமாக வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2023.01.23 ஆம் திகதியன்று மதியம் 12 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் உரித்தான திறந்த வெளியில் ஏல விற்பனைக்கு ஆயத்தமாகவுள்ள பட்டியலிடப்பட்டுள்ள பண்டங்கள் பரீட்சிக்கப்படலாம்.

www.slpa.lk என்ற இணையதளத்தை மேலதிக விபரங்களுக்காக பார்வையிடவும்.
பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்)

20.01.2023
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

# கேள்வி அறிவித்தல்
## சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு - 12
## சுத்திகரிப்பு சேவை வழங்கல் — வருடம் 2023

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பழைய மற்றும் புதிய கட்டிடங்களில் சுத்திகரிப்பு சேவைகளினை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

01. உரிய விண்ணப்பப் படிவத்தினை திணைக்களத்தின் காசாளரிடம் ரூபா. 1,000/- இனை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாகவும் ரூபா. 10,000/- மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாகவும் வைப்பிலிட்டுப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் தாபனப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
02. குறித்த கட்டிடங்களை வாராந்த நாட்களில் 2023.01.25 மற்றும் 2023.01.26 ஆம் திகதிகளில் பி.ப.01.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் பார்வையிட முடியும்.
03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2023.02.03 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் அல்லது நேரடியாகவும் கையளிக்கலாம்.
04. கேள்வி மனுக்கள் 2023.02.03 ஆம் திகதியன்று மு.ப.10.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் உரிய வழங்குநர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அதில் பங்கு பெறுவதற்கு அனுமதியளிக்கப்படுவார்கள்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைகள் குழு,**
**சட்டமா அதிபருக்காக.**

## விண்ணப்பத்திற்கான அறிவித்தல்
## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

இலக்கம் 805, பிரஸ்டன் மெனர் ட்ரைவ், மிஸ்ஸிஸ்சவுகா, ஒன்டாரியோ, L5M,3A1, கனடா எனும் முகவரியைச் சேர்ந்த அமரர் Tuan Uvaiz Pallie அவர்களின் இறுதி விருப்பாவணத்தைப் பொறுத்து கனடாவின் ஒன்டாரியோ உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் வழங்கிய, 1977ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சிவில் நடைமுறை விதித்தொகுப்புச் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தத்திற்குட்பட்ட சிவில் நடைமுறை விதித்தொகுப்பு XXXVIIIB எனும் அத்தியாயத்தின் கீழான இறுதி விருப்பாவணத்துடனான வெளிநாட்டு புரோபேட் அனுமதிப்பத்திரத்தின் மீள் முத்திரையிடல் விண்ணப்பம் தொடர்பானது

**விருப்பாவண**
வழக்கு எண் DTS /2022

**இறந்தவர்**
Gnei Raleena Pallie
இலக்கம் 42, ரொட்ரிகோ
மாவத்தை, நாவல

**மனுதாரர்**

இலக்கம் 805, பிரஸ்டன் மெனர் ட்ரைவ், மிஸ்ஸிஸ்சவுகா, ஒன்டாரியோ, L5M, 3A1, கனடா எனும் முகவரியைச் சேர்ந்த அமரர் Tuan Uvaiz Pallie அவர்களின் இறுதி விருப்பாவணத்தைப் பொறுத்து கனடாவின் ஒன்டாரியோ உயர் நீதிமன்றத்தின் பதிவாளரினால் மேற் பெயர்குறிப்பிடப்பட்ட மனுதாரருக்கு வழங்கப்பட்ட புரோபேட் அனுமதிப்பத்திரத்தின் மீள்முத்திரையிடலுக்கான விண்ணப்பமானது இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்கள் நிறைவடைந்ததன் பின்னர் சிவில் நடைமுறைச் சட்டத்தின் 554 (U) பிரிவின் கீழ் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**2023 ஆம் ஆண்டு ஜனவரி 20 திகதியன்று**

**டி.ஏ.டீ.எஸ். ஹெகோட**
**மேற்கூறப்பட்ட மனுதாரரின்**
**சட்டத்தரணி**

**Repeat Your ad For Better Offers**

எமது இல: ஆர்ஜீ/என்பீ/11/2/70/2022/ஏடு.தயா

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

1. கீழ் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4ஆம் பிரிவின் கீழ் மீள் அமைக்கப்பட்டிருக்கின்றது.
2. தொடக்கம் 2023.02.10 வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதயில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு மட்டக்களப்பு காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.
3. திருத்தியமைக்கப்பட விருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்மெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2023.02.17 திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | காணி பற்றிய விபரம் | பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்தின் மட்டக்களப்பு காணிப்பதிவகத்தின் G பிரிவின் 78வது புத்தகத்தின் 114வது ஏடு | கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப் பற்று கற்குடா இல் அமைந்துள்ள 'காயன்குடுப்பும், கல்குடாபும், பெரியதோனகுடு மற்றும் பெரிய தோன' என்னும் காணியின் லொட் 1 இற்கான எல்லைகள்<br>வடக்கு, கிழக்கு } பாதை<br>தெற்கு J. அப்புஹாமி, S. நாகப்பர், K. கந்திஹா ஆகியோர் உரித்துக் கூறும் காணி மற்றும் பாதை<br>மேற்கு T.P. 351953<br>பரிமானம் ஏக். 06 ரூட். 00 பர்ச் 10 | 1 N தில்லைநாதன் பிரசித்த நொத்தாரிசினால் 1975.09.14ந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 1021 உடைய நன்கொடை உறுதி<br>2 D.C. சின்னையா பிரசித்த நொத்தாரிசினால் 1997.11.09ந் தகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 3995 உடைய நன்கொடை உறுதி<br>3 K. குலசிங்கம் பிரசித்த நொத்தாரிசினால் 2007.12.20ந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 2164 உடைய நன்கெடை உறுதி |

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை**
**பத்தரமுல்லை**

**பீ.எஸ்.பி. அபேவர்தன**
**பதிவாளர் நாயகம்**

LANKA SATHOSA லங்கா சதொச
தேசத்திற்கு விலை நிர்ணயிப்பவர்

# பெறுகை அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## லங்கா சதொச லிமிடட்டுக்கு எழுது பொருட்கள் மற்றும் லொரி சீல் வழங்கல்

விலைமனு இலக்கம் LSL/PRO/05/03/Stationery/2023
**தேசிய போட்டிரீதியான விலைமனுகோரல்**

லங்கா சதொச லிமிடட்டுக்கு 03 மாத காலத்திற்கு எழுதுபொருட்கள் மற்றும் லொரி சீல் வழங்குவதற்காக உள்நாட்டு வழங்குனர்கள், உள்நாட்டு முகவர்கள், அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள், இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்களிடம் இருந்து, **லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால்** முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விபரக்குறிப்பு மற்றும் தேவை: விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு குறித்த ஆங்கில மொழியிலான குறித்த விலைமனு ஆவணங்களை 2,500.00 ரூபா (மிளளிக்கப்படாதது) கேள்விக் கட்டணம் ஒன்றை சமர்ப்பித்து **2023 ஜனவரி மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 2023 பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி வரையான** காலத்தில் கீழுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

லங்கா சதொச தலைமை அலுவலகம், பெறுகைப் பிரிவு (3ஆவது மாடி),
இலக்கம் 27, சதொச பொதுச் செயலாளர் அலுவலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி மு.ப. 11.00க்கு** மேலுள்ள முகவரியில் இடம்பெறும்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் மற்றும் மாதிரிகள், **2023 பெப்வரவரி மாதம் 13ஆம் திகதி மு.ப. 11.00க்கு முன்னர்**, மேலுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையேல் அந்த முகவரியின், பெறுகைப் பிரிவில் (3ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"LSL/PRO/05/03/Stationery/2023"** என குறிப்பிடுதல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கைக்குள் செயற்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட **நிபந்தனையற்ற முன்வைக்கப்படும் பெறுமதியில் 1% பெறுமதியைக் கொண்ட விலைமனு பிணை ஒன்றை (மீளளிப்படுகின்ற)** விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**விலைமனுக்களை ஏற்பது 2023 பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மு.ப. 11.00க்கு** முடிவுறுவதோடு விலைமனுக்களை திறப்பது, விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. வெற்றிகரமான விலைமனுதாரர் **ஒப்பந்தப் பெறுமதியில் 10% தொகையை செயல்திறன் பிணையாக (மீளளிக்கப்படும்)** செலுத்த வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரியை அழைக்கவும்.
சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி பெறுகை (திலினி) - 070 156 0428

கேள்வி/ ஒப்பந்தம் வழங்கும் இறுதி முடிவு தலைவர் - லங்கா சதொச லிமிடட் திணைக்கள பெறுகைக் குழு வசமானதாகும்.

தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,
லங்கா சதொச லிமிடட், சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,
இல.27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.



## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 39 அ (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

2013 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 20 ஆந் திகதிய 1802/14 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 82 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ், இக் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான் குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் I அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535B, திவுல்பிட்டிய மேற்கு கிராம அலுவலர் பிரிவில், திவுல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட CO/KSB/ 2019/499 ஆம் இலக்க, 2020.10.08 ஆந் திகதிய வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்ட பின்வரும் பெயர்கள் விஸ்தீரணங்களைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:

1. துண்டு "B" - வரி மதிப்பீட்டு இல. 48ஏ மற்றும் 48பீ ஸ்ரீ மஹா போதிராஜாராம வீதி - விஸ்தீரணம் : சுமார் 0.0609 ஹெக்டயார்

   வடக்கு: ஆ. வ. கொ. 9470 இல் துண்டு இல. 19 மற்றும் 18; கிழக்கு: ஆ. வ. கொ. 9470 இல் துண்டு இல. 18 மற்றும் 19; தெற்கு: ஆ. வ. கொ. 9470 இல் துண்டு இல. 19; மேற்கு : ஆ.வ. கொ. 9470 இல் துண்டு இல. 19.

**ஹரின் பெர்னாண்டோ,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.**

**எனது இல.: 4-3/10/2012/LRB/21.**
**காணி எடுத்தற் உத்தியோகத்தரின் இல.: WGSWD&EIP/ACQ/KB/08.**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**"மிஹிகத மெதுர", ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,**
**2022, ஒக்டோபர் 05.**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2014, மே மாதம் 05 ஆந் திகதிய 1861/ 6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 95 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) ஆம் பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் I ஆம் அட்டவணையில் காட்டப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ மற்றும் மஹரகம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில், 526/D - ஜம்புகஸ்முல்ல, 535C -பெபிலியான கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், பெபிலியான மற்றும் கங்கொடவில கிராமங்களில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2016.04.08 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இலக்கம் ஆ.வ.கொ. 9623 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்:

01. **துண்டு இல. 18 - வெலிமெட்டியே, பிட்டனியே ஓவிட்ட - விஸ்தீரணம்: 0.4004 ஹெக்டயார்**

    வடக்கு : துண்டு இல 16, சுனேத்ராதேவி வீதியின் இலக்கம் 426/12/A ஐக் கொண்ட காணி மற்றும் கொ 9467 ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 27; கிழக்கு : கொ 9467 ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 27, 26 மற்றும் 19; தெற்கு: துண்டு இல. 19 மற்றும் உரிமை கோருவோர் கண்டுபிடிக்க முடியாத சுனேத்ராதேவி வீதியின் வரி மதிப்பீட்டு இலக்கம் கண்டுபிடிக்க முடியாத காணி; மேற்கு: துண்டு இல. 17.

**ஹரின் பெர்னாண்டோ,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.**

**எனது இல. 4-3/10/2012/LRB/223.**
**கா.எ.உத். இல. : WGSWD&EIP/ACQ/MH/08.**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**"மிஹிகத மெதுர", இல. 1200/6,**
**ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,**
**2022, ஒக்டோபர் 05.**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு

### சப்ரகமுவ மாகாண சபை

# பெறுகை அழைப்பு

சப்ரகமுவ மாகாண சபையின் சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் மூலம் தேசிய போட்டி கேள்விகோரல் (NCB) இன் கீழ் கீழ்க்காணும் பொருட்கள்/உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி கோரல் இலக்கம் | விபரம் | கேள்விப் பத்திர கட்டணம் (ரு) | கேள்விப் பிணை வைப்பு ரு. |
|---|---|---|---|
| SRIM25/ 2023/ DIND/01 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டிற்கு நூல் வழங்குதல். | 2000.00 | 150,000.00 |
| | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டிற்கு "டை" இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் | 1,000.00 | 50,000.00 |

2023.01.23 முதல் 2023.02.14 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப 2.30 வரை, அமைச்சு அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை பரீட்சிக்க முடிவதுடன் கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு கேள்விப்பத்திரங்களை கோருவதற்காக வழங்குநரின் எழுத்துமூல வேண்டுதலுடன் மேற்கண்டவாறு கேள்விப் பத்திரக் கட்டணத்தை இலங்கை வங்கியின் இரத்தினபுரி கிளையின் கணக்கு இல 0001016456 இன் கீழ் செயலாளர், சமூகநலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் பெயரில் கணக்கில் இட்டு பற்றுச்சீட்டை சமர்ப்பித்து இவ் அமைச்சு அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த கேள்விப் பத்திரத்துடன் மேலே தரப்பட்டுள்ள பெறுமதி உடையவாறு செயலாளர், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி பெயரில் கோரும் போது காசாக்கக்கூடியவாறு அரச அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும, நிபந்தனையற்ற (UnConditional,on demand) கேள்விப் பிணையொன்றை அல்லது குறித்த தொகையை இலங்கை வங்கியின் இரத்தினபுரி கிளையின் கணக்கு இலக்கம் 0001016456 இன் கீழ் செயலாளர், சமூக நலன்புரி. நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் பெயரில் கணக்கில் இட்டு அதற்காக அமைச்சிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணையின் செல்லுபடியாகும் காலம் 2023 மே 15 வரையானதாக இருத்தல் வேண்டும்.

குறித்த சகல நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் கேள்விப்பத்திரத்துடன் வழங்கப்படும்.

சகல கேள்விதாரர்களும் கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2023.02.15ம் திகதி மு.ப.11.00 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தபாலில் ஏற்படும் தாமதங்கள் பற்றி பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

கேள்விப்பத்திரங்களை திறத்தல் 2023.02.15 ம் திகதி கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்து மூல அனுமதியளிக்கப்பட்ட ஒருவருக்கு சமுகமளிக்கலாம். குறித்த தினம் அரச விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப்படின் அடுத்துவரும் அலுவலக நாள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் தினமாக கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரத்தை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல் அல்லது அதுபற்றி தீர்மானம் எடுக்கும் உரிமை தலைவர், பெறுகைக்குழுவிற்கு உரியது.

**ஏ.எஸ்.ஜே.கொடல்லவத்த**
**தலைவர், பெறுகைக்குழு,**
**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு,**
**கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி.**
**தொலைபேசி - 045-2222145, 045-2228137.**

# விலைமனுக்கோரல்

## தேர்தல் ஆணைக்குழு

### உள்ளூர் அதிகார சபை தேர்தல் - 2023 - உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கான பெறுகை

### S/05/01/05 (LAE-2023)

தேர்தல் ஆணைக்குழு சார்பாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் கீழ் குறிப்பிடப்படும் உருப்படிகளுக்காக தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து (Bidders) முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பணி ஒப்பந்த இல | பெறுகையின் பெயர் மற்றும் விபரம் | ஏலப் பாதுகாப்பின் பெறுமதி (இலங்கை ரூபா) | விலை மனுக்களைத் திறத்தல் |
|---|---|---|---|
| S/05/01/05 (LAE- 2023) | உள்ளூர் அதிகார சபை தேர்தல் 2023 உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்கான பெறுகை | அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.1,300,000.00 பெறுமதிமிக்க ஏலப் பாதுகாப்பு பிணை அல்லது ஆணைக்குழுவுக்கு பணமாக வைப்புச் செய்யப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும் - ரூ. 6,50,000.00 பற்றுச்சீட்டு | 2023 ஜனவரி 31ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு |

01. விலைமனுக்கோரல், தேசிய போட்டி அடிப்படையிலான விலைமனுக்கோரல் முறை (NCB) ஊடாக மேற்கொள்ளப்படும்.
02. இது சம்பந்தமாக ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களுக்கு (Bidders) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளச் செலுத்தப்படாத ரூ.1000.00 தினை தேர்தல் ஆணைக்குழுவின் சிறாப்பருக்கு (Shroff) பணமாகச் செலுத்தி குறித்த விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியை 2023 ஜனவரி மாதம் 30 ஆம் திகதி வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலப் பகுதியினுள் பெற்றுக்கொள்ள முடியும்.
03. பூரணப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களை கீழுள்ள முகவரிக்கு 2023 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி பி.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுத் தலைமை அலுவலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கணக்காளரின் (பெறுகைகள்) உத்தியோகபூர்வ அறைக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி அழைப்புப் பெட்டியில் (Tender Box) இடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2023 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதியொருவருக்கு பங்கேற்க முடியும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கமைய விலைமனுதாரர்கள் ஏலப் பாதுகாப்பு அல்லது வைப்புத் தொகையாக செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. மேலே குறிப்பிடப்பட்ட முகவரி,

**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல் ஆணைக்குழு,**
**சரண மாவத்தை, ராஜகிரிய.**
**தொ.பே. 0112-868441**
**2023.01.18**

## வ/ப சுகாதார திணைக்களத்தின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சங்கம் 37/36 பன்சல வீதி, கொழும்பு-10

**சகல அங்கத்தவர்களினதும் தெரிந்து கொள்வதற்காக**

### 58ஆவது வருடாந்த மகா சபைக் கூட்டம் – 2023.01.28 அபேட்சகர்களின் இலக்கங்களை பகிரங்கப்படுத்துதல்

கண்டி மத்திய மாகாண இந்து கலாசார நிலைய மண்டபத்தில் 2023.01.28ம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 58ஆவது வருடாந்த மகாசபைக் கூட்டத்தின் வாக்கெடுப்பிற்காக விநியோகிக்கப்படும் அறிக்கைப் புத்தகத்தின் பக்க இல. 51 மற்றும் 52 மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட இலக்கத்துடனான அபேட்சகர் பெயர் பட்டியலுக்கு மேலதிகமாக கீழே பெயர் குறிப்பிடப்படும் அபேட்சகர்களும் போட்டியிடுவதாக அறிவித்துக் கொள்கிறோம்.

**உப தலைவர் பதவி 01**

| தொடர் இல. | அபேட்சகரின் பெயர் | அங்கத்துவ இலக்கம் | சேவை நிலையம் | போட்டி இலக்கம் |
|---|---|---|---|---|
| 03 | திரு. பி.ஏ. பிரியந்த கித்சிரிபெரேரா | 28724 | மாவட்ட வைத்திய சாலை - கந்தான | 03 |

உப தலைவர் பதவிக்காக 01 முதல் 02 வரையான போட்டி இலக்கங்களுக்கு மேலதிகமாக இல 03 இன் கீழ் மேற்படி பெயர் குறிப்பிடும் அபேட்சகரும் போட்டியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**செயற்குழு அங்கத்தவர் (பணிப்பாளர் சபை அங்கத்தவர்) 22 பதவிகள்**

| தொடர் இல. | அபேட்சகரின் பெயர் | அங்கத்துவ இல. | சேவை நிலையம் | போட்டி இலக்கம் |
|---|---|---|---|---|
| 58 | திருமதி ஆர் எம் விஜிதா ரஞ்சித் | 19111 | ஆதார வைத்தியசாலை தியத்தலாவ | 58 |
| 59 | திரு. ஆர்.எம். ஜயரத்ன பண்டா | 56660 | மாவட்ட பொது வைத்தியசாலை நாவலப் பிட்டி | 59 |

செயற்குழு அங்கத்தவர் (பணிப்பாளர் சபை அங்கத்தவர்) பதவிக்காக இல. 01 முதல் 57 வரையான போட்டி இலக்கங்களுக்கு மேலதிகமாக இல 58 மற்றும் 59 இன் கீழ் மேலே பெயர் குறிப்பிடப்படும் அபேட்சகர்களும் போட்டியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**டபிள்யூ.ஏ.டி. விமலரத்ன**
**செயலாளர்**
**வ/ப சுகாதார திணைக்களத்தன் கூட்டுறவு சிக்கன கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய சங்கம்**
**37/36, பன்சல வீதி,**
**கொழும்பு-10.**
**2023.01.17ம் திகதி**

### மாவட்ட செயலகம் - அநுராதபுரம்

# நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் – 2023

அநுராதபுர மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள கீழ் குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்களில் 22 உடன் சம்பந்தப்பட்ட 2023 ஆம் ஆண்டிற்காக நிர்மாண ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கு அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவிய
02. ஹொரவ்வபொத்-தான
03. ரம்பெவ
04. இப்பலோகம
05. பலாகல
06. கஹட்ககஸ்திகிலிய
07. மிஹிந்தலை
08. கல்நேவ
09. நாச்சாதூவ
10. நொச்சியாகம
11. நொதூப
12. கெபித்திகொல்லாவ
13. மெதவச்சிய
14. பலுகஸ்வெவ
15. திரப்பனே
16. கெகிராவ
17. கலென்பிந்துனுவெவ
18. தம்புத்தேகம
19. தலாவ
20. மஹவிலச்சிய
21. ராஜாங்கனய
22. ம.நூ.ப

02. பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை மாவட்ட செயலகத்தில் அல்லது மேற்படி பிரதேச செயலகங்களின் காசாளரிடம் ரூ.1000.00 தொகையை (இத்தொகை மீளளிக்கப்படமாட்டாது) செலுத்தி வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை விநியோகித்தல் 2023.01.20 முதல் 2023.02.30 வரை நடைபெறும்.
03. விண்ணப்பதாரிகளுக்கு மாவட்ட செயலகம் மற்றும் சகல பிரதேச செயலகங்கள் சார்பாக பதிவுசெய்ய முடிவதுடன் தேவைப்படின் தேர்ந்தெடுக்கப்படும் சில அலுவலகங்களுக்காகவும் பதிவுசெய்யலாம்.
04. பதிவிற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு கட்டாயமாகும்.
05. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2023.02.17ம் திகதி ஆவதுடன் சகல விண்ணப்பங்களையும் பதிவுத்தபாலில் மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் மாவட்ட செயலகத்தின் கணக்கு இலக்கத்திற்கு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். குறித்த தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
06. விண்ணப்பங்களை உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் - 2023" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
07. மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் தொலைபேசி இலக்கம் 071-8145148ஐ அழைத்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜே.எச்.ஜே.கே.ஜயசுந்தர**
**அரச அதிபர்/மாவட்ட செயலாளர்**
**அநுராதபுரம்**

SUNDAY OBSERVER adz | தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரு. 500/- (Except Thinakaran Varamanjari) | ரு. 700/- (Except Thinakaran Varamanjari) | ரு. 950/- |

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

KESBEWA 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

KIRULAPONE 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

KOTTAWA 011 2842569, 071 2510950
Srisara Groceries, No. 101/2,

MAHARAGAMA 077 7686683, 011 2896373
Supermarket Complex, 88, High Level Rd,

MALABE 011 2791782
Kumudu Stores,

MEEGODA 011 2858290, 011 2831120
Nandana Stores, No. 635/3, Padukka Rd.,

MORATUWA 011 2647410, 077 5486719
Wijesekara Stores,

MORATUWA 0112 657326, 0114 212989
S.J.M. Fareed, 222, Egoda Uyana, Modera

MT. LAVINIA 011 2724820
Dayal Stores, Galle Rd,

NUGEGODA 077 3458785, 011 2811833
Ekwaththa Rd, Mirihana,

NUGEGODA 011 2846100, 077 1652800
No. 4, High Level Plaza, Delkanda,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 39 அ (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை

2013 ஆம் ஆண்டின் மே மாதம் 28 ஆந் திகதிய 1812/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 167 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப் பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம்சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான் குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் I அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 533F - பொரலெஸ்கமுவ மேற்கு C கிராம அலுவலர் பிரிவில், பொரலெஸ்கமுவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட CO/DSO/2019/ 685 ஆம் இலக்க, 2020.01.15 ஆந் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்ட பின்வரும் பெயர் மற்றும் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின்
எல்லைகள் :

1. துண்டு "B" - கதுருகொட்டுவ கும்புர - விஸ்தீரணம் : 0.0558 ஹெக்டயார்
   வடக்கு : துண்டு A மற்றும் கொ. 9464 ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 181; கிழக்கு : கொ. 9464 ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 181 மற்றும் துண்டு A; தெற்கு: கொ. 9464 ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 181 மற்றும் துண்டு A; மேற்கு: துண்டு A

**ஹரின் பெர்னாண்டோ,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.**

**எனது இல.:4-3/10/2012/LRB/94.**
**காணி எடுத்தற் உத்தியோகத்தரின் இல.: WGSWD&EIP/ACQ/KB/09.**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**''மிஹிகத மெதுர", 1200/6, ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,**
**2022, செப்டெம்பர் 20.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/PT/09/005 | Luggage Scanners | 300,000.00 | 3500.00 | 02.02.2023 13.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஜனவரி 23ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண் : 2381652, 2470443**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மாகாண கல்வித் திணைக்களம்

### வடமேல் மாகாணம்

## 2022ஆம் வருடத்திற்கான 6 முதல் 9ஆம் வகுப்புகளுக்கான மூன்றாம் தவணை வினாத்தாள்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கான பெறுகை

### NWP/EDU/PRO.ACC/07/3-02/2023

2022ஆம் வருடத்திற்கான 6 முதல் 9ஆம் வகுப்புகளுக்கான மூன்றாம் தவணை பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கான பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வடமேல் மாகாண, மாகாண கல்விப் பணிப்பாளரின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றார்.

2) கீழேயுள்ள அட்டவணையில் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| தொகுதி இல | தரம் | ஒவ்வொரு மொழி மூலத்திற்குமான வினாத்தாள்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) | | | விலைமனுப் பிணையின் பெறுமதி (இலங்கை ரூபாவில்) | விநியோகிக்க வேண்டிய திகதி (பிரதேச கல்வி அலுவலகங்களுக்கு) |
|---|---|---|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | | |
| 1. | 6 | 36326 | 6603 | 3564 | 300,000.00 | 05-03-2023 |
| | 7 | 35183 | 6398 | 3030 | | |
| | 8 | 35352 | 5195 | 2840 | | |
| | 9 | 36961 | 5932 | 2769 | | |

ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள அனைத்து மொழி மூலங்கள் மற்றும் தரங்களுக்கும் விலைமனுக்கூறுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

விநியோக அமைவிடம்: வடமேல் மாகாணத்திலுள்ள முப்பத்தொரு பிரதேச கல்வி அலுவலகங்களுக்கும் வழங்கல் மற்றும் விநியோகம் மேற்கொள்ளப்படல் வேண்டும். (குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்கள்)

3) விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறை மூலம் நடாத்தப்படும்.

4) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி/தொலைநகல் 037-2222422) மற்றும் மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை)

5) தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு :

i. கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் சராசரி புரள்வை பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதில் பேணியிருத்தல் வேண்டும். (2020-2022)

| தொகுதி இலக்கம் | புரள்வு |
|---|---|
| 1. | 15.5 மில்லியன் ரூபா |

ii. பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதில் ஆகக் குறைந்தது 3 வருட கடந்தகால அனுபவம்.

iii. அச்சிடுவதில் ஆகக் குறைந்தது 5 வருட கடந்தகால அனுபவம்.

iv. விலைமனுதாரர் தொழில்நுட்ப தகைமை மற்றும் தேர்ச்சி பெற்று பணியாட்கலுள்ள அச்சகத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

6) மீளளிக்கப்படாத கட்டணமாக ஐயாயிரம் ரூபாவை (5000.00 ரூபா) (வமேமா) மாகாண கல்விப் பணிப்பாளரிடம் செலுத்திய பின்னர், பின்வரும் 8ஆம் பந்தியிலுள்ள முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து 2023 ஜனவரி 20ஆம் திகதி முதல் 2023 பெப்ரவரி 09ஆம் திகதி வரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப்பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

பின்வரும் 7ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள மாகாண கல்வித் திணைக்களத்தில் 2023 பெப்ரவரி 03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

7) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2022ஆம் வருடத்திற்கான 6 - 9ஆம் வகுப்புகளுக்கான மூன்றாம் தவணை பரீட்சை வினாத்தாள்களை அச்சிட்டு மற்றும் ஒப்படைத்தலுக்கான விலைமனு" எனக் குறிப்பிட்டு 2023 பெப்ரவரி 10ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் "கேள்விப் பெட்டியில்" உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 பெப்ரவரி 10ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு குருநாகல், கண்டி வீதி, வடமேல் மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடியதும் விரைவாகவே திறக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து விலைமனுக்களுடனும் "விலைமனுப்பிணையொன்று" இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த பெறுகை தொடர்பான எல்லா மாற்றங்களும் www.nwpedu.lk எனும் எமது இணையதளத்தில் குறிப்பிடப்படும்.

8) மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு :

**R.A.S.P. ரத்னசேக்கர**
**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம் (வமேமா),**
**கண்டி வீதி,**
**குருநாகல்.**

**தொலைபேசி : 037-2222422/037-2220221**
**தொலைநகல் இலக்கம் : 037-2222422**
**இணையதள முகவரி : www.nwpedu.lk**
**மின்னஞ்சல் : provincialeducationnwp@yahoo.com**
**திகதி: 20 ஜனவரி 2023**

## கொழும்பு மாநகர சபை

## கேள்வி/ விலைமனுக்களுக்கான அழைத்தல்

பின்வரும் சேவைகள்/ பண்டங்களை வழங்குவதற்கு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்கள்/ கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

| தொடர் இலக்கம் | கேள்வி இலக்கம் | விளக்கம் | கேள்விதாரர்கள் விலைமனுதாரர்களின் தகுதி தன்மை | மீளளிக்கப்படாத கேள்வி/ விலைமனுக் கோரல் ஆவணக் கட்டணம் | விலைமனு உத்தரவாதம் பிணையின் பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | CPD16/ 1280/2022 | மடிக்கணனிகள், அச்சுப் பொறிகள் UPS, போட்டோ கொப்பி இயந்திரங்கள் விரல் அடையாளமிடும் இயந்திரங்கள் வளிச் சீராக்கிகளுடன் சுடு நீர் கொதிகலனகள் வளிச் சீராக்கி Synchronous மின் பிறப்பாக்கி தொலைநகல் இயந்திரங்கள் ஆகியவற்றின் வழங்களிற்கான கேள்வி | வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்கள் மேற்படி துறையில் அனுபவம் பெற்றுள்ளதுடன் வியாபாரப்பதிவையும், கொண்டிருத்தல் வேண்டும் | 2,300.00 | ரூபா 20,000.00 இற்கான நிபந்தனைகள் அந்த உடன் மாற்றக் கூடிய உத்தரவாதம் |
| 2 | CPD14/ 3118/2023 | (De - Canned/ Converted) - 188,202kg 60/70 தார் பீப்பாய்களை வழங்கல் ஒப்படைத்தல் மற்றும் இறக்குதல் | | 5,750.00 | ரூபா 500,000.00 இற்கான நிபந்தனைகள் அந்த உடன் மாற்றக் கூடிய பிணையம் |

கேள்வி ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி/ இரண்டு முறைமைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறைமை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.colombo.mc.gov.lk)

i. பின்வரும் முறைமையின் பிரகாரம் இதற்கான மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கேள்வி கட்டணத்தைச் செலுத்தலாம்.

(அ) மக்கள் வங்கியின் நகர மண்டபக் கிளையின் கணக்கு இலக்கம் **167-1-001-6-3169425** இற்கு எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் வைப்புச் செய்யலாம்.

(ஆ) வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பின்வரும் கொழும்பு மாநகர சபையின் நகர எல்லையினுள் அமைந்துள்ள கொடுப்பனவு கருமபீடங்களில்

➢ **மாவட்ட அலுவலகம் 04**
**இல. 147, ஹைலெவல் வீதி, கிருளபொன,**
**கொழும்பு-06.**

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த,**
**கொழும்பு-10.**

ii. பற்றுச்சீட்டின்/ பணத்துண்டின் மூலப்பிரதியானது, கட்டாயமாக விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

**முறைமை 02**

**நகர மண்டப வளாகத்தில் பெற்றுக்கொள்ளல்.**

a. நகர மண்டப வளாகத்திலுள்ள சிறாப்பர் கருமபீடங்களில் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தைச் செலுத்தி 2023.02.08 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை, வார வேலை நாட்களில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, கொழும்பு 07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மத்திய பெறுகைப் பிரிவில் இதற்கான கேள்வி/ விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

B. 2023 பெப்ரவரி 08 அன்று பி.ப. 3.00 மணிக்குப் பின்னர் கேள்வி/ விலைமனு ஆவணங்களை இணையதளத்தில் பெற்றுக்கொள்ள இயலாது/ வழங்கப்படவும் மாட்டாது.

C. நிபந்தனைகளற்ற விலைமனுப்பிணையத்திற்காகி பெறுமதியானது கேள்விகள் மூடப்படும் தினத்திலிருந்து 150 நாட்களிற்கு செல்லுபடியாகுதல் வேண்டும். முன் வைப்பானது 2023.06.08 வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.

D. உரியவாறு பூரணப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விகள்/ விலைமனு ஆவணங்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளுடன் 2023 பெப்ரவரி 09 அன்று மு.ப. 10.00 அன்று அல்லது அதற்கு முன்னர், கொழும்பு 07, நகர மண்டபம், மாநகர செயலாளர் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்க்கப்படல் வேண்டும்.

E. 2023 பெப்ரவரி 09 அன்று மு.ப. 10.00 இற்கு கேள்விகள் மூடப்படுவதுடன், அந் நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், அதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும், இத்தினமானது, அரச விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அதற்கடுத்த வேலை நாளில் மு.ப. 10.00 இற்கு கேள்விகள் மூடப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அனுமதி பெற்றுள்ள பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம். தெளிவுறுத்தல்களை, பிரதான கணக்காளர் (பெறுகை) இடம் தொ,பே. 0112-686389, 0112-686369, 0112-662329 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

F. கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்படின், விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கு அமைவாக, பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்த பின்னர் பிசிஏ - 3 ஐ சமர்ப்பித்தல் வேண்டும்.

**J.M. Bhadranie Jayawardhana**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை**

# ஓய்வூதியத் திணைக்களம்

## சுத்திகரிப்புச் சேவையை வழங்கல் – 2023/ 2025
## கேள்வி விலைக்கோரல் அறிவித்தல்

2023/2025 ஆண்டுகளில் ஓய்வூதியத் திணைக்களத்தில் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்யப்பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியத் திணைக்களத்தின் சிறு பெறுகைக்குழுத் தலைவரினால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | விபரம் | மேற்பார்வையாளர்கள் | ஊழியர் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | கேள்விப் பிணையம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | ஓய்வூதியத் திணைக்களப் பிரதான அலுவலகம் மாளிகாவத்த, கொழும்பு-10 | 01 | ஆண்கள் 05<br>பெண்கள் 15 | 2,500/- | 50,000/- |
| 02 | ஓய்வூதியர் விடுமுறை இல்லம், களனி, வெதமுல்ல. | 01 | ஆண்கள் 03<br>பெண்கள் 05 | | |
| 03 | ரம்பொட விடுமுறை இல்லம் - ரம்பொட | | ஆண்கள் 01 | | |

1. பின்வரும் அடிப்படைத் தகைமைகளைப் பூரணப்படுத்தும் நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.
   I. இலங்கை, வியாபாரப் பெயர்ப் பதிவு கட்டளைச் சட்டம் மற்றும் கம்பனிகள் சட்டம் இன் கீழ் சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றாக 03 வருடங்களிற்கு முன்னர் பதிவு செய்யப்பெற்றுள்ள நிறுவனமொன்றாக இருத்தல் வேண்டும்.
   II. சுத்திகரிப்பு சேவை வழங்களில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
   III. முன்னைய மதிப்பீட்டு ஆண்டில், சுத்திகரிப்பு நிறுவனத்தின் பெயரில் பெசேவ/ வருமானவரி செலுத்தப்பட்டுள்ள தென்பதனை ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். (வ/ப. கம்பனியொன்றெனின் கம்பனியின் பெயரிலும், தனிநபர்/ கூட்டு வியாபார நிறுவனமானது அனைத்து பங்காளாளர்களினதும் பெயர்களிலும், முன்னைய ஆண்டிற்கான வருமானவரி, பெசேவ செலுத்தியவறான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். (2020/ 2021 ஆண்டிற்காக மாத்திரம்)
   IV. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் தினத்திலிருந்து 120 நாட்களிற்கு செல்லுபடியாகும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 50,000/- இற்கான பெறுமானமுள்ள விலைமனுப் பிணையமொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. 2023.01.20 முதல் 2023.02.10 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் இதற்காக மீளளிக்கப்படாத ரூபா 2,500.00 இற்கான தொகையை இத்திணைக்களத்தின் சிறாப்பருக்குக் காசாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் கீழ்க்காணப்படும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   1. வியாபாரப் பதிவுச் சான்றிதழ் (சான்று பகரப்பட்ட பிரதிகள்)
   2. பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் (பொது 170 மாதிரிப் படிவம்) பெறுமானச் சான்றிதழ் (மூலப் பிரதி)
   3. 03 வருடகால அனுபவச் சான்றிதழ் (உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்)
3. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2023.02.16 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் தலைவர், திணைக்களச் சிறு பெறுகைக் குழு, ஓய்வூதியத் திணைக்களம், மாளிகாவத்த, கொழும்பு-10 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் அல்லது திணைக்களத்தின் தரைமாடியில் வைக்கப்பட்டள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளல் வேண்டும். கேள்விகளை உள்ளடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் ‘2023/2025 ஆண்டுகளில் சுத்திகரிப்புசேவைகளை வழங்குவதற்கான கேள்வி’ எனக்குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப் பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பிக்கும் கேள்விதாரர்கள் சமுகமளித்திருக்க வேண்டிய விலைமனு முன்னோடி கூட்டம் மொன்று 2023.02.08 அன்று மு.ப. 11.00 இற்கு ஓய்வூதிய திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
5. 2023.02.16 அன்று பி.ப. 2.00 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
6. மேலதிக விபரங்களை தொ.பே.இல. 011-2324375 மூலம் கணக்காளர் (வழங்கல்) ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளாம்.
7. கேள்வியை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை திணைக்களச் சிறு பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்**
**திணைக்களச் சிறு பெறுகைக் குழு,**
**ஓய்வூதியத் திணைக்களம், மாளிகாவத்த,**
**கொழும்பு -10**

# பெறுகை அறிவித்தல்

## திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு

## கல்வி அமைச்சு

கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை 354/2ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கல்வி அமைச்சிற்குரித்தான திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவின் பின்வரும் பெறுகையை நடாத்திக்கொண்டு செல்வதற்காக பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | பெறுகை | இடம் | பெறுகைக் காலம் | விலைமனுக் கட்டணம் (ரூபா) | விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | பாதுகாப்புச் சேவையை நடாத்திச் செல்லல்<br>MSVRI/LOG/PRO/ 01/04 | நிபுணதா பியச - நாராஹென்பிட்டி | 2023-03-01 - 2024-02-28 வரையான ஒரு வருட காலம் | 1,000.00 | 2023-02-13ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் | 50,000.00 |
| | | இலங்கை கோள்மண்டலம் கொழும்பு 07 | | 1,000.00 | | |
| 02 | துப்புரவேற்பாட்டுச் சேவையை நடாத்திச் செல்லல்<br>MSVRI/LOG/PRO/ 01/04 | 1 நிபுணதா பியச - நாராஹென்பிட்டி<br>2. செத்சிறிபாய, 3ஆம் தளம், பத்தரமுல்ல | 2023-03-01 - 2024-02-28 வரையான ஒரு வருட காலம் | 1,000.00 | 2023-02-13ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் | 50,000.00 |
| | | இலங்கை கோள்மண்டலம் கொழும்பு 07 | | 1,000.00 | | |

(01) மேற்படி ஒவ்வொரு பெறுகைக்காகவுமான விலைமனு ஆவணங்களை 2023-01-24ஆம் திகதி முதல் 2023-02-10ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை 354/2ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக மேற்கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை அமைச்சின் சிறாப்பருக்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இந்த அமைச்சின் பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02) முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2023-02-13ஆம் திகதி அல்லது அதற்கு முன் பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு, கல்வி அமைச்சு, ‘‘நிபுணதா பியச’’, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் இந்த அமைச்சின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

03) நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

04) விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதுடன் இதன் பொருட்டு நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

05) விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் பெறுகையின் பாதுகாப்புத் தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு 50,000.00 ரூபா பெறுமதிக்குச் சமமான வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 180 நாட்கள் வரையில் (2023-08-12) செல்லுபடியாகும் வகையில் செயலாளர், கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு பெயரில் பெற்ற விலைமனுப் பிணை முறி அல்லது 25,000.00 ரூபா ரொக்கப் பணத்தை அமைச்சின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06) ஒவ்வொரு பெறுகையையும் நடாத்திக்கொண்டு செல்லும் ஆவணங்களில் அடங்கியுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் அந்தச் சேவைகளை நடாத்திச் செல்லுதல் வேண்டும் என்பதுடன் ஒப்பந்ததாரர் கல்வி அமைச்சின் செயலாளருடன் ஒப்பந்தமொன்றுக்கு உடன்படல் வேண்டும்.

07) இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவையாயின் 011-2136550 - பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) அல்லது 011 2136551 எனும் தொலைபேசி இலக்கத்தில் உதவிச் செயலாளர் (உட்கட்டமைப்பு வசதிகள்) அல்லது 011 2136554 எனும் தொலைபேசி இலக்கத்தில் பணிப்பாளரைத் (வேலை வழங்கல் மற்றும் பெறுகைகள்) தொடர்பு கொண்டு அல்லது 011-2136555 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெறுகைப் பிரிவைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

08) இந்த பெறுகைகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2023-02-01ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முதலாம் மாடி அமைச்சின் செயலாளர் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு,**
**கல்வி அமைச்சு, ‘‘நிபுணதா பியச’’,**
**இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹென்பிட்டி, கொழும்பு-05.**

2023-01-20

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6304(EL) | Spares for Speed Measuring Systems of Wartsila W20 Series Engines | 10,000.00 | 1,000.00 | 16-02-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6377(EL) | 02 Nos. of Terasaki 400A MCCB with Accessories | 20,000.00 | 1,000.00 | 16-02-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6404(EL) | 55M of Trailing Cable for Alimak Elevators of JCT Stage III & IV | 30,000.00 | 1,000.00 | 16-02-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/13/34 | Asphalt Concrete (Wearing Coarse ) – Ton 100 | 30,000.00 | 1,000.00 | 09-02-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/22/PT/08/029 | 20 Nos. 8” X 4” X 6 MM Steel Checker Plate | 15,000.00 | 1,000.00 | 09-02-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/21/PT/07/057 | UD Nissan Engine Fitted with UD Nissan Prime Movers | 30,000.00 | 1,000.00 | 09-02-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஜனவரி 20ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண் : 2381652, 2470443**

# லங்கா சோல்ட் லிமிட்டெட்

## பதவி வெற்றிடங்கள்

SLS & ISO 9001:22000 தரஅங்கீகாரத்துடனான நாட்டின் பாரிய உப்பு உற்பத்தியாளரான லங்கா சோல்ட் லிமிட்டெட் ஆனது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக பொருத்தமான தகைமையையுடைய நபர்களின் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு ஆவலாகவுள்ளது.

உகந்த அபேட்சகர்கள் புகழ் வாய்ந்த நிறுவனங்களில் உரித்தான துறைகளில் முன்னைய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அவர் (ஆண்/பெண்) விழிப்புநிலை, செயற்துணிவு மற்றும் நுண்புத்தியையும் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.

### கொள்வனவு முகாமையாளர் பதவி - எம்எம் 1-1

#### பணிக்குறிப்பு/பிரதான பொறுப்பு வாய்ந்த விடயப்பரப்புக்கள்

பிரிவின் நோக்கங்கள் மற்றும் மேற்பார்வை மற்றும் செயற்பாடுகளின் ஒருங்கிணைத்தல் மற்றும் பிரிவின் பணியாளர் குழாமின் மேற்பார்வை ஆகியவற்றை பூர்த்தி செய்வதற்காக கொள்வனவு தலைவராக கடமைகளை வினைத்திறமையுடன் செயலாற்றல் வேண்டும்.

நியமனத்தின் தன்மை: இது ஒரு ஒப்பந்த அடிப்படையிலான பதவி என்பதுடன் லங்கா சோல்ட் லிமிட்டெட்டிலுள்ள ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் இப்பதவிக்கு வழங்கப்படும்.

**தேவைப்படும் தகைமை மற்றும் அனுபவம்:**

**வெளியக அபேட்சகர்கள்:**

முகாமைத்துவம், B.com, BSc (public/Business) நிருவாகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது வழங்கல் மற்றும் கொள்வனவு முகாமைத்துவ தொழில்சார் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட எந்தவொரு தொழில் துறையிலும் சங்கிலி முகாமைத்துவம்/கொள்வனவு துறையில் மற்றும் நிகரான தகைமை.

அத்துடன்

கூட்டுத்தாபனமொன்றில், புகழ் வாய்ந்த சபையில் இந்த பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய வேலை அனுபவத்துடன் நிறைவேற்று மட்டத்தில் கொள்வனவு செய்தல்/பெறுகையில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

மேலே குறிப்பிட்டுள்ள நிகரான கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் பாடவிடயப் பரப்பில் கனிஷ்ட நினைவேற்று பதவியில் (ஜேஎம் 1-1) நிகரான துறையில் ஆகக் குறைந்தது 3 வருட திருப்திகரமான சேவையைக் கொண்டுள்ள ஊழியர்கள் அத்துடன் பலவின கற்கைநெறி அணிகளை தலைமைதாங்கவும் வழிநடத்துவதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆற்றல் மற்றும் கம்பனியின் இலட்சியங்களை அடைவதற்காக மனித மற்றும் ஏனைய வளங்களை முகாமைப்படுத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:** எம்எம் 1-1 53,175- 10x1375+ 15x1910 = 95,575 ரூபா.

வயதெல்லை: 30 வயதிற்கு குறைவாக இல்லாமலும் 55 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லையானது அரசாங்க, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் உள்ளக அபேட்சகர்களுக்கும் பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

விண்ணப்பத்தை முழுமையான சுயதரவு அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் 2023 பெப்ருவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தயவு செய்து குறிப்பிடவும்.

இந்த பதவியை நிரப்புவதற்கான அதிகாத்தை பணிப்பாளர் சபையானது கொண்டுள்ளது.

**தலைவர்,**
**லங்கை சோல்ட் லிமிட்டெட்,**
**மஹாலேவய,**
**ஹம்பந்தொட்ட.**

**தொலைபேசி: 047 - 2037305**

Daily News Classifieds, the Housewives' companion

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.